உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 07 சனிக்கிழமை (19.02.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :85

# பத்திரிகைகள், எதிர்க்கட்சிகள் மீது ஜனாதிபதி கோபாவேசப் பாய்ச்சல்!

## சிறிய தவறுகளையும் பிழைகளையும் கூட தூக்கிப்பிடிக்கின்றன எனவும் குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்ரவரி 19

**உள்ளூர்ப் பத்திரிகைகள் மீதும், எதிரணி அரசியல்வாதிகள் மீதும் பாய்ந்து வீழ்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**

**சிறிய தவறுகளையும், பிழைகளையும் தூக்கிப்பிடித்துக் கொண்டு அரசுக்கு எதிரான பிரசாரங்களில் ஈடுபடுகின்றன பத்திரிகைகள். என் மீது வேண்டுமென்றே அவை சேறு பூசுகின்றன. இதனால் உள்ளூர்ப் பத்திரிகைகளை வாசிப்பதையே நான் நிறுத்திவிட்டேன் என்கிறார் ஜனாதிபதி குமாரதுங்க.**

ஹனிதும வித்யராஜா தேசிய கல்லூரியில் கணனிப் பயிற்சி மத்திய நிலையத்தைத் திறந்து வைத்தபின் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசுகையிலேயே ஜனாதிபதி இப்படிக் கடுமையாகக் கருத்துத் தெரிவித்தார்.

எனது அரசு பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது. அவற்றில் சில தவறுகளும், பிழைகளும் ஏற்பட இடமுண்டு. ஆனால், எதிர்க்கட்சிகள் சிறிய ஓட்டைகளையும் தேடிப் பிடித்து மக்கள் மத்தியில் அவற்றைப் பெரிதாகப் பிரசாரப்படுத்துகின்றன. நன்மையான விடயங்களை மூடி மறைத்து விடுகின்றன. சில அரச அதிகாரிகளும் இதற்கு உடந்தையாகச் செயற்படுகின்றனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் மட்டு. விஜயம் ரத்து

மட்டக்களப்பு,பெப்.19

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் மட்டக்களப்புக்கான விஜயம் திடீரென ரத்துச் செய்யப்பட்டுள்ளது. நாளை அவர் அங்கு விஜயம் செய்வதாக இருந்தார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கான வீடமைப்புத் திட்டத்திற்கு அடிக்கல் நடுவதற்காக ஜனாதிபதி மட்டக்களப்புக்கு விஜயம் செய்யத் தீர்மானித்திருந்தார். எனினும், இறுதி நேரத்தில் அவரது பயணம் ரத்துச்செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

ஜனாதிபதியின் இந்த விஜயத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்திருந்தனர். அத்துடன், ஜனாதி

(16ஆம் பக்கம் பார்க்க)

## மணல் விநியோகிக்க யாழ்.செயலகம் ஏற்பாடு

கொக்குவில்,பெப்.19

சுனாமி அனர்த்த மீள்கட்டுமானப் பணிகளுக்கென வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம் மூலம் மணலை விநியோகிப்பதற்கு யாழ்.செயலகம் ஏற்பாடு செய்திருக்கின்றது.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக்குடியமர்த்தல் மற்றும் அவர்களின் அடிப்படை உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்துவ

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நேர்மையைப் பாராட்டுகிறார் அத்தியாவசியச் சேவையாளர் நாயகம்

கொழும்பு,பெப்.19

தமிழீழ விடுதலைப் புலிகளின் நேர்மையைப் பாராட்டுகிறார் அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகம் திலக் ரணவிராஜா.

'தென் பகுதியில் தவறான விவரங்களைக் கொடுத்து ஆழிப்பேரலையால் பாதிக்கப்படாதவர்களும் நிவாரணம் பெற முயற்சிக்கின்றனர். அதேவேளை, புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு அனுப்பிய நிவாரண முத்திரைகளில் மேலதிகமாக இருந்தவற்றை அவர்கள் கொழும்புக்குத் திருப்பி அனுப்பியுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்த நேர்மையையும், உண்மைத் தன்மையையும் நம்மவர்களும் கடைப்பிடிக்க வேண்டும்' - என்றார் அவர்.

நேற்றுக்காலை பொதுமக்கள் சட்டம், பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே திலக் ரணவிராஜா இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கூறியதாவது.

ஆரம்பத்தில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் சுமார் ஏழு லட்சம் பேர் எனக்கணக்கிடப்பட்டுள்ளது. பின்னர் அது ஒன்பது லட்சமாக

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் குழுவினர் நேற்று வன்னி திரும்பினர்

கிளிநொச்சி,பெப்.19

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் கிழக்குக்கான தமது விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று வன்னி திரும்பினர்.

புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்தவரான இ.கௌசல்யன் உட்பட 4 போராளிகளின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்வதற்காக தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் உயர் மட்டக் குழு மட்டக்களப்புக்குச் சென்றிருந்தது.

போராளிகளின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்ட இக்குழுவினர் சுமார் ஒரு வாரகாலம் கிழக்கில் தங்கியிருந்து அரசியல் நிலைமைகளை

(16ஆம் பக்கம் பார்க்க)

## விவசாய சம்மேளன ஒன்றியம் கண்காணிப்புக் குழுவிடம் மகஜர்

யாழ்ப்பாணம்,பெப்.19

விடுதலைப் புலிகளின் மட்டு.-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌஸ்சயன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் அ.சந்திரநேரு மற்றும் புலிகளின் இயக்க உறுப்பினர்கள் ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும் -

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்களுக்கு அரசின் ஒதுக்கீடுகள் வழங்கப்படாமைக்கு ஆட்சேபம் தெரிவித்தும் -

வலி.கிழக்கு விவசாய சம்மேளனங்களின் ஒன்றியத்தால் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## புகுமுக மாணவர்கள் தங்கியிருந்த வீட்டினுள் புகுந்த கும்பல் அடாவடி!

### பகிடிவதைக் கொடூரம் எனச் சந்தேகம்?

யாழ்ப்பாணம்,பெப்.19

திருநெல்வேலிப் பகுதியில் யாழ். பல்கலைக்கழக புகுமுக மாணவர்கள் தங்கியிருந்த வீடு ஒன்றினுள் சிரேஷ்ட மாணவர்கள் என்று கூறப்படும் சுமார் 15 பேர் நேற்று முன்னிரவு பிரவேசித்து அங்கு தங்கியிருந்த மாணவர்களுடன் விரும்பத்தகாத செயல்களில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகிறது.

அங்கு புகுமுக மாணவர்கள் மீது சிரேஷ்ட மாணவர்கள் சேற்றை வாரித் தெளித்து அசிங்கப்படுத்தியதுடன் அவர்களைத் தாக்கினர் என்றும் - சத்தம் கேட்டு அங்கு ஒன்று கூடிய அயலவர்கள் சிரேஷ்ட மாணவர்களின் செயலுக்கு தமது கடும் ஆட்சேபனையைத்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வெட்டுக்காயங்களுடன் கைதி யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதி!

### தற்கொலை முயற்சியா?

யாழ்ப்பாணம்,பெப்.19

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் கழுத்திலும், கையிலும் வெட்டுக்காயங்களுடன் நேற்றிரவு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த கந்தையா சிவபாதசுந்தரம் (வயது 40) என்பவரே இவ்வாறு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

திருட்டுச் சம்பவம் ஒன்றுக்காக இவர் கடந்த மூன்று வருடங்களாகச் சிறைவைக்கப்பட்டிருக்கிறார் என்றும் -

அதனால் விரக்தியடைந்து, முகச் சவரத்துக்கென வழங்கப்பட்ட பிளேட்டினால் தனது

(16ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க கப்பல் இன்று கொழும்புக்கு

கொழும்பு, பெப்.19

நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு அமெரிக்க கப்பல் ஒன்று இன்று இலங்கைக்கு வருகிறது.

'புளூரிச்' எனப் பெயரிடப்பட்டுள்ள இக்கப்பல் ஏழாவது படைத்தளபதியின் கீழுள்ள கப்பல் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

1971 ஆம் ஆண்டு முதல் பல்வேறுபட்ட

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அரசியல் பணிமனை மன்னார் நகரில் தாக்கப்பட்டது

தமது கடல் தொழிலுக்கு கடற்புலிகள் இடையூறு விளைவித்தனர் என்று தெரிவித்து ஆத்திரமுற்ற மன்னார் பள்ளிமுனைப் பகுதி மீனவர்கள் விடுதலைப் புலிகளின் மன்னார் அரசியல்துறைச் செயலகத்துக்குள் புகுந்து தாக்கி அங்கிருந்த பொருள்களை சேதப்படுத்தினர். எனினும், பின்னர் இக்குழப்பம் சுமுகமாகத் தீர்க்கப்பட்டது. நேற்று முற்பகல் 11 மணியளவில் இந்த அசம்பாவிதம் இடம்பெற்றது. இது குறித்துத் தெரியவருவதாவது:-

நேற்றுக் காலை இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பள்ளிமுனைக் கரையோரத்தில் இருந்து புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள விடத்தல்தீவுப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பஸ்ஸில் மோதுண்டு குடும்பஸ்தர் மரணம்!

யாழ்ப்பாணம்,பெப்.19

யாழ். செயலகத்திற்குச் சமீபமாக ஏ-9 வீதியில் வீதியைக்கடக்க முற்பட்ட ஒருவர் வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் பஸ்ஸில் மோதுண்டு பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்றுப்பிற்பகல் 3.45 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அரியாலை நொத்தாரிசு வீதியைச் சேர்ந்த கந்தையா சோதிலிங்கம் (வயது 57) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

(16ஆம் பக்கம் பார்க்க)


சுனாமி அழிவுகளைப் பார்வையிடுகையில்...



சுனாமி அனர்த்த செயலணிக்கு விஜயம்...


தலைவர் பிரபாவின் படம் அச்சிடப்பட்ட நாட்காட்டி வழங்கப்பட்டபோது...


தமிழீழத் தேசியத் தலைவரின் இல்லத்தில்...


கரும்புலி கப்டன் மில்லரின் உருவச் சிலையைப் பார்வையிடுகிறார்

யாழ். வருகைதந்துள்ள ஆசிய உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் உபதலைவரும் இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தின் முகாமைத்துவக் குழுத் தலைவருமான வி.மணிலால் பெர்னாண்டோ நேற்று வடமராட்சிப் பகுதிக்கு விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படங்கள்

படங்கள்: சி.சுந்தரலிங்கம், (கரவெட்டிச் செய்தியாளர்)

# விடுதலைப் புலிகள் அமைப்புக்கு கனடாவில் தடை விதிக்க முடியாது

## கனேடிய அரசு அறிவிப்பு; கருத்துக்கணிப்பிலும் புலிகளுக்கு ஆதரவு!

கிளிநொச்சி,பெப்.19

கனடாவில் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்யவேண்டும் என, கனடா நாட்டின் எதிர்க்கட்சியான கன்சவேட்டிவ் கட்சி விடுத்த வேண்டுகோளை கனேடிய அரசு நிராகரித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை கனடாவின் நாடாளுமன்றத்தில் கனேடிய வெளிவிவகார அமைச்சரின் தலைமையில் இடம்பெற்ற அமைச சக உபகுழுக் குழுநிலை விவாதத்தின்போது, கன்சவேட்டிவ் கட்சியின் உறுப்பினர் ஒருவர் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

கனேடிய வெளிவிவகார அமைச்சர் பியர் பெற்றிக்குறு அந்த வேண்டுகோளை நிராகரித்தார்.

அமைச்சர் பியர் பெற்றிக்குறு இது தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில் -

அமெரிக்கா, நோர்வே உட்படப் பல நாடுகள் விடுதலைப் புலிகளுக்கு எதிராக எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டாம் என்று எம்மைக் கேட்டுக்கொண்டுள்ளன.

விடுதலைப் புலிகளை உள்வாங்கி இயங்குவதன் மூலமே இலங்கையில் போர்நிறுத்தத்தை மேலும் வலுப்படுத்தித் தொடர்ந்து பேணமுடியும் என நாம் திடமாக நம்புகிறோம்.

இந்த நேரத்தில் நாம் அவர்களைத் தடைசெய்வதன் மூலம் எந்தவித பலனும் ஏற்படப்போவதில்லை என்றார்.

2001, 2003ஆம் ஆண்டுகளில் கனடாவில் அறிவிக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அங்கு தடைசெய்யப்பட்ட அமைப்புக்களின் பட்டியலில் விடுதலைப் புலிகள் அமைப்பு இடம்பெற்றிருக்கவில்லை.

இருப்பினும் கனடாவில் சில அமைப்புகள் புலிகளைத் தடைசெய்யவேண்டும் எனக்குரல் எழுப்பி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை விடுதலைப் புலிகளைக கனடாவில் தடைசெய்யும் விவகாரம் தொடர்பாக கனேடிய தொலைக்காட்சி நிறுவனமான 'ஓம்னி' தொலைபேசி மூலம் 24 மணித்தியாலங்ளாக ஆங்கிலத்தில் நடத்திய கருத்துக்கணிப்பில் 69 வீதமான கனேடிய மக்கள் புலிகளைத் தடைசெய்யவேண்டாம் எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பை கனடாவில் தடைசெய்யப்பட்ட அமைப்பாக அறிவிக்க வேண்டுமென்ற கோஷங்கள் சமீபநாள்களாக வெளிப்பட்ட நிலையிலேயே மக்களின் இந்தக் கருத்துக்கணிப்பும் வெளியாகியுள்ளது.(த-12)

# தென்கிழக்குப் பல்கலை வளாகத்தில் ஆர்ப்பாட்டம்

நிந்தவூர்,பெப்.19

முஸ்லிம் மக்களின் செயலணியின் அனுசரணையுடன் தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாக முன்றிலில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இடம்பெற்றது. பெருமளவான மாணவர்களும் பல்கலைக்கழக சமூகப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

கரையோரத்தில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் கட்டடங்கள் அமைப்பதற்குத் தடை விதிக்கும் அரசின் திட்டம் பிரதேச மக்களின் கருத்தறியப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவேண்டும். இதுவிடயத்தில் அரசு அவசரப்படக்கூடாது. மீள் கட்டுமானப் பணிகளில் முஸ்லிம்களுக்கு தனித்துவம் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது.

(த-க)

### திருமலையில் நேற்று

# முஸ்லிம் பிரமுகர்களுடன் தமிழ்ச்செல்வன் சந்திப்பு

மூதூர்,பெப்.19

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் புலிகளின் முக்கிய உறுப்பினர்களுக்கும் மூதூர் முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள், பள்ளிவாசல் சம்மேளனத் தலைவர்கள் மற்றும் உலமா சபைத் தலைவர்களுக்கும் இடையில் நேற்றுக் காலை சம்பூரில் சந்திப்பு இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவிற்கும், முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையில் திருகோணமலையில் இடம்பெற்ற முதல் சந்திப்பு இதுவே எனத் தெரிவிக்கப்பட்டது. அதனால் அது மிக முக்கியத்துவம் பெற்றிருந்தது என்றும், இரு தரப்புப் பிரதிநிதிகளும் தெரிவித்தனர். இரு தரப்பினருக்குமிடையிலான பிரச்சினைகள் குறித்து இச்சந்திப்பில் பரஸ்பரம் கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்பின் பின்னர் மூதூர், சேனையூர் மத்திய கல்லூரியில் தமிழ்ச்செல்வன் குழுவினர், தமிழ்மக்களின் முக்கியஸ்தர்களையும் கடற்றொழில் சம்மேளனத் தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தமிழ்ச்செல்வன், பாலகுமார் இருவரும் தற்போதைய அரசியல் நிலை பற்றி அங்கு உரை நிகழ்த்தினர்.

இதேவேளை - திருகோணமலை நகர மக்கள் தங்களின் பிரச்சினைகள் பற்றியும் அங்கு புலிகளின் பிரதிநிதிகளுக்கு விளக்கினர்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் பகுதியில் கடல் வலய எல்லை 200 மீற்றராகவும் சிங்கள மக்கள் வாழும் பகுதியில் அதனை 100 மீற்றராகவும் அரசு நிர்ணயித்துள்ளமையையும் பொது மக்கள் அங்கு எடுத்துக் கூறினர்.

இச்சந்திப்பில் திருகோணமலை மாவட்ட விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், கேணல் சொர்ணம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (த-க)

# சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கு சத்துணவு

## 'வெண்புறா' நிறுவனம் வழங்குகிறது!

கிளிநொச்சி, பெப்.19

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட முன்பள்ளி மாணவர்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிக்கும் திட்டம் ஒன்றினை வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில்நுட்ப நிறுவனம் ஆரம்பித்திருக்கிறது.

இதற்கமைய வல்வெட்டித்துறையில் இரண்டு முன்பள்ளிகளின் மாணவர்களுக்கு போசாக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகின்றது. வல்வெட்டித்துறையில் இயங்கும் விக்னேஸ்வரா பாலர் பாடசாலை மற்றும் கணபதி பாலர் பூங்கா ஆகியவற்றில் கல்விகற்கும்176 மாணவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் சத்துணவு வழங்கப்பட்டுவருகின்றது.

இந்தச் சத்துணவுத் திட்டத்துக்கென ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபாவை வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில்நுட்ப நிறுவனம் ஒதுக்கியிருந்தது என்று அந்த நிறுவனத்தின் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (த)

# அடையாள அட்டை நடமாடும் சேவை

கிளிநொச்சி அரச அதிபர் பணிமனையின் அனுசரணையுடன் தேசிய ஆள்பதிவுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஸ்கந்தபுரத்திலுள்ள கரைச்சிப் பிரதேச உப பணிமனையில் நடமாடும் சேவையை இன்றும் நாளையும் நடத்தவுள்ளனர்.

இச்சேவையின் மூலம் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அடையாள அட்டையை இலகுவில் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தேசிய அடையாள அட்டையைப் பெற விண்ணப்பிக்க விரும்புவர்களை பிறப்புச் சான்றிதழ், புகைப்படம் என்பனவற்றுடன் கரைச்சிப் பிரதேச உப பணிமனைக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ-12-381)




# தமிழர் வாழ்வியலோடு பொருந்தும் சீன பீஜிங் ஒபேரா நாடக ஆற்றுகை

## இன்றும் நாளையும் யாழ்.பல்கலைக்கழகத்தில்

நகரெல்லாம் பூச்சொரியும்
புது நாடெமதாகும்
நாடெங்கும் செங்கொடியே
நிமிந்து நின்றாடும்.
(செவ்விளக்கு - பாடல்)

தமிழ் மக்களின் ஆழப்புதைந்துள்ள அடிமன ஆசையும் அதுவே. சுதந்திர வேட்கையின் அடைவாக மானுடம் சுடரும் விடுதலை நோக்கிய ஆசையே எம் இதயத்தில் பொங்கிப் பிரவாகிக்கின்றது. அதுவே சுயத்தோடுவாழ்ந்து, சாதிக்க வழி விடுகின்றது. தமிழ் மனதில் பொங்கி எழும் இந்த ஆசையின் வெளிப்பாடே 'செவ்விளக்கு' ஆற்றுகை.

சீன மக்களை அடக்கியாண்ட ஜப்பானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக கிளர்ந்தெழும் சீன மக்களின் உணர்வை சீன அரங்கிற்கே தனித்துவமான இசையும் நடனமும் கலந்து அமைவது செவ்விளக்கு. இந்தச் சீன நாடகம் தமிழ்மக்களின் வாழ்வியலோடும் பொருந்திவருகின்றது. இராணுவ ஆக்கிரமிப்பிற்கு உட்பட்டு வாழும் தமிழ் மக்களின் உள்ள உணர்வுகளை இந்தச் சீன நாடகம் கிளறிவிடுகிறது. கிளர்ந்தெழும் இந்த உணர்வுகள் அரங்கில் வெளிவருகின்றன. அந்த அரங்கிற்கு வருமாறு உங்களை நாம் இருகரம் நீட்டி அழைக்கின்றோம்.

ஒடுக்கப்படும் ஓர் இனம் கிளர்ந்தெழும் போதே புரட்சி வெடிக்கும்; புதுநாடு பிறக்கும். இதற்காக சந்ததி சந்ததியாக போராடிப் போராடி முன் செல்வோம் என்பதையே 'செவ்விளக்கு' ஆற்றுகை வெளிப்படுத்துகிறது. நீங்கள் வருக.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட நுண்கலைத் துறையினரின் வழிப்படுத்தலில் நாடகமும் அரங்கியலும் மாணவர்களால் இந்த நாடகம் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் பல்கலைக்கழகத்தில் திறந்த வெளி அரங்கில் ஆற்றுகை செய்யப்படவுள்ளது.

ஆற்றுகையில் புதிய பரிமாணங்களை வெளிப்படுத்தும் பரீட்சிப்புக் களமாக நாடகமும் அரங்கியலும் மாணவர்கள் இந்த ஆற்றுகையை பிரமாண்டமான ஏற்பாடுகளுடன் செய்துள்ளனர்.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## இனவாத அதிகாரிக்கு இராணுவத்தில் சேவை நீடிப்பு?

இலங்கை இராணுவத்தின் நான்கு உயரதிகாரிகள் - மேஜர் ஜெனரல் தரத்தில் உள்ளவர்கள் - ஐந்து வாரகால இடைவெளியில் ஒன்றாக ஓய்வுபெற்றுச் செல்லும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

இந்த நால்வரில் இருவர் வடபகுதிப் படைகளின் தளபதிகளாக இருந்தவர்கள். மற்றைய இருவரும் வடக்கில் டிவிஷன் படையணிகளின் தளபதிகளாகப் பணிபுரிந்தவர்கள்.

வடபகுதித் தளபதிகளாக இருந்த இருவரில் ஒருவர் மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா, இப்போது இராணுவத் தளபதிக்கு அடுத்த நிலையில் - இராணுவத்தின் சிரேஷ்ட தலைமை அதிகாரியாக - இருக்கின்றார்.

மற்றவர் - மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால. இவர் தற்போது இராணுவத் தளபதிக்கு அடுத்து இரண்டாவது நிலையில் - இராணுவத்தின் சிரேஷ்ட பிரதித் தலைமை அதிகாரியாக - இருக்கின்றார்.

இவர்கள் இருவருமே யுத்தநிறுத்த காலத்தில் வடபகுதிக் கட்டளைத் தளபதிகளாக இருந்தவர்கள் தாம்.

ஆனால், இவர்கள் இருவர் தொடர்பாகவும் வடக்கு மக்களுக்கு மாறுபாடான அபிப்பிராயமும், அனுபவமும் உண்டு.

முன்னையவர் தீவிர இராணுவ வெறித்தனத்தை தமிழ் மக்கள் மீது திணிக்க முயன்றவர். இதனால் சிங்கள, பௌத்த பேரினவாதிகளால் அதிகம் விரும்பப்படுபவர்.

மற்றையவர் ஜெனரல் சுசில் சந்திரபால, யுத்தநிறுத்தத்தைப் பயன்படுத்தி, வடக்கில் அமைதி நிலையை மேம்படுத்த ஏதாவது செய்யலாமா என்று முயன்றவர். அதனால் தென்னிலங்கையில் பேரினவாதிகளின் ஆதரவை அதிகம் பெறத் தவறியவர்.

இராணுவத்திலும், ஏனைய படைகளிலும் உயர்நிலைப் பதவிகளில் இருப்போருக்குப் பதவி நீடிப்பு வழங்குவது தொடர்பாக ஆராய்ந்து முடிவெடுப்பதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஓர் உயர்மட்ட அதிகாரிகள் குழுவை நியமித்திருந்தார். அந்தக் குழு செய்த சிபாரிசுகளை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, ஆள்வேறுபாடின்றி அது இனிமேல் கடைப்பிடிக்கப்படும் என்றும் அறிவித்திருந்தார்.

அதன்படி, மேஜர் ஜெனரல் தரத்திலிருக்கும் அதிகாரிகளுக்கு இரண்டு தடவைகளே பதவி நீடிப்பு வழங்கப்படும். அதற்குப் பின்னர் எக்காரணம் கொண்டும் பதவி நீடிப்புத் தரப்படமாட்டாது என்பதே முடிவு.

இலங்கை இராணுவத்தில் 82 இற்கும் அதிகமான பிரிகேடியர்கள் இருக்கின்றார்கள். ஆனால், அதற்கு மேல் உள்ள மேஜர் ஜெனரல் தரத்தில் ஆக இருபத்திரண்டு பேருக்கே ஆளணியில் இடமுண்டு. இந்த இருபத்திரண்டு தர நிலையிலும் சேவை மூப்புடைய அதிகாரிகள் தொடர்ந்து பதவி நீடிப்புப் பெற்றுக்கொண்டு கதிரையைப் பிடித்து வைத்திருந்தால் அடுத்த நிலையில் - பிரிகேடியர் தரத்திலுள்ள - பல டசின் கணக்கான இளைய அதிகாரிகள் பதவியுயர்வு பெறாமலேயே ஓய்வுபெற்றுச் செல்லும் நிலை ஏற்படுகின்றது. இதற்காகவே இந்த விதிமுறை கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படுவதாகக் கூறப்படுகின்றது.

அதன்படி, இப்போது இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரியாக இருக்கும் பிரிகேடியர் சரத் பொன்சேகாவும் இந்த ஏப்ரல் முதலாம் திகதியுடன் வீட்டுக்குப் போக வேண்டியவர்தான். ஆனால், அது நடக்குமா? அல்லது இரண்டுக்கு மேலாக ஏற்கனவே மூன்றாவது பதவிநீடிப்பில் இருக்கும் அவருக்கு நான்காவது பதவிநீடிப்பு வழங்கப்படுமா? தற்போது பதவியில் இருக்கும் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொட ஓய்வுபெறும்வரை மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்குப் பதவிநீடிப்பு வழங்கி, அவரைத்தொடர்ந்து சேவையில் வைத்திருந்து, அடுத்த இராணுவத்தளபதி பதவியை அவருக்கு வழங்க வழிசெய்யப்படுமா? - என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சமாதான முயற்சிகள் குழம்பித் தடைப்பட்டதற்கான முக்கிய காரணகர்த்தாக்களுள் ஒருவர் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா.

தமிழர் தாயகப்பகுதியில் இயல்புநிலையை ஏற்படுத்தும் விடயத்தைக் கையாள்வதற்காக அமைதிப்பேச்சுகளின் போது மூன்று உபகுழுக்கள் அமைக்கப்பட்டன.

அவற்றுள் ஒன்று - மோதல் தணிப்பு மற்றும் இயல்புநிலைக்கான உபகுழு (Sub Committe for de - Escalation and Normalisation).

இந்த உபகுழு செயலிழந்து செத்துப் போவதற்கும், அதனால் அமைதி முயற்சிகளுக்கான உகந்த சூழல் குழம்பிப் போவதற்கும் காரணம் இவர்தான்.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் படையினர் ஆக்கிரமித்த பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான விடயங்களைக் கையாளும் பொறுப்பு இந்த உபகுழுவிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது.

உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர அனுமதிப்பதாயின் அதற்கு முன் புலிகளிடமிருந்து ஆயுதங்கள் களையப்படவேண்டும், அவர்கள் தம்மிடம் உள்ள நீண்ட தூரத் தாக்குதல் கலங்களைக் கைவிட வேண்டும் என்பது உட்படப் பல முன்நிபந்தனைகளை விதித்து, அமைதிப் பேச்சுகளை இராணுவ நடவடிக்கை மயமாக்கியவர் இவர். அதுமட்டுமல்ல, அது தொடர்பாகத் தாம் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் ஊடாகப் புலிகளுக்கு - அரசுத்தரப்போடு மறுபக்கத்தில் சரிசமமாக இருந்து பேசும் தமிழர்களின் ஏக பிரதிநிதிகளுக்கு - சமர்ப்பித்த அறிக்கையில் விடுதலைப் புலிகளைப் 'பயங்கரவாதிகள்' என்று குறிப்பிட்ட பெருமையும் இவருக்கு உண்டு.

'இவரே உண்மையான பௌத்த, சிங்கள போர்வீரர். இவரின் சேவை நாட்டுக்கு அத்தியாவசியம். இதுவும் நாட்டின் எதிர்காலம் கேள்விக்கு உள்ளாகியிருக்கும் சமயத்தில் இவர் போன்ற உண்மை வீரர்களின் பங்கு, பணி நாட்டுக்கு அத்தியாவசியம் என்பதால் இவருக்கு சேவை நீடிப்பு வழங்கி, இராணுவத்தில் தொடர்ந்து வைத்திருங்கள்!' - என்ற அழுத்தம் ஜே.வி.பியின் சில தலைவர்கள் உட்பட - பௌத்த, சிங்கள மேலாண்மைவாதப் போக்குடைய பேரினவாதிகளினால் ஜனாதிபதிக்குக் கொடுக்கப்பட்டு வருவதாகத் தகவல் கசியத் தொடங்கியுள்ளது.

ஜனாதிபதி என்ன செய்யப்போகின்றார்?

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு முறையற்ற விதத்தில் மேலும் சேவை நீடிப்பு வழங்குவது சமாதான முயற்சிகள் தொடர்பாகப் புலிகளுக்குக் கொடுக்கப்படும் தவறான சமிக்ஞையாகவே (Wrong signal) அமையும். அதை ஜனாதிபதி கவனத்தில் கொள்வது நல்லது.

# கீரிமலை நகுலேஸ்வரர் உற்சவத்தில் பக்தர்கள் பங்குபற்ற படையினர் அனுமதி

### இரு பாதைகள் ஊடாகச் செல்ல முடியும்

வலி.தெற்கு.பெப்.19

கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வர ஆலய வருடாந்த மஹோற்சவத்திற்குத் தெல்லிப்பழை பாதை வழியாகவும், சேந்தான்குளம் பாதையூடாகவும் உற்சவ காலங்களில் அடியார்கள் சென்று வருவதற்கு இராணுவத்தினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இம்மாதம் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மார்ச் மாதம் 09 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள மஹோற்சவ காலத்தில் மேற்படி பாதைகளூடாக சோதனைகளை மேற்கொண்டபின் சென்று திரும்பலாம் என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி ஆலய உற்சவம் தொடர்பாக தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில் ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெற்றுள்ளது.

இக் கூட்டத்தில் இராணுவம், பொலீஸ், கடற்படை ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி, வலி. வடக்குப் பிரதேசசபை, தெல்லிப்பழை பல. நோக்குக் கூட்டுறவுச் சங்கம் உட்படப் பல நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் கிராம சேவையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

உற்சவ காலங்களில் நடைமுறைப் படுத்தவுள்ள போக்குவரத்து ஒழுங்குகள், சுகாதார வசதிகள் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகள் பற்றியும் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

தெல்லிப்பழை சோதனைச் சாவடியில் சோதனைகளை முடித்துக்கொண்ட அடியார்களைக் கீரிமலைக்கு கூட்டிச் செல்வதற்கான ஒழுங்குகளை வட பிராந்திய போக்குவரத்துச் சபையினர் செய்து தருவதாகச் சம்மதம் தெரிவித்துள்ளனர். (3-152)

# மினிபஸ்களைத் தரிப்பிடங்களில் மட்டுமே நிறுத்திப் பயணிகளை ஏற்ற வேண்டும்

### வலிகாமம் மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

வலி.மேற்கு.பெப்.19

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் பஸ்தரிப்பிடங்களில் மட்டும் மினிபஸ்களை நிறுத்தி பயணிகளை ஏற்றுவதற்குப் பொலீஸார் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸ் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. திணைக்களங்களின் தலைவர்கள், பொலீஸ் அதிகாரிகள், கிராம அலுவலர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

மினிபஸ் ஓட்டுநர்கள் பஸ்தரிப்பிடங்களில் மினிபஸ்களை நிறுத்தாமல் சகல இடங்களிலும் நிறுத்தி பிரயாணிகளை ஏற்றுகின்றனர். திடீர் திடீர் என மினிபஸ்களை நிறுத்துவதனால் வீதிவிபத்துக்கள் பெருமளவு இடம்பெறுகின்றன. போக்குவரத்துக்கும் பெரும் இடையூறு ஏற்படுகின்றது. மினிபஸ் சங்கத் தலைவரை நேரடியாக அழைத்துக் கலந்துரையாடிய பின்னரும் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. ஆதலால், சங்கனை, மானிப்பாய், வட்டுக்கோட்டை பொலீஸார் பஸ்தரிப்பிடங்களில் மட்டும் மினிபஸ்களை நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என வலியுறுத்தி இக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

☆ பாடசாலைகளில் கல்விபயில வேண்டிய மாணவர்கள் பாடசாலைகளுக்குச் சமுகம் அளிக்காமல் கூலி வேலைகளுக்கு பெற்றோர்களினாலேயே அழைத்து செல்லப்படுகின்றனர். இதனால், இவர்களின் கல்வி பாதிக்கப்படுவதுடன், பாடசாலை மட்டத்தில் நடைபெறும் விளையாட்டு போன்ற வெளிப்புற வேலைகளும் பாதிக்கப்படுகின்றன. அதனை நிறுத்துவதற்குச் சகல தரப்பட்டவர்களும் நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டும்.

☆ வளர்ப்பு நாய்களுக்குப் பிரதேச சபையினர் அனுமதி வழங்குகின்ற நடவடிக்கையினை உடனடியாக நடைமுறைப் படுத்த வேண்டும்.

☆ ஆலயங்களில் ஒலிபெருக்கியின் பாவனையையும் சத்தத்தையும் கட்டுப்படுத்துவதற்கு ஆலயபரிபாலன சபையினரை அழைத்துக் கலந்துரையாடி, உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டும். (8-175)

## தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஆங்கிலக் கற்கை நெறிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.19

தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கான இலவச ஆங்கிலக் கற்கை நெறிகள் கடந்த 17 ஆம் திகதி வியாழக்கிழமை நல்லூர் கோயில் வீதியில் உள்ள அதன் அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட மாணவர் ஒன்றியத் தலைவர் குனேந்திரன் தலைமையில் நடைபெற்ற ஆங்கிலக் கற்கை நெறி ஆரம்ப நிகழ்வில் சர்வதேச மாணவர் பேரவையின் துணைப் பொறுப்பாளர் குகன் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் 80 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர்.

மாணவர்களுக்கான ஆங்கிலப் பயிற்சிகளை வழங்குவதற்கென ஆஸ்திரேலியாவிலிருந்து திருமதி ஜெயசுபா என்பவர் மாணவர் பேரவையின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாணம் வருகைதந்துள்ளார். இவர் இங்கு ஒருவருடம் தங்கிநின்று ஆங்கிலக் கற்கை நெறிகளை நடத்துவார்.

இந்தக் கற்கை நெறிக்கான கற்றல் உபகரணங்கள், தளபாட வசதிகள் ஆகியவற்றுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் நிதி உதவியினை வழங்கியுள்ளார் என யாழ்.மாவட்ட மாணவர் ஒன்றியத்தின் பொறுப்பாளர் கிருஷ்ணா தெரிவித்தார். (8-13)

## குமார் கொலைவழக்கின் விசாரணை அடுத்தமாதம்

பிரபல சட்டத்தரணியும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவருமான மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் கொலை வழக்கு விசாரணைகள் அடுத்த மாதம் 14ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு மேலதிக நீதிவான் சுஜீவ நிசங்க முன்னிலையில் வழக்கு விசாரணைகள் இடம் பெற்றது. (10-202)

## அதிகரிப்பதாக அறிவிக்கப்பட்ட ஓய்வூதியம் யாழ்.விவசாயிகளுக்குக் கிட்டவில்லை

### விவசாய அமைச்சருக்கு மகஜர்

வலி.தென்மேற்கு.பெப்.19

திறைசேரியினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தும் கூட யாழ்.மாவட்ட விவசாயிகளின் விவசாய ஓய்வூதியங்கள் அதிகரிக்கப்படவில்லை.

வடமாகாணத்தில் 7 ஆயிரத்து 600 விவசாயிகள் விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து அதற்கான கொடுப்பனவுகளைச் செலுத்திவருகின்றனர். இவர்களில் 561 விவசாயிகள் தலா ஆயிரம் ரூபாவைத் தற்போது தமது ஓய்வூதியமாகப் பெற்றுவருகின்றனர்.

இதனையடுத்து, இவர்களின் கொடுப்பனவுகளை மூவாயிரம் ரூபாவாக அதிகரித்து வழங்க வேண்டும் என மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவர் க.பொ.ம.க முதலியார் விவசாய அமைச்சருடன் தொடர்புகொண்டு வலியுறுத்தியிருந்தார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு விவசாய அமைச்சரின் வேண்டுகோளின்படி திறைசேரி மேற்படி கொடுப்பனவுகளை வழங்கச் சம்மதித்திருந்தது.

ஆனால், இன்றுவரை இவர்களுக்காக அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படவில்லை.

எனவே, திறைசேரியால் அனுமதி வழங்கப்பட்ட விவசாய ஓய்வூதிய அதிகரிப்பை உடனடியாக அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவர் விவசாய அமைச்சரைக் கடிதமூலம் கோரியுள்ளார். (3-203-152)

## போலி நகையை அடகுவைக்க முயன்றவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார்

யாழ்ப்பாணம்,பெப்.19

தனியார் வங்கி ஒன்றில் தங்க முலாம் பூசிய போலி நகையை அடகுவைத்துப் பணம் பெற முயன்ற இளைஞர் ஒருவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.

கல்வியங்காட்டைச் சேர்ந்த இருபது வயதான இளைஞர் ஒருவரே இவ்வாறு ஏமாற்று மோசடியில் ஈடுபட்டதாக யாழ். பொலீஸார் தெரிவித்தனர்.

யாழ்.நகரில் உள்ள தனியார் வங்கியொன்றில் தங்க முலாம் பூசிய போலி நகையொன்றை அடகு வைத்துப் பணம் பெறுவதற்கு முயற்சித்த வேளையில் வங்கி அதிகாரிகளால் அது போலி நகையென்று கண்டறியப்பட்டது.

வங்கி அதிகாரிகள் பொலீஸாருக்கு அறிவித்ததை அடுத்து சம்பந்தப்பட்ட இளைஞரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர். (10-13)

### நாளை

மாசி 08
ஞாயிற்றுக்கிழமை
20.02.2005
திதி : துவாதசி
பின் இரவு : 05.51 வரை
நட்சத்திரம் : புனர்பூசம்
முழுவதும்
சுபநேரம் : 9.31 - 11.01
ராகுகாலம் : 05.01 - 06.31
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உலகைக் கட்டியாளும் ஓர் உயர்ந்த அரசனாக இருப்பதைக் காட்டிலும், ஆண் மகனாகிய நீ ஒரு பெண்ணின் மேன்மையான அன்புநிறைந்த உள்ளத்தின் சக்கரவர்த்தியாக இருப்பது மேல். - இங்கர்சால்

### பெண்ணைத் தொட்டாலும் மண்ணைத் தொடாதே!

மண்பிட்டியில் மணலை அள்ளி
மனை கட்டச்சென்றிட்டாலும்
மண்ணையும் பறித்துப் பின்னே
மறியலில் வைச்சின்றாரே!
எண்ணியவாறு சிமெந்து
இடரின்றிக் கிடைக்குதிங்கே
என்னென்று வீடு கட்டுவோமென
ஏங்குறார் மக்கள் எல்லாம்

பின்னை 'கக்கூஸ்' கட்டவேணும்
பெமிற்றுக்கும் மண் கிடைப்பதில்லை
அன்னையர் பனைக்கூடம் நண்ணி
அவஸ்தையைப் போக்குகின்றார்
பெண்மையைப் பேண எண்ணி
பெரும் சுழகதும் தேடுகின்றார்
பெண்ணைத் தொட்டாலும் தம்பி!
மண்ணைத் தொட்டிடாதே
என்னதான் செய்வோம் தாயே!
இப்படிப் போச்சுக்காலம்!!!

- விகடகவி

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

கலர் மீன்கள், மீன்தொட்டிகள், லவ்பேட்ஸ், யாவா, பிஞ்சஸ், ஆபிரிக்கன் லவ்பேட்ஸ், கொக்கொடைல் குருவிகளும், கூடுகளும் மற்றும் அடுக்குச் செவ்வரத்தை, றோசாக்கன்றுகள், குறோட்டன், பூச்சாடிகள் அனைத்தும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/11, சீனியர் லேன், தட்டாதெருச் சந்தி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (C/40623)

புதிய ஓட்டோ விற்பனைக்குண்டு. தொடர்பு: கணணன், சந்தனமாதா கோவில் முன் ஒழுங்கை, பாண்டியன்தாழ்வு. (42236)

எம்மிடம் Sony T.V., Panasonic Deck Japan அன்ரெனா, ஒரு கைப்பாவனையிலுள்ள Super Cup Lanxer 50 Japan, புதிய CBZ 150 CC Computer Pentium IV மற்றும் வீட்டுப பாவனைக்குகந்த பல பொருள்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.22, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (42244)

## காணி விற்பனைக்கு

நவக்கிரி, அச்சுவேலி வீதியில் நவக்கிரிச் சந்திக்கு அண்மையில் 16 பரப்பு (கிணற்றுடன் கூடிய) தோட்டக்காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டவும் உகந்தது. தொடர்பு: 222 3772. (42152)

யாழ்ப்பாணம் பிரதான வீதி, முதலாம் பிரிவு புதிய நீதிமன்ற கட்டடத்துக்கு முன்பாக பிரதான வீதியிலிருந்து மூன்றாவது காணி 1¾ பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: இல. 92, கண்டிவீதி, கச்சேரி, யாழ்ப்பாணம், T.P.: 0776111419, 222 7096. (42256)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

Pure Bred Dobbermann Pincher X Great Dane நாய்க்குட்டிகள் குறைந்த விலையில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (42178)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், ஆசிரியராக பணிபுரியும் 1974 ஆம் ஆண்டு பூரம், செவ்வாய் தோஷமற்ற இலக்கினத்திற்கு 48 பாவம் உள்ள மணமகளிற்குத் தகுந்த வரனைப்பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். உத்தியோகம், கடை, வெளிநாடு விரும்பத்தக்கது. தொடர்பு: விளம்பர இல: 2504, மே/பா. உதயன். (42231)

## தவறிவிட்டன

வடகாடு வவுனிக்குளம் என விலாசமுடைய நாகரததினம் செந்தில்ராசன் என்பவரது தேசிய அடையாள அட்டை (743274660V) அரியாலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்: ஷாரு தொலைத் தொடர்பு நிலையம், 123, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். T.P.: 021 - 4590566. (42240)

வேலணை மேற்கைச் சேர்ந்த தம்பு புலேந்திரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (491582820V) 15.02.2005 அன்று யாழ்.நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (42253)

## பணிப்பெண் தேவை

ஆசிரியர் குடும்பத்திற்கு பணிப்பெண் தேவை. தங்கியிருந்து வேலை செய்பவர் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். சனி, ஞாயிறு தினங்களில் நேரில்வரவும் தொடர்பு: சி.மணிவணணன், அம்மன் வீதி, தலங்காவற பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி கிழக்கு. (42245)

## வீடு வாடகைக்கு

மாநகர சபை அலுவலகத்திற்குப் பின்புறம் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 077 3089963. (42210)

## இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம் தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெலவேலி கிழக்கு. (42136)

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை, நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (42177)

புறொயிலர், கல்பேட்ஸ் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. (சுத்தம் செய்தல் இலவசம்), தொடர்பு: NEW R.S.K. FARM - மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். NEW R.S.K. FARM - மானிப்பாய் றோட், உடுவில் (பெரிய மாவடி). (42263)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broilar குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 28.02.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை நெல்லியடிக் கிளையிலும், சூட்டி பாம் - வட்டுகோட்டை, சந்நிதி பாம் சென்ரர் - சந்நிதி, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (41599)

## திருமண சேவை

திருமண வாழ்வை எதிர்பார்த்துள்ள மணமகன்களுக்குப் பொருத்தமான வாழ்க்கைத் துணையைத் தேர்ந்து கொள்ள இலவசமான திருமணசேவையை வழங்கி வருகின்றோம் எமது இலவச சேவையை விரும்பும் பெற்றோர்கள் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள். P. தில்லையர், 62/5, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (42264)

## புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைகுண்டு. தொடர்புக்கு: பலாலி வீதி, உரும்பிராய் (உரும்பிராய்ச் சந்திக்கு முன்னால்), இல. 654, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P.: 077 6636335. (42246)

## அங்குரார்ப் பணக் கூட்டம

யாழ்ப்பாணம்,பெப்.19

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வேலணைப் பிரிவின் அலகு ஒன்று, மூன்று ஆகியவற்றுக்கான அங்குரார்ப்பணக் கூட்டங்கள் எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ளன.

அலகு ஒன்றிற்கான கூட்டம் வேலணை வங்களாவடி சரஸ்வதி வித்தியாசாலையில் முற்பகல் 10 மணிக்கும் -

அலகு மூன்றிற்கான கூட்டம் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலையில் பிற்பகல் 3 மணிக்கும் நடைபெறும். (8-202)

## நிறைவு விழாவும் ஆண்டுக் கூட்டமும்

யாழ்ப்பாணம்,பெப்.19

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 23ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்தப் பொதுக்கூட்டமும் இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் நிறுவனத்தின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளன.

நிறுவனத்தின் தலைவர் க.சுரேந்திரநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே. கணேஸ"ம் கௌரவ விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன், யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோரும் சிறப்பு விருந்தினராகக கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி வ.அமிர்தலிங்கமும் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வில் இலங்கை செவிப்புலன் அற்றோர் நிறுவனத்தலைவர், சே. செல்வகுமார் மற்றும் செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் திருகோணமலை மாவட்டத் தலைவர் து.அன்ரணலீனகே, மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் செ.ஜெயகாந்தன் குருஸ், வவுனியா மாவட்டத் தலைவர் த.வசந்தராசா, கொழும்பு மாவட்டத் தலைவர் த.க.ரஞ்சன் ஆகியோர் சிறப்புரை ஆற்றவுள்ளனர். (3-203)

## வலைப்பந்தாட்டம்

சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட, கரபந்தாட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. (எ-190)


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. By: விக்னேஸவரன் ஆச்சாரி - 426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். மாதாந்தக்கட்டணம் 150/-.

**விற்பனைக்கு**

சாவகச்சேரி நகருக்கு மிக அண்டிய பகுதியில் சகல வசதியுடன் உள்ள வீடும் 4 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: T.P. : 0777 069078

(சி-41023)

**விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், கன்னாதிட்டியில் அமைந்துள்ள 3 மாடிகளைக் கொண்ட கடைக் கட்டடமும் நாவலர் வீதி, ஐந்து சந்திக்கு அருகில் நாலு பரப்புக் காணியில் பெரிய வீடும் விற்பனைக்குண்டு. நேரில் வரவும்.

திரு.க.பத்மநாதன்,
L.K.S. தங்கமாளிகை,
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். T.P.No.0776687824

(42166)

**District Mine Action Office, Jaffna**
மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், யாழ்ப்பாணம்.

Correction in the vacancy announcement:

It should be Operations 'Assistant' in the first sentence in the vacancy advertisement (of UN Mine Action) Published in Uthayan on 16.02.2005. Therefore please read it as 'Operations Assistant' Sorry for any inconveniences.
Administration - UN MA, Jaffna.

(C/41050)(42-16)

**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 1939 - 01 - 30



மறைவு 2003 - 02 - 19

**அமரர் கா.சந்திரராஜா**

(ஓய்வுபெற்ற உதவி அரச அதிபர் - சங்கானை)

திதி: மாசி அபரபக்க திருதியை (26.02.2005)

அழிப்பின் நினைவுகள் என்றும்
அழிய முடியாதவை.
என்றும் உங்கள் நினைவுகளுடன்...

பறாளாய் வீதி,
சுழிபுரம்.

குடும்பத்தினர்.

(42254)(42-16)

**மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்**
**நடத்தும்**
**இலவச பொது மருத்துவ**
**கண் பரிசோதனை முகாம்**



காலம் : 20.02.2005
ஞாயிறு காலை 8.30 மணிமுதல்

இடம் : அட்டகிரி சைவ வித்தியாசாலை
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

பின்வரும் சிரேஷ்ட வைத்திய உத்தியோகத்தர்கள் தங்கள் சேவையை வழங்க உள்ளார்கள்.

1. லயன். வைத்திய கலாநிதி செல்வி நவமலர் கனகரத்தினம் - M.B.B.S.
2. லயன். வைத்திய கலாநிதி இராஜேந்திர பிரசாத் - M.B.B.S.
3. லயன். வைத்திய கலாநிதி க.இரத்தினசிங்கம் - M.B.B.S.

வைத்திய பரிசோதனை, கண்பரிசோதனை மேற்கொள்பவர்கள்

யாழ். பிரபல துஷா கண் பார்வைப் பரிசோதகர்களும் மூக்குக் கண்ணாடி வழங்குநர்களும்.

குறிப்பு:
நலிவுற்ற மக்களுக்கு மூக்குக் கண்ணாடியும் மற்றும் தேவைப்படும் மருந்துகளும் இலவசமாக வழங்கப்படும்.

லயன் செ.சுந்தரேஸ்வரன்
கழக செயலாளர்.

லயன் S.S.தங்கராஜா
சேவைத் திட்டத் தலைவர்.

விளம்பர அனுசரணை:-

யாழ். நகரின் பிரபல முன்னணி நிறுவனம்
**துஷா பல் - மூக்குக் கண்ணாடியகம்**
544, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.
T.P.: 3461, 0777150032

(C/41051)(33-16-42)

**Jaffna College Institute of Technology**
Vaddukoddai

The following courses will commence from 21st February 2005

**Diploma Course**
**Computer Programming & Data Processing**
Duration : 1 year (Full time)
Fees : 4500/=

**Certificate Courses**
**Computer Certificate Courses in Business Applications (1.00p.m.)**
- Ms Word
- Ms Excel
- Ms Access
&
- Power Point

Duration : 4 Months
Fees: Rs.2500/=

**Printing Technology (1.00 p.m.)**
- Page Maker
- Photo shop
- Corel Drow

Duration: 4 Months
Fees: Rs.2500/=

**Certificate Courses in Visual Basic & C++**
FOR APPLICATION FORMS AND DETAILS CONTACT:-

**Director**
Jaffna College Institute of Technology,
Vaddukoddai.
T.Phond: 0602213139 E-mail: jcit@sltnet.lk

(C/41049)(42-16)

# லண்டனில் உயர் கல்வி பெறும் வாய்ப்புக்கள்: யாழ்ப்பாணத்தில் விளக்கக் கருத்தரங்கு நாளை

மர்னிப்பாய் றோட்டறக்ட் கழகத்தின் அனுசரணையுடன் லண்டனில் கல்வி மற்றும் தொழில் வாய்ப்பு பெறுவது தொடர்பான கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி முதல் ஒருமணிவரை வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஐக்கிய இராச்சியத்திலுள்ள முன்னணி Consultant நிறுவனமாகிய **Facilities and Management Europe Ltd (Gatway 2 UK)** மற்றும் கொழும்பிலுள்ள முன்னணிக் கணனிக் கல்வி நிறுவனமாகிய **Hightech International Computer College** மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள முன்னணி கல்வி நிறுவனமாகிய London English College ஆகியன இணைந்து இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளன.

லண்டனில் இயங்கும் Facilities and Management நிறுவனமானது சுமார் 15 வருடகாலமாக உலகின் அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் மாணவர்கள் உயர்கல்வி கற்கும் வாய்ப்பினைச் சிறப்பாக ஏற்படுத்திக்கொடுத்து வருகினறது. அத்துடன், லண்டனில் தொழில் செய்ய விரும்புவோர்களுக்கான ஏற்பாடுகளையும் செய்துவருகின்றது. விஸா பெறுவதற்கான சகல ஏற்பாடுகளும் அதாவது படிமுறைகள், அதற்குத் தேவையான காரணிகள் பற்றி அறி




வுறுத்தல் மற்றும் அவற்றிற்கான பயிற்சிகள் முதலியன இந்நிறுவனத்தினால் பிரித்தானிய ஆங்கில உச்சரிப்புகளுடன் லண்டன் செல்வோர்களுடன் நேரடியாகத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பயிற்றுவிக்கின்றனர்.

மேலும் மாணவர்களிற்கு லண்டனில் பிரதான 3 முன்னணி பல்கலைக்கழகங்களிலும் பிரதான 10 கல்லூரிகளிலும் அனுமதிகள் பெற்றுத் தரப்படுகின்றன. அவற்றோடு மாணவர்களுக்குத் தேவையான உணவு, தங்குமிட வசதிகள், பகுதிநேர வேலை போன்றனவும் ஒழுங்கு செய்துதரப்படுகின்றது.

தொழில்பெற விரும்புவோரிற்கு அவரவர் தகுதிக்கேற்ப தொழில் வகைகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. லண்டனில் தொழில் பெறும்வரை அதற்கான சகல ஏற்பாடுகளும் இந்த முன்னணி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுவதோடு, தங்கள் மூலம் அங்கு வந்தடைந்த மாணவர்களிற்கும் தொழில் புரிவோரிற்கும் சகல தேவைகளும் பூர்த்திசெய்தும் கொடுக்கின்றது.

இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்திருக்கும் கொழும்பிலுள்ள முன்னணிக் கணனி கல்வி நிறுவனமாகிய Hightech International Computer College ஆனது அகில இலங்கை கணனிப் பயிற்சி சம்மேளனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு முன்னணிக் கணனிக் கல்லூரி ஆகும். அகில இலங்கை ரீதியிலாக 31 கணனி நிறுவனங்கள் மாத்திரமே இக்கணனிப் பயிற்சி சம்மேளனத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பது ஒரு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இக்கல்லூரியின் (Hightech Computer College) அதிபரான B.Sc. Computer Science கணனிப் பட்டப்படிப்பு முடித்த உதயானந் இந்த அகில இலங்கைக் கணனிப் பயிற்சிச் சம்மேளனத்தின் கௌரவ பொதுச்செயலாளராகவும் மிக முக்கிய பதவி வகிக்கின்றார் இவரே இக்கருத்தரங்கினை யாழ். மாணவர்களிற்காக ஒழுங்கு செய்து நெறிப்படுத்துகின்றார்.

இக்கருத்தரங்கில் லண்டனில் உள்ள முன்னணிப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் ஆகியன பற்றி முழுமையாக ஆராய்வதுடன், அவற்றினால் பயிற்றப்படும் சகல பாடநெறிகள், அவற்றின் கட்டணங்கள் மற்றும் அவற்றில் அனுமதி பெறுவதற்கு வேண்டிய அடிப்படைத் தகைமைகள் மற்றும் மாணவர்கள் மேற்கொள்ளக்கூடிய பகுதிநேர வேலைவாய்ப்புகள்முறை, அன்றாட வாழ்க்கைமுறை, தொழில் வகைகள், தொழில் செய்யும்முறை மற்றும் லண்டன் செல்வதற்கான தேவையான காரணிகள், படிமுறைகள், அவற்றோடு தொழில்சார் விசாக்கள் பற்றிய பூரண விளக்கம் மற்றும் யாழ். மாணவர்கள் தொழிற்சாராரும் UK செல்வதற்கான அனுகூலங்கள் பற்றியும் விரிவாக விளக்கப்படவுள்ளன. ★

## கணனித்துறையில் மாணவர்களை ஊக்குவிக்க

# 250 புலமைப்பரிசில் வழங்கும் கட்டுரைப் போட்டிக்கு ஏற்பாடு

கணனித்துறையில் மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை NIIT நிறுவனம் நடைமுறைப்படுத்தவிருக்கின்றது.

இக்கட்டுரைப் போட்டியில் அதிக புள்ளி பெறுபவர்களுக்கு 250புலமைப் பரிசில்களை வழங்க அந்த நிறுவனம் முடிவுசெய்துள்ளது.

கல்வி அமைச்சின் இரண்டாம் தர கல்வியை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் கீழ் கணனி வசதியுள்ள பாடசாலைகளில் இக்கட்டுரைப் போட்டியை நடத்த இந்த நிறுவனம் முன்வந்துள்ளது.

இத்திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி வழங்குகின்றது. தரம் 7-12வரையான மாணவர்கள் தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளில் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கலாம்.

"எனது பாடசாலையிலுள்ள கணனி வளத்தினூடாக நான் பெற்றுக்கொண்ட நன்மைகள்" என்னும் தலைப்பில் இக்கட்டுரை அமைய வேண்டும்.

இக்கட்டுரைப்போட்டியிலிருந்து 250 மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். அவர்களுக்கு NIIT இனால் "SWIFT First Step" பயிற்சிநெறி முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.

NIIT நிறுவனமானது 38 நாடுகளில் 3ஆயிரத்து 600 இற்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டுள்ளது. அமெரிக்காவிலுள்ள International Data Corporation (IDC). ஆசியாவின் மிகப்பெரிய IT Training Company NIIT என்று கூறுகின்றது.

இக்கட்டுரைப்போட்டி மூலம் கணனி வசதியுள்ள பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் என்ன கருதுகிறார்கள் என்றும், என்ன நன்மைகளைப் பெற்றார்கள் என்றும் நாம் இலகுவாக அறிந்துகொள்ளலாம் என்று SEMP திட்ட அதிகாரி கூறினார்.

இக்கட்டுரைப்போட்டிக்கான முழு விவரங்களும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு மிக விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

NIIT நிறுவனம் SEMP திட்டத்தின் கீழ் கடந்த வருடம் ஆசிரியர்களுக்கான கற்பித்தலில் 'கணனியைப் பாவித்தல் எவ்வாறு' என்ற பயிற்சியை வழங்கியது குறிப்பிடத்தக்கது. (3)

# கிராமப்புற மாணவர்களின் கணனி அறிவுக்கு தமிழ்த்தகவல் தொழில்நுட்பப் பூங்கா உதவும்

யாழ்ப்பாணம்,பெப்.19

மாணவர்களுக்கான கணனி பற்றிய அடிப்படை அறிவைச் சிறப்புறப் புகட்டுவதே தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு நிறுவனத்தின் நோக்கமாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பாளர் ரவிசங்கர்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்:-

நகர்ப்புற மாணவர்கள் இலகுவாகக் கணனி அறிவைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகள இருக்கின்றன. ஆனால், கிராமப்புற மக்களுக்கு அந்த வசதிகள் இல்லை. அதனால் நாம் கிராமங்களை அடிப்படையாகக் கொண்டே செயற்பட்டு வருகின்றோம்.

சாதாரணமாகக் கணனி பற்றிய அறிவைப்பெற வேண்டுமானால் மாதாந்தம் 3 ஆயிரம் அல்லது 4 ஆயிரம் ரூபா கட்டணம் செலுத்தியே படிக்க வேண்டும். ஆனால, நாம் இக்கற்கை நெறிக்காக மாதாந்தம் நூறு ரூபாவை மட்டுமே கட்டணமாக அறவிட்டு வருகின்றோம்.

எமது நிலையங்கள் தமிழர் வாழும் பிரதேசங்கள் முழுவதும் ஆரம்பிக்கப்படவுள்ளன. மலையகத்திலும் இரண்டு பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாங்கள் முதன்முதலில் தண்ணீரூற்றுக் கிராமத்தில் 18 லட்சம் ரூபா செலவில் முதலாவது கணனிப்பயிற்சி நிலையத்தை ஆரம்பித்தோம். இந்த நிலையத்துக்கான கணனிகள் மற்றும் குளிர்சாதனம் ஆகியவற்றுக்கு மட்டுமே இத்தொகை செலவிடப்பட்டது. இதற்கான கட்டடம் அமைக்கும் பொறுப்பை மாணவர் அமைப்பினர் பொறுப்பேற்றனர்.

அத்துடன், கிளிநொச்சியில் இயங்கும் வன்னிரெக் நிறுவனம் கணனித் தொழில்நுட்பவியலாளர்களை உருவாக்குவதையே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. அங்குள்ள மழலைகள் கணனிப் பூங்கா கொழும்பிலுள்ள மழலைகள் கணனிப் பூங்காவிற்கு இணையாகச் செயற்பட்டு வருகின்றது.

லண்டன் கனகதுர்க்கையம்மன் ஆலயத்துடன் இணைந்து நாம் பதினொரு கணனிப் பயிற்சி நிலையங்களை நடத்தி வருகின்றோம். இந்நிலையங்களில் முற்றிலும் இலவசமாகவே பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன், மாணவர்களுக்குரிய அப்பியாசப் புத்தகங்கள் கூட இலவசமாக வழங்கப்படுகின்றன- என்றார் அவர். (3-203)

# நூல்வரிசை

நூல்: அன்புள்ள அம்மா
ஆசிரியர்: **டாக்டர் சி.நவநீதன்**
அச்சுப்பதிப்பு : கரிகணன் பிரிண்டேர்ஸ்.



மகப்பேற்று பெண்ணோயியல் நிபுணர் டாக்டர் சி.நவநீதன் M.B.B.S., MSOG, MRCOG, DOWH எழுதிய அன்புள்ள அம்மா என்ற நூல் கர்ப்பிணித் தாய்மார்களுக்குக் கைகொடுக்கும் வழிகாட்டியாக அமைகிறது. நூலை முழுமையாகப் படித்து முடிந்ததும் 'அன்புள்ள அம்மா' என்பது ஒரு பெண்ணின் வயிற்றிலிருக்கும் சிசு தனது தாய்க்கு விடும் இன்ப அறைகூவலா இது என்று எண்ணத் தோன்றுகிறது. அத்தனை கரிசனையுடனும் அறிவுத் திறனுடனும் தாய்-சேய உறவை மனதில் வைத்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இந்தக் காலத்தில் எமது தாய்-சேய் நிலையங்களுக்கு வரும் தாய்மார்கள் நன்கு கல்வி கற்றவர்கள். ஆமாம், இது கணனியுகம் அல்லவா? அவர்கள் தமது கர்ப்ப காலத்தைப் பற்றிய எல்லா உண்மைகளையும் அறிய ஆவலாக உள்ளார்கள். எதையும் ஏன்,எதற்கு, எப்படி என்று கேட்டு சந்தேகங்களைத் தீர்க்க விரும்புகிறார்கள். அவர்களுக்கு மிகவும் விருப்பமான ஒரு கையேடாக அமைகிறது 'அன்புள்ள அம்மா' என்ற இந்த நூல்.

நூலாசிரியரே பின்வருமாறு கூறுகிறார்: 'மருத்துவம் மூடு மந்திரமாய் இருந்த காலம் விண்ணேறிவிட்டது. நோயாளிகள் தங்கள் பிரச்சினைகளை நன்கு விளக்கமாக அறிய விழைகின்றனர். 'கர்ப்ப காலத்தில் தாய்மாருக்கு மனதில் எழும் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் விதத்திலும் கர்ப்ப காலத்தில் ஏற்படும் மாற்றம், பிரச்சினைகள என்பவற்றை விளக்கவும் எடுத்த முயற்சி இது' சந்கேமில்லாமல் இந்த 'முயற்சி நூலாசிரியருக்குப் பெரும் வெற்றி' என்றே கூற வேண்டும்.கர்ப்ப காலப் பராமரிப்பை அறிவியல் சத்தியத்தின் அடிப்படையில், முதல் 3மாதம, நடு 3 மாதம், இறுதி 3 மாதம் என்று விளக்கும் அதேவேளையில், அவ்வப்போது தகுந்த இடங்களில் 'கேள்வி-பதில்' என்ற முறையில் பல விடயங்கள் தெளிவாக்கப்படுகின்றன.

உதாரணமாக, திருமணமாகி எவ்வளவு நாளகளில் கருத்தரிக்கும், குங்குமப்பூ சாப்பிடலாமா, தவிர்க்கவேண்டிய உணவுகள், விடயங்கள் எவை, பத்தியம், குழை அவித்துகுளிப்பு ஆகியவற்றின் பயன் என்ன போன்ற கேள்விகளுக்கு விடைகள், எமது வாழ்க்கை முறையை நன்கு அறிந்து நம்மவர் ஒருவரால் எழுதப்பட்ட நூல் என்பதைத் தெரிவிக்கின்றன. கிட்டத்தட்ட 50-60 கேள்விகளுக்கு விடைகள் நேரடியாகத் தரப்பட்டுள்ளன.

அத்துடன், இந்த நூல் யதார்த்த பூர்வமான அறிவுரைகளைக் கொண்டுள்ளது. நூலாசிரியர் நாடறிந்த நிபுணராக இருந்தும் 'பெரும்பாலான பிரசவங்களின்போது சிக்கல்கள் ஏற்படுவது இல்லை. எல்லோருக்கும் நிபுணத்துவ ஆலோசனை பெறவேண்டியதில்லை. அண்மையில் உள்ள வைத்தியர், மருத்துவத் தாதியின் பராமரிப்பும் போதும். வேண்டுமானால் அவர்கள் நிபுணத்துவ ஆலோசனைக்கு அனுப்புவார்கள்' என்று கூறுகிறார்.

இயற்கையான பிரசவமே எப்போதும் சிறந்தது என்று கூறிவிட்டுத்தான் ஆயுதப் பிரசவங்கள், சிசேரியன் சத்திர சிகிச்சை பற்றிய தகவல்களைத் தருகிறார். கர்ப்ப கால உடற்பயிற்சி, மகபேற்றின் பின் உடற்பயிற்சி ஆகியவற்றை நூலாசிரியர் வற்புறுத்துகின்றார்; விளக்குகின்றார்.

இந்த நூலை கர்ப்பிணிகள் மட்டும் அல்ல, அவர்களின் கணவன்மார், தாய்மார், மாமிமார் படிக்கவேண்டும். மருத்துவ தாதிகளுக்கு இது ஒரு சிறந்த உப நூல். ஆசிரியர்கள், மேல் வகுப்பு மாணவ, மாணவிகள் படிப்பதால் அவர்களின் விஞ்ஞான அறிவு மேம்படும். நூலை முழுமையாகப் படித்ததும் ஓர் அறிவியல் நிறைவு ஏற்படுகிறது. அதன்பின்பு வேண்டிய விடயங்களைச் சிரமம் இன்றிப் பார்க்கும் விதத்தில் நூல் அமைந்துள்ளது. தெளிவான ஒரு உள்ளடக்கம் இருந்தும், 'சுட்டி' என்ற தலைப்பில் 59விடயங்கள் நூலின் இறுதியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. வாசிப்போரின் சௌகரியத்தை மனத்தில் கொண்டு, தெளிவான மொழியில் விளக்கமான நடையில் எழுதப்பட்டு, இலகுவில் விடயங்களைக் காணக்கூடிய நூல்களை ஆங்கிலத்தில் 'Reader Friendly books' என்பார்கள். அத்தகைய வாசகர்களுடன் நட்பு உறவாடும் சிநேகிதத் தமிழ் மருத்துவ நூல்தான் அன்புள்ள அம்மா.

நூலின் பதிப்பும் அமைப்பும் சர்வதேசத் தரமுடையது. விலை உயர்ந்த காகிதத்தாள்கள், 92கலர் படங்கள் இப்படியாக அதனால் நூலின் விலை உயர்வதைத் தடுக்க முடியாது. இறுதியில் நூலாசிரியருக்கு ஓரிருவேண்டுகோள்கள்.

இத்தகைய சிறந்த ஒரு நூல் யாழ்ப்பாண சிகிச்சை நிலையங்களில் மட்டும் முடங்கிக் கிடக்கப்படாது. தமிழ மொழியை வாசிக்கும் அனைவருக்கும் பயன்படவேண்டும். இந்த நூலின் ஒரு மலிவுப் பதிப்பு வெளிவருமானால் நமது நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் செல்லும், மலிவான கடிதம், கறுப்பு - வெள்ளை படம் கொண்ட பதிப்பின் விலை அரைவாசியாகக் குறையும்.

இந்த நூலாசிரியர் பெண்ணோயியல் நிபுணர் கூட. தமிழ் கூறும் உலகில் மகப்பேற்று நூல்கள் அவ்வப்போது வந்திருக்கின்றன. ஆனால், பெண்ணோய்கள் பற்றிய விஞ்ஞானபூர்வான, விளக்கமான நூல்கள் வந்ததில்லை. இந்த வெறுமையை நிவர்த்தி செய்வதற்கு இந்நூலாசிரியர் முன்வந்தால் தமிழ் வாசிக்கும் மக்களுக்கு இன்னும் ஒரு நல்ல கையேடு - வழிகாட்டி கிடைக்கும்.

**பேராசிரியர் நந்தி**
**(சமூக மருத்துவ வாழ்நாள் பேராசிரியர்).**

நூல்: மாலையில் ஓர் உதயம்
ஆசிரியர்:- **ஆனந்தா ஏ.ஜீ.இராஜேந்திரம்**
வெளியீடு:- ஈழத்து இலக்கியச்சோலை, ஔவையார் வீதி, திருகோணமலை.



மாலையில் ஓர் உதயம் என்ற நாவலை தன் முதற் பதிப்பாக வெளியிட்டிருக்கிறார் திருகோணமலையைச் சேர்ந்த ஆனந்தா ஏ.ஜீ.இராஜேந்திரம்.

ஈழத்து இலக்கியச்சோலை வெளியீடாக வந்துள்ள இந்நாவல் இவ்வெழுத்தாளர் சிறையில் இருந்த காலம் ஒன்றில் எழுதப்பட்டதாகத் தெரிகிறது.

குடும்ப உறவுகளுக்குள் ஏற்படுகிற முரண்பாடுகளைத் தனது கலைநயத்துடன் நாவலாக வெளியிட்டுள்ள எழுத்தாளர், திருமலை தேசிய சேமிப்பு வங்கியில் முகாமையாளராகக் கடமையாற்றுகிறார்.

"இப்போது நீங்கள் காண்பது படிப்பினைக்காக எழுதப்பட்ட நாவல் ,அல்ல.

இலக்கியமாகத் திகழவேண்டும் எனீறு உருவாக்கப்பட்டதுமல்ல, இது ஒரு கதை அவ்வளவுதான்" என்று வாசகர்களுக்குச் சொல்லும் எழுத்தாளரின், இந்த நாவல் முயற்சி நீண்டகால பிரயத்தனங்களுக்கு மத்தியில் வெளிவந்திருக்கிறது. கதை வடக்கு, கிழக்கு, தமிழ்பேச்சு மொழிகளைத் தெளிவாகப் பதிவுசெய்திருக்கிறது.

தென்னிந்திய நாவல்களில் மூழ்கியிருக்கும் எமது வாசகர்கள் எமது பிரதேச நாவல்கள் மீது திரும்புவதற்கு இது ஒரு படிக்கல்.

தெளிவான அச்சில் கையடக்கமான அளவில் 220 பக்கங்கள் கொண்ட இந்நாவல் ரசனையோடு வாசிக்கக் கூடியவாறு பின்னப்பட்டிருக்கிறது

ஆனந்தா ஏ.ஜ.இராஜேந்திரத்தின் 'மாலையில் ஓர் உதயம்' வீணை வேந்தன், த.சித்தி அமரசிங்கம் ஆகியோரின் அறிமுக, பதிப்புரைகளோடு வெளிவந்திருக்கிறது. - **சிவசைலஜா.**

# செய்திக் கொத்து

## ஏப்ரல் முதல் இடமாற்றம்

வலி.தென்மேற்கு,பெப்.19

யாழ்.சுகாதார சேவைப் பிரதி மாகாணப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்ட சுகாதார தொழிலாளர்கள், சிற்றூழியர்கள் அனைவருக்குமான வருடாந்த இடமாற்றம் ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட வுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதியில் இருந்த நடைமுறைப்படுத்தப்படவிருந்த இந்த இடமாற்றங்கள் சுனாமி அனர்த்தம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை, திருகோணமலையில் உள்ள வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்டு இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த யாழ். சுகாதாரத் திணைக்கள அலுவலர்களுக்கான வருடாந்த இடமாற்றங்களும் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதியன்று நடைமுறைப்படுத்தப்படும் என யாழ்.சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (3-203-135)

## கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன

குடத்தனை,பெப்.19

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் வீடுகள், பொருள்கள் ஆகியவற்றை இழந்த பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய மாணவர்களுக்கு கடந்த வியாழன் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்தக் கற்றல் உபகரணங்களை அறவழிப் போராட்டக் குழு வழங்கியது.

ஏற்கனவே, இந்தப் பாடசாலைக்கு யுனிசெவ் நிறுவனததாலும், யாழ்.வலயக் கல்விச் சமூகத்தாலும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

உடைமைகள் இழந்த நிலையில் இந்த வித்தியாலயத்தில் 160 மாணவர்கள் கல்வி கற்பதாக வித்தியாலய அதிபர் இ.நாகேந்திரராஜா தெரிவித்துள்ளார். (3-78)

## தண்ணீர்த்தாங்க' விநியோகம்

உலக சுகாதார நிறுவனத்தினர், ஆயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்ட பிளாஸ்ரிக் தண்ணீர்த் தாங்கிகளை யாழ். சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு வழங்கியுள்ளனர்.

இந்தத் தண்ணீர்த தாங்கிகளை யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிபபாளர் அலுவலகத்தினர் மாவட்டத்திலுள்ள சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களுக்கு வழங்கி வருகின்றனர்.

இந்த நீர்த்தாங்கிகள் மத்திய மருந்தகங்கள், கிராமிய வைத்திய சாலைகள், சுற்றயல் வைத்தியக் கூறுகள், வைத்தியசாலைகள், மாவட்ட வைத்தியசாலைகள் ஆகியவற்றுக்கு வழஙகப்பட்டு வருகின்றன. (3-203-117)

## வெவ்வேறு விபத்துக்களில் மூவர் காயமடைந்தனர்

வீதியின் குறுக்கே ஓடிய நாய்மீது மோட்டார்ச் சைக்கிள மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் தூக்கி வீசப்பட்டுப் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த 13ஆம், திகதி வேம்பிராயில் இடம்பெற்றது.

நாவற்குழி, தச்சன்தோப்பைச் சேர்ந்த எஸ்.சிவனேசகுமார் (வயது 36) என்பவரே இச்சம்பவத்தின் போது காயமடைந்தவராவார்.

இதேவேளை, அப்பகுதியில் இடம்பெற்ற மற்றுமொரு வீதி விபத்துச் சம்பவத்தில் மீசாலையைச் சேர்ந்த எஸ்.கரன் (வயது 32), எஸ்.லக்ஸ்மன் (வயது 25) ஆகியோரும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (3-203-117)

## வரணி முகாம் மூடப்பட்டது

தென்மராட்சி,பெப்.19

வரணி மகா வித்தியாலய நலன்புரி நிலையம் கடந்த 14ஆம் திகதியுடன் மூடப்பட்டுள்ளது.

சுனாமி கடல் பேரலைகளினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 45 குடும்பங்களும் மணல்காடு இடைத்தங்கல் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டதையடுத்து நலன்புரி நிலையம் மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இக்குடும்பங்களுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் சமையல் பாத்திரங்கள், பாய் மற்றும் லாம்பு உட்படப் பல பொருள்களை வழங்கினர். (3-117)

## இலந்தைக் குளம் வீதி சேதமடைந்த நிலையில்

அரியாலை,பெப்.19

கொழும்புத்துறை இலந்தைக்குளம் வீதியில் செபமாலை அன்னை ஆலயத்திற்குச் செல்லும் வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் இரவு நேரங்களில் இவ்வீதியால் பயணஞ்செய்ய முடியாது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன், வீதியின் குறுக்காக உள்ள பாலமும் உடைந்து குழி தோன்றியுள்ளது.

இவ்வீதியையும், பாலத்தையும் புனரமைப்புச் செய்வதற்கு இதுவரை எவரும் எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை எனவும் உரியவர்கள் இதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்றும் அப்பகுதி மக்கள் கோருகின்றனர். (3-203-17)

## குடத்தனையில் சடலம் மீட்பு

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் உயிரிழந்திருக்கலாம் எனக் கருதப்படும் ஒருவரின் சடலம் கடந்த புதனன்று குடத்தனைக் கடற்கரையில் கரையொதுங்கியது.

கடற்றொழிலாளர்கள் பருத்தித்துறை பொலீஸாருக்கு கொடுத்த தகவலையடுத்து பருத்தித்துறை நீதிவான் சம்பவ இடத்திற்கு நேரில்சென்று சடலத்தைப் பார்வையிட்டார். சடலம் ஆணா, பெண்ணா என அடையாளம் காண முடியாத அளவிற்கு உருக்குலைந்திருந்தது. (3-78)

## நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த ஏற்பாடு

அரியாலை,பெப்.19

யாழ்.நகரப் பகுதியில் ஏற்பட்டுள்ள நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக மலத்தியோன் புகை அடிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்.நகரின் கே.கே.எஸ். வீதி, ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி, முனீஸ்வரன் வீதி ஆகிய பகுதிகளில் நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் மலத்தியோன் புகை அடிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த மழையை அடுத்தே நகரப் பகுதியில் நுளம்பின் பெருக்கம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-203-17)

## எளிமையாக நடக்கும் மெய்வன்மைப் போட்டிகள்

தென்மராட்சி,பெப்.19

சுனாமி கடல்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இல்ல மெய்வன்மைப் போட்டிகளை தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகள் எளிமையான முறையில் நடத்தி வருகின்றன.

மாணவர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிப்பதற்காக பயிற்சிகள் நடத்தப்பட்டு இறுதிப் போட்டிகளையும் நடத்தி வருகின்றன.

விளையாட்டுப் போட்டிக்கு செலவிடும் பணத்தினைச் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (3-117)

## சரசாலையில் முன்பள்ளி திறப்பு

தென்மராட்சி,பெப்.19

'நிகொட்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட சரசாலை தெற்கு மகேஸ்வரி சனசமூக நிலையம், முன்பள்ளி ஆகியன கடந்த 14ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் இக் கட்டடங்களை வைபவரீதியாக நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன், சாவகச்சேரிப் பிரதேச செயலர் கு.ந.பாலச்சந்திரன் உட்படப் பலர் கலந்துகொண்டு உரையாற்றினர். (3-203-117)


வன்னிப் பெருநில
உதயன் வாசகர்களே!
விளம்பரதாரர்களே!
வியாபாரம் பெருக விளம்பரம் செய்திடுவீர்!
உங்கள்
சகல விளம்பரங்களையும்
எதுவிதசிரமங்களுமின்றி
உதயனில் பிரசுரித்துப்
பயன்பெற விரும்புகிறீர்களா?
உடன்விரையுங்கள்
எமது கிளிநொச்சி அலுவலகத்துக்கு
உதயன் கருமபீடம்
1 - 9 தங்ககம்,
முதன்மைச்சாலை, கிளிநொச்சி.
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
External Degree
2005, 2006 பிரிவுகளுக்கானது
(Jaffna University)
G.A.Q. | 1st in Com. | B.A. | B.Com.
ஆரம்பம்: 20.02.2005 10.00 a.m.
CIMA
Managerial Level
ஆரம்பம்: 20.02.2005 11.30 a.m.
aat (SriLanka)
Stage II & StageIII
Medium: Tamil & English
ஆரம்பம்: 19.02.2005 11.30 a.m.
Further Details
Director
JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPT.
464, Hospital Road,
(Near Commercial Bank)
Jaffna.
(C/41016)(42-21-18-16)

விற்பனைக்கு
LETTER PRESS பாவனையாளர்கள் பயன்படுத்தக்கூடிய AUTOMATIC CYLINDER [CHINA] மெசின், புத்தகங்கள் கிளிப் பண்ணும் மெசின் [STEPLER] விற்பனைக்குண்டு.
தொடர்பு:
கு.வி.அச்சகம்,
386, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(42242) T.P.: 077-6623711 (21-16-18)

பாதிக்கப்பட்ட பெண்களின் பொருளாதார மேம்பாட்டு நிதி திரட்டலுக்கான நாடக ஆற்றுகை
மீண்டும்
பிரமாண்டமான காட்சிப் படிமங்களுடன்
மேடைக்கு வரும்........
நிமிர்ந்த நன்நடை, நேர்கொண்ட பார்வை,
இடர் வெல்லும் அஞ்சா நெஞ்சு
வேண்டி மேடையில் குமுறும் ஓர் பெண்!

தே.தேவானந்தின்
பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்
த. றொபேட்டின் இசையில் நா.சிவசிதம்பரத்தின்
கவிவரிகளுடன் ஆற்றுகையாளர்களின்
வெளிப்படுத்தலுடன் அரங்கில் உயிர்பெறும் நாடகம்.
காலம்: 23.02.2005 (புதன்கிழமை)
காலை 10.30 மாலை 3.30
இடம்: கைலாசபதி கலையரங்கு,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நுழைவுச் சீட்டுக்களை அலுவலகத்திலும், மண்டப வாயிலிலும் பெற்றுக்கொள்ள முடியும்.
ரூபா - 20/-, 50/-
Active Theater Movement
TRRO LTD
ஊடக அனுசரணை:
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# மரண அறிவித்தல்கள்

## திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம்



மருதங்கேணி, வத்தராயனைப் பிறப்பிடமாகவும் பளை, தம்பகாமத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் வள்ளியம்மை 16.02.2005 புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் யோகநாயகி (தம்பகாமம்), ஏகாம்பரம் (சுவிஸ்), பொன்னுத்துரை (லண்டன்), காலஞ்சென்ற கணவதிப்பிள்ளை (தம்பகாமம்), நித்தியானந்தம் (வத்திராயன்), யோகராணி (தம்பகாமம்), யோகேஸ்வரி (கல்விபங்காடு), யோகலட்சுமி (உடுத்துறை), ஒப்பிலாமணி (நோர்வே), பேரி[illegible]நாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவக்கொழுந்து, ராசம்மா, மாலா, நாகம்மா, விமலாதேவி, முருகேசி, ஆண்டியய்யா, ராசேந்திரம், ஸ்ரீவள்ளிநாயகி, குலநதளகி ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவஞானசுந்தரம், சிவபாதம், அன்னலட்சுமி, புஸ்பலட்சுமி, வசந்தன், சாந்திகா, சாந்தன், குமரன், குட்டி, தாசன், ரூபன், செல்வா, ஜெகன், சுதாகர், சுகு, ஜெயா, பவானி, றஜனி, கணேஸ், ஜீவா, குமுது, குவேந்திரன், பானு, பிறேம், குட்டி, லதா, விஜி, அருள்காயத்திரி, கருசன், நிருஷன், தனுராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2005) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தம்பகாமம், பளை என்னும் முகவரியில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*தம்பகாமம், பளை.* (சி-41047)(24-21-16-18) சு.நித்தியானந்தம் (மகன்).

## திருமதி சாலினி தில்லைநாதன்



யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, கொண்டலடி விநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட சாலினி தில்லைநாதன் அவர்கள் 15-02-2005 செவ்வாய்க் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சு.இராசரெட்ணம் (சாரதி - இ.போ.ச. யாழ்.), இராசேஸ்வரி (பொன்னரியம் - டென்மார்க்), தம்பதிகளின் இளைய மகளும், வைத்திலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் மருமகளும் தில்லைநாதனின் அன்பு மனைவியும் சாருஜனின் பாசமிகு தாயாரும் தவதேவி, ரஞ்சினிதேவி (ஹொலண்ட்), ஜெயேந்திரன், விமலதாஸ் (ரஞ்சன் - டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு, கந்தசாமி (ஹொண்ட்), கௌசலா (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனியும் ஜெயந்தி (ரோசி - டென்மார்க்), சாரா (ஹொலண்ட்) ஆகியோரின் சிறிய தாயாரும் டென்மார்க்கைச் சேர்ந்தவர்களான நவரூபன், ஷருன், ஷஜித் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நெல்லுக்குளம் இந்துமயானத்தில் அடக்கஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

காளிகோயிலடி,
வேப்பங்குளம்,
வவுனியா.
T.P.: 024-4588081

(சி-41037)(21-18-16)

# தென்னாபிரிக்க அணித் தேர்வில் மாற்றம் கொண்டுவர வேண்டும்

## முன்னாள் வீரர் ஜொன்டிரோட்ஸ் கருத்து

மும்பை,பெப்.19

தென்னாபிரிக்க அணிக்கான வீரர்கள் தேர்வில் மாற்றம் கொண்டுவரவேண்டும் என்று அந்த அணியின் முன்னாள் வீரர் ஜொன்டி ரோட்ஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது கறுப்பு, வெள்ளை வீரர்கள் என்ற இட ஒதுக்கீடு அடிப்படையில் தென்னாபிரிக்க அணி தேர்வுசெய்யப்பட்டு வருகின்றது. இதன் காரணமாகத் திறமை இருந்தும் பலர் அணியில் இடம்பெற இயலாமல் போகிறது. இப்படிப் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர்தான் கெவின் பீட்டர்சன். வெள்ளை இனத்தைச் சேர்ந்த இவர் வாய்ப்புக் கிடைக்காததால் இங்கிலாந்து அணிக்காக விளையாடி வருகின்றார்.

சமீபத்தில் ஒருநாள் தொடரில் இவர் ஓட்டங்களைக் குவிக்க, தென்னாபிக்க அணியோ அற்புத வீரரை இழந்து தவித்தது. குளூஸ்னர்



போன்ற திறமைமிக்க வீரர்களையும் தென்னாபிரிக்கத் தேர்வாளர்கள் புறக்கணிக்கின்றனர். இதுபோன்ற தவறான தேர்வு அணியின் வளர்ச்சியைப் பாதிக்கும்.

கிரிக்கெட் உலகில் தென்னாபிரிக்க அணி சிறந்து விளங்கவேண்டுமானால், வீரர்கள் தேர்வு முறையில் மாற்றம் வேண்டும். சீர்திருத்தம் என்ற பெயரில் வீரர்களை அடிக்கடி நீக்குவது சரியல்ல. திறமை இருந்தும் பீட்டர்சன், குளூஸ்னர் ஆகியோருக்கு வாய்ப்புகள் கிடைக்கவில்லை.

ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ஸ்டீவ்வோ, லாரா, சச்சின் போன்றோர் அதிக பலம் கொண்டு பந்துகளை அடிப்பதில் வல்லவர்கள். இதனால் இவர்கள் அடிக்கும் பந்துகளைத் தடுக்க மிகவும் சிரமப்பட்டுள்ளேன். வேகப் பந்துவீச்சை தென்னாபிரிக்க வீரர்கள் எளிதாகச் சமாளித்துவிடுகின்றனர். ஆனாலும் கும்ளே, முரளிதரன், வோர்ன் ஆகியோரது தரம் வாய்ந்த சுழல்பந்துவீச்சில்தான் திணறுகின்றனர். பாகிஸ்தான் அணியின் அக்தர் சர்ச்சைக்குரியவராக இருந்தாலும் அணியின் வெற்றி நாயகன் அவர் என்றும் ரோட்ஸ் தெரிவித்துள்ளார்.

# உடுவில் கோட்ட வலைபந்தாட்டம்

வலி.தெற்கு,பெப்.19

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான வலைபந்தாட்டப் போட்டிகள் உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் 23ஆம், 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

அதேவேளை -

இக்கோட்டத்துக்குரிய பாடசாலைகளின் கரபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. (த-152)

# கலந்துரையாடல்

தென்மராட்சி,பெப்.19

தென்மராட்சிப் பிரதேச விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 22ஆம் திகதி காலை 10 மணிக்குப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர் ஆகியோரை இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார். (10-117)

# காட்சி உதைபந்தாட்டப் போட்டியில் 85 கோடி ரூபா நிதி திரண்டது

கடந்த டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் இந்தோனேஷியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த 2லட்சத்து 40 ஆயிரம் பேர் இறந்தனர்; லட்சக்கணக்கானோர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்குப் பல்வேறு விளையாட்டு அமைப்புகள் காட்சிப் போட்டிகள் மூலம் நிதி திரட்டின. சுனாமி நிவாரணத்துக்காக சர்வதேச உதைபந்து சம்மேளனம் காட்சிப் போட்டியை நடத்த முடிவுசெய்தது. இந்தப் போட்டி ஸ்பெயினில் உள்ள பார்சிலோனா நகரில் நேற்றுமுன்தினம் நடந்தது.

இந்தப் போட்டியில் உலகின் தலைசிறந்த வீரர்கள் கலந்துகொண்டனர். உலக் கிண்ணப் போட்டியில் கதாநாயகனாக ஜொலித்த ரொனால்டோ இதில் பங்கேற்கவில்லை.

ஓர் அணிக்கு பிரேஸிலைச் சேர்ந்த ரொனால்டினோ தலைவராகவும் மற்றோர் அணிக்கு உக்ரைனைச் சேர்ந்த ஆண்ட்ரி செவ் சென்கொ தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதில் ரொனால்டினோ லெவன் 6-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

ரொனால்டினோ அணியில் அவரும், கமரூனைச் சேர்ந்த எடோவும் சிறப்பாக விளையாடித் தலா 3 கோல்களை அடித்தனர். ஆண்ட்ரி அணியில் டெல்பியரோ, ஜோலா, ஹென்றி கேமரா ஆகியோர் கோல்களை அடித்தனர்.

இந்தக் காட்சி உதைபந்தாட்டப் போட்டியை 40 ஆயிரம் பேர் கண்டுகளித்தனர். இந்தப் போட்டி மூலம் 85 கோடி ரூபா நிதி திரண்டது. (10)

# ஒருநாள் போட்டிக்கு விக்கெட் காப்பாளர் தேடும் பணியில் இந்தியா மும்முரம்

புதுடில்லி,பெப்.19

பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் இந்திய அணிக்கு புதிய விக்கெட் காப்பாளரைத் தேடும் பணி தீவிரமாக நடந்துவருகிறது. இந்தத் தேர்வில் மூவரிடையே கடும் போட்டி நிலவுவதாகத் தெரியவருகிறது.

கிரிக்கெட் விளையாட்டில் தற்பொழுது விக்கெட் காப்பாளர் தனது பணியை மட்டும செய்தால் போதாது துடுப்பாட்டத்திலும் பிரகாசிக்க வேண்டும் என்று எல்லா அணித் தலைவர்களும் எண்ணுகிறார்கள். இரண்டிலுமே திறமைகாட்டும் வீரர்களைப் பெற்ற அணிகள் வெற்றிகளைக் குவித்து வருகின்றன. உதாரணமாக ஆஸ்திரேலியாவின் அடம் கில்கிறிஸ்ட் தனது அணியின் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு உதவக்கூடிய விக்கெட் காப்பாளராக உள்ளார்.

வயதைத் தொட்டாலும் இன்னமும் இளம் வரர்களுக்குப் போட்டியாகத் திகழ்கிறார். ஆஸி. அணி தோல்வியை நெருங்கும் போட்டியில் கூடத் தனது விளாசல் ஆட்டத்தை வெளிப்படுத்தி அணிக்கு வெற்றிதரக்கூடிய வித்தகர் இவர்.

டெஸ்டில் ஏழாவதாகவும், ஒருநாள் போட்டியில் ஆரம்ப வீராகவும் களமிறங்கும் இவர், எதிரணியினர் அஞ்சும் வீரர்களின் ஒருவர். அலெக்ஸ் ஸ்ருவர்ட்(இங்கிலாந்து), அன்டி பிளவர்(சிம்பாப்வே), சங்ககார(இலங்கை) போன்றவர்கள் இரண்டிலுமே சாதித்தவர்களில் சிலராக உள்ளனர். (10)




# யாழ்.இந்து, சென்.பற்றிக்ஸ் இடையேயான கிரிக்கெட் போட்டி சமநிலையில் நிறைவு

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்று வருகின்ற சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் யாழ்.இந்துக்கல்லூரி அணிக்கும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

கடந்த 11ஆம், 13ஆம் திகதிகளில் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இந்தப் போட்டி இடம்பெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றிக்ஸ் கல்லூரி அணி தனது முதல்இனிங்ஸில் 6 விக்கெட்டுக்களை இழந்து, 257 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

இதில் ஜக்சன் ஆட்டம் இழக்காமல் 101 ஓட்டங்களையும் ஜெனன்ராஜ் 47 ஓட்டங்களையும், ஜெஜந்திரன் 31 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்.இந்துக்கல்லூரி அணி வீரர்கள் ஜெனர்தன் 38 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், கமலகுமார் 55 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் தனதர்ஷன் 21 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணி தனது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 204 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது. இதில் ஜெனகன் 56 ஓட்டங்களையும், அருண்குமார் 28 ஓட்டங்களையும், உமாதரன் 28 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் பற்றிக்ஸ் கல்லூரி வீரர்கள் ஜக்சன் 17 ஓட்டங்களைக் கொடுத்து 4விக்கெட்டுக்களையும், பத்மமுரளி 60ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பற்றிக்ஸ் கல்லூரி அணி தனது இரண்டாவது இனிங்ஸில் 7 விக்கெட்டுக்களை இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது. இதில் லூட்சன் 26 ஓட்டங்களைத் தனது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தார்.

பந்து வீச்சில் யாழ்.இந்துக்கல்லூரி அணி வீரன் கமலகுமார் 21 ஓட்டங்களைக் கொடுத்து 3விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

12ஓவர்களில் 126 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக்கல்லூரி அணியினர் 6 விக்கெட்டுக்களை இழந்து 57 ஓட்டங்களை மட்டும்பெற்றனர்.

பந்துவீச்சில் பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரன் சுரேன் 13 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை விழ்த்தினார். (10-190)

# சிநேகபூர்வக் கிரிக்கெட் போட்டியில் சென்.ஜோன்ஸ் அணி இனிங்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம்,பெப்.19

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்றுவருகின்ற சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி ஒரு இனிங்ஸாலும் 67 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

கடந்த 11ஆம், 13ஆம் திகதிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இந்தப்போட்டி இடம்பெற்றது.

இந்தப் போட்டியின் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி தனது முதல் இனிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 274 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சஞ்சீவன் 70 ஓட்டங்களையும் கிரிசான் ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களையும் கிருஷாந்த 45 ஓட்டங்களையும் சகிந்தன் 28 ஓட்டங்களையும் நிருபன் 26 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

சஞ்சீவன், கிரிசான் ஆகியோர் 9 ஆவது விக்கெட்டுக்காக இணைந்து 117 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் மானிப்பாய் இந்துக்கல்லூரி வீரர்களான வினோத் 90 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் பார்த்தீபன் 57 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 127 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

அந்த அணி வீரர் பார்த்தீபன் 59 ஓட்டங்களைத் தனது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தார்.

பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரர்கள் சஞ்சீவன் 18 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் நிருபன் 14 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள்.

தொடர்ந்து தனது இரண்டாவது இனிங்ஸில் ஆடிய மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 80 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இதில் வினோத் 35 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரர்களான நிருபன் 9 ஓட்டங்கைள் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் மயூரதன் 17 ஓட்டங்களைக் கொடுத்து 3விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (த-190)

# ஊர்காவற்றுறைக் கல்விக் கோட்ட விளையாட்டுப் போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற விளையாட்டுப்போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

**கரபந்தாட்டம்**

**15 வயதுப்பிரிவு (ஆண்கள்)**

முதலாவது இடம் :- புனித அந்தோனியார் கல்லூரி, இரண்டாவது இடம்:- யாழ்ற்ரன் கல்லூரி, மூன்றாவது இடம்:- கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்.

**17 வயதுப் பிரிவு (ஆண்கள்)**

முதலாவது இடம்:- யாழ்ற்ரன் கல்லூரி, இரண்டாவது இடம்:- புனித அந்தோனியார் கல்லூரி, மூன்றாவது இடம்:-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்.

**19 வயது பிரிவு (ஆண்கள்)**

முதலாவது இடம்:- புனித அந்தோனியார் கல்லூரி, இரண்டாவது இடம்:-யாழ்ற்ரன் கல்லூரி, மூன்றாவது இடம்:-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்.

**15 வயதுப் பிரிவு (பெண்கள்)**

முதலாவது இடம்:-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம், இரண்டாவது இடம்:- யாழ்ற்ரன் கல்லூரி.

**17 வயதுப்பிரிவு (பெண்கள்)**

முதலாவது இடம்:- கரம்பன் சிறிய புஷ்பம் மகளிர் வித்தியாலயம், இரண்டாவது இடம் :- கலாநிதி ஆ.தியாக ராசா ம.ம.வி., மூன்றாவது இடம்:- யாழ்ற்ரன் கல்லூரி.

**19 வயதுப்பிரிவு (பெண்கள்)**

முதலாவது இடம்:- யாழ்ற்ரன் கல்லூரி இரண்டாவது இடம்:- கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.

**வலைப்பந்தாட்டம்**

**15 வயதுப் பிரிவு (பெண்கள்)**

முதலாவது இடம்:- கரம்பன் சிறிய புஷ்பமகளிர் வித்தியாலயம், இரண்டாவது இடம்:- புனித மரியாள் மகளிர் வித்தியாலயம், மூன்றாவது இடம்:- யாழ்ற்ரன் கல்லூரி.

**17வயதுப் பிரிவு (பெண்கள்)**

முதலாம் இடம்:- கரம்பன் சிறிய புஷ்பம் மகளிர் வித்தியாலயம், இரண்டாமிடம்:- யாழ்ற்ரன் கல்லூரி, மூன்றாம் இடம்:- கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.

**19 வயதுப் பிரிவு (பெண்கள்)**

முதலாம் இடம்:- கரம்பன் சிறிய புஷ்பம் மகளிர் வித்தியாலயம், இரண்டாமிடம் : கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி., மூன்றாம் இடம் :- யாழ்ற்ரன் கல்லூரி,

**கிரிக்கெட்**

முதலாவது இடம்:- புனித அந்தோனியார் கல்லூரி, இரண்டாவது இடம்:-யாழ்ற்ரன் கல்லூரி, மூன்றாவது இடம்:-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம் (10-190)

# மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.19

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் அதிபர் வ.கயிலேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகச் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை கலந்துகொள்வார். (10-117-190)

# வலைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.19

சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட, கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. (எ-190)

**MOON BEAUTY CARE இன்**
**பெண்களுக்கான அழகுக்கலை பயிற்சிகள்**

புதிய பயிற்சி நெறி ஆரம்பம்

பயிற்சிக் காலம்: One week
பயிற்சி வழங்குபவர்: பிரபல அழகுக்கலை பயிற்றுநரும் நடன ஆசிரியையுமான திருமதி B.அகிலா (Dip. in Beauty Culture Dip. in Dance Visaratha in Kathak).
இடம்: 92, 'பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி (இந்து சமய குருகுலம் அருகில், D.C.M. முன்)
One week பயிற்சி நெறி உள்ளடக்கம்

**BRIDLE DRESSING**
1. Hind
2. Cristian
3. Kuyarath
} பலவித Hair Style வேறுபட்ட நாகஜடை

**MAKE UP**
1. Oil
2. Normal
3. Stick
4. Dance
5. Film

**Note:**
▲ ஒரு பிரிவில் 10 பேர் மட்டும் அனுமதிக்கப்படுவர்.
▲ பயிற்சி பெற விரும்புவோர் தொடர்புகொண்டு வரவும்
மேலதிக விவரங்களுக்கு:
**0777-570138** (42145)(46-11)

## மரவள்ளிக் கறி உண்ட நால்வர் வைத்தியசாலையில்

தென்மராட்சி,பெப்.19

இரவு உணவுக்காக மரவள்ளிக் கிழங்கும் மீன் கறியும் சாப்பிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி ஆஸ பத்தியில் அனுமதிககப்பட்டுள்ளனர்.

மீசாலை வடக்கைச் சேர்ந்தவர்களான விநாயகமூர்த்தி மல்லிகாதேவி (வயது 54) இவரது பிள்ளைகளான வி.வதனி (வயது 21), வி.ரதிகரன் (வயது 18), வி.கீர்த்திகன் (வயது16) ஆகியோரே அனுமதிக்கப்பட்டுள்ளவர் களாவா. (10-117)

## மெய்வன்மைப் போட்டி

வலி.வடக்கு,பெப்.19

இணுவில் மத்திய கல்லூரியின் மேற்பிரிவு மாணவர்களுக்கான வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழைமை பிற்பகல் 2மணிக்கு இணுவில் கந்தசாமி ஆலயத்திற்கு அருகில் அமைந்துள்ள பவள விழா மைதானத்தில் அதிபர் துரை எங்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கலந்து கொள்ள வுள்ளார். (10-86)

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும்**
**அந்தியேட்டி வீட்டுக்கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்**

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 02 - 10 - 1925 |  | 21 - 01 - 2005 |

**திருமதி வீரகத்தி சின்னாச்சிப்பிள்ளை**
(இராசமணி)

21-01-2005 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் பிரிவுச் செய்தி அறிந்து எமது வேதனை உணர்வுகளைப் பகிர்ந்து. இறுதிக்கிரியை களில் கலந்து கொண்டும் பல வழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், அயல வர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகளை நவில்கின்றோம்.

அத்துடன் நாளை (20-02-2005) ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை ஊரிஞ் சம்மன் கோயிலடி அந்தியேட்டி மடத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த் தனைகளிலும் மதிய போசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வல்லிபுரப் பரியாரியார் ஒழுங்கை,
பருத்தித்துறை. (42133)(46)

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

**SALE SALE SALE SALE SALE SALE SALE**


**10%முதல்40% வரை**
**விலைக்கழிவில்:-**
**பாடசாலை மாணவருக்கான, கறுப்பு வெள்ளை சப்பாத்துக்கள், ஆண்கள், பெண்களுக்கான பாதணிகள் மலிவு விலையில் கொள்வனவு செய்திட நாடுங்கள்**

**DSI காட்சி அறை**
426, ஆஸ்பத்திரிவீதி
(பஸ்நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம். T.P: 6809

DSI SUPERSPORT
**DSI RANPA**
**பாதணிகள்**
**மலிவு விற்பனை**



# அறுபதாம் அகவையில் அழியாத நினைவுகள்



அமரர்
**முனுவல் எஸ்பீரியல்**
**(முன்னாள் உறுப்பினர், யா.மா.ச.)**

| அன்னை மடியில் | அரக்கர் பிடியில் |
|---|---|
| 19.02.1945 | 31.12.1989 |

எம்மை உருவாக்கிய உத்தமரே அப்பா!
இன்று உங்களுக்கு அறுபதாம் அகவையன்றோ
இன்று நீங்கள் எம்முடன் இருந்திருந்தால் - உங்களுக்கு
மணிவிழா எடுத்து மகுடம் சூட்டியிருப்போம் - ஊருக்குப்
பணிபுரிந்த உங்களை உரிமை கோரத் திராணியற்றோர்
படுகொலை புரிந்ததை மறப்போமா அப்பா?
கருவிழியின் இமையாகக் காத்துநின்றீர் ஐவரையும் - அன்னை
கருவினிலே உருவான அரும்பதையும் எதிர்பார்த்து நின்றீர் - அந்த
ஓரரும்பு இருமலராக முகிழ்ந்ததைக் காணுமுன்னே
கோரக்கொலை புரிந்த கொடுமைதனை மறப்போமா?
பதினைந்து ஆண்டுகளும் ஆதரிக்க எவருமின்றி - நீங்கள்
தேடி வைத்த செல்வத்தில் வாழ்ந்தோமே!
தேடிய செல்வமது தேய்கின்ற போதிலும் எமக்கோர் திருப்தி;
உங்கள் இலட்சியக் கனவுகளை ஈடேற்றிவிட்டோமென்று!
எங்கள் இதயத்தைப் பிழிந்துமக்குக் காணிக்கையாக்குகிறோம்
வையகத்தில் இல்லாவிடினும் வானகத்தில் நீரிருந்து
தெய்வமாய் எம்மை வழிநடத்தி வாருமப்பா.

உயிருள்ளவரை உங்கள் நினைவுடன்:
**அன்பு மனைவி, ஆருயிர் மக்கள்,**
**மருமகன்மார், ஆசைப்பேரன்.**

'அறிவகம்'
3. 2 ஆம் குறுக்குத் தெரு,
பாஷையூர், யாழ்ப்பாணம்.

(42187)

# கிழக்குப் படுகொலைகள் தொடர்பாக கண்காணிப்புக்குழு விசாரிக்க வேண்டும்

## முல்லை. கல்வி மேம்பாட்டுப் பேரவை கோரிக்கை

புதுக்குடியிருப்பு,பெப்.19

கிழக்குப் படுகொலைகள் தொடர்பாகப் போர நிறுத்தக் கண்காணிப்புக்குழு உடனடியாக விசாரணை நடத்தி அறிக்கை வெளியிடவேண்டும்.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டக் கல்வி மேம்பாட்டுப்பேரவை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைக் கோரியுள்ளது.

கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவில் இடம பெற்ற கண்டனக் கூட்டத்தில் வாசிக்கப்பட்டுக் கண்காணிப்புக் குழுவிடம் கையளிக்கப்பட்ட மகஜரிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மட்டக்களப்பு - அம்பாறை அரசியற்றுறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உள்ளிட்ட நான்கு போராளிகளும், தேசப்பற்றாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அரியநாயகம் சந்திரநேரு ஆகியோர் அரச கட்டுப்பாட்டுப் பகுதியான வெலிகந்தைப் பிரதேசத்தில் வைத்துக் குரூரமாகக் கொலை செய்யப்பட்டதை முல்லைதீவு மாவட்டக் கல்விச் சமூகம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

சுனாமிக் கடலலைத் தாக்குதலால் பாதிப்புற்றுத் துயரில் மூழ்கியிருக்கும் எம் மக்களை இப்படுகொலைகள் மேலும் பேரதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளன. இராணுவப் புலனாய்வுத்துறையின் அனுசரணையுடன் தேச விரோதக் கும்பல்களால் இப்படுகொலைகள் நிகழ்த்தப்பட்டதென்பது சர்வதேச மட்டத்திலும் ஏற்றுக்கொளளப்பட்ட உண்மையாகிவிட்டது. இதுபற்றித் தமக்கெதுவும் தெரியாதென இராணுவத்தினரும் அரசும் கபட நாடகமாடுவது வேடிக்கையான கேலிக்கூத்தாகவுள்ளது. தாங்கள் பக்கச் சார்பற்ற விசாரணையை மேற்கொண்டு உண்மையான இரகசியங்களை அம்பலத்துக்குக் கொண்டு வரவேண்டுமென வேண்டுகின்றோம்.

மக்கள் விரைவில் சமாதானம் ஏற்பட்டு விடுமென எதிர்பார்த்திருந்த வேளையில், போர் நிறுத்தத்தையே உதாசீனம் செய்து மீறும் செயலாக இப்படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டதையே சர்வதேச சமூகமும் கண்டிக்கின்றது. மீண்டும் யுத்தம் ஆரம்பித்துவிடுமா என அஞ்சுகின்றோம். இதுவரைகாலமும் எமது மாணவர்களின் கல்வி நிலை பாதிப்புற்றது போல இனியும் பாதிப்புறக்கூடாதென வேண்டுகின்றோம்.

இப்படுகொலைகளை ஐ.நா. ஸ்தபான செயலாளர் நாயகமும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பும் கண்டித்து அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்ற போது உள்ளூர் அரசியல்வாதிகளும், தேசவிரோதக் கும்பல்களும் மௌனம் சாதிப்பது அவர்களின் அனுசரணையுடன்தான் இப்படுகொலைகள் நடத்தப்பட்டதென்பதை நேரடியாகவே உண்மையை அறிந்துகொள்ள முடிகின்றது.

மேலும் இது போன்ற சம்பங்கள் இடம் பெறாதிருப்பதைத் தாங்கள் உறுதிப்படுத்த வேண்டுமென்றும் முல்லை மாவட்ட கல்விச் சமூகத்தினர் சார்பாக ஆன்பான வேண்டுகோளை விடுக்கின்றோம் - என்றுள்ளது.

(8-352-202)

# போராளிகளின் படுகொலைகள் தொடர்ந்தால் தனியரசு அமைப்பதைத் தவிர வேறுவழியில்லை

## கிளிநொச்சி தேசிய எழுச்சிப் பேரவை அறிக்கை

கிழக்குப் படுகொலைகள் போல் மீண்டும் நடைபெறுமாயின் தமிழீழ மக்கள் எமது தேசியத் தலைவரின் கரங்களை மென்மேலும் பலப படுத்தித் தனியரசு அமைப்பதைத் தவிர வேறு வழி தமிழர்களுக்கு இல்லை.

- இவ்வாறு கிளிநொச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை தெரிவித்துள்ளது.

மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட 4 போராளிகளும் முன்னாள் எம்.பி. சந்திரநேரு ஆகியோரும் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து மேற்படிப் பேரவைவிடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளது.

கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

07.02.2005 அன்று வெலிகந்த பகுதியில் பிள்ளையாரடி எனும் இடத்தில் படுகொலை செய்யப்பட்ட மட்டு-அம்பாறை அரசியல்துறைப பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உடபட நான்கு போராளிகளினதும் நாட்டுப் பற்றாளர் அ.சந்திரநேரு அவர்களினதும் படுகொலையை நாம் கடுமையாகக் கண்டிக்கிறோம். அதே வேளை, சமாதானத்துக்கான போர்நிறுத்த உடன படிக்கை செய்து மூன்று ஆண்டுகள் நிறைவு பெறுந்தறுவாயில் விலை மதிப்பற்ற எமது போராளிகளின் உயிர்களை நாம் அநியாயமாகச் சிங்கள அரசின் கூலிப் படைகளினதும் சமூக விரோதிகளினதும் தாக்குதல்களில் பலி கொடுத்தே போர் நிறுத்த உடன்படிக்கையைத் தக்கவைத்து வருகின்றோம்.

தொடர்ந்து எம்மால் இவ்வாறான படுகொலைகளை அனுமதிக்க முடியாது. எனவே, இவ்வாறான படுகொலைகள் தொடர்ந்து இடம் பெறுமாயின் போர்நிறுத்த உடன்படிக்கையானது தூர்ந்துபோகும் நிலை உண்டாகும் என்பதை நாம் மிகவும் ஆணித்தரமாக அரசிற்குக் கூறி வைக்க விரும்புகின்றோம் - என்றுள்ளது.

(8-202)

# போதிய பயிற்சிகளைப் பெற்றுப் பயிர் செய்தால் உற்பத்தியில் பெரும் விளைச்சலைப் பெறலாம்

## உதவி விவசாயப் பணிப்பாளர் சொல்கிறார்

பரந்தன்,பெப்.19

விவசாயிகள் போதிய பயிற்சிகளைப் பெற்றுப் பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டால் உற்பத்தியில் பெரும் விளைச்சலைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்கள உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) திருமதி சீ.ஆனந்தராசா தெரிவித்தார்.

அண்மையில் புளியம்பொக்கணை கமநல சேவை நிலையத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் தெரிவித்ததாவது:-

விவசாயிகள் போதிய பயிற்சிகளைப் பெறாமல் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதாலேயே உற்பத்தியில் பல சிரமங்களை எதிர்கொண்டு நஷ்டமும் அடைந்து வருகின்றனர்.

விவசாயத் திணைக்களம் காலத்திற்குக் காலம் காலநிலைக்கேற்ப - நோய் எதிர்ப்புக் கேற்ற - அதிக விளைச்சலைப் பெறக்கூடிய விதை பொருள்களை அறிமுகப்படுத்துகின்றது.

இதை விவசாயிகள் பயன்படுத்திப் பலனைப் பெறவேண்டும்.

இவ்வாண்டின் சிறுபோக நெற்செய்கையின் போது திட்டமிட்டு, திணைக்களம் சிபார்சு செய்த நெல் வர்க்கத்தைப் பயிரிட வேண்டும். அதற்கு வேண்டிய விதை நெல்லை வழங்குவதற்குத் திணைக்களம் ஒழுங்குகளைச் செய்துள்ளது - என்றார்.

(8-352-202)

# புனர்வாழ்வுக் கழகத்தின் வேலைத்திட்டத்தை உணவுத்திட்டப் பிரதிநிதிகள் குழு பார்வையிட்டது


வவுனியா,பெப்.19

வவுனியா மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வவுனியாவில் மேற்கொண்ட வேலைத் திட்டங்களை உலக உணவுத் திட்டப் பிரதிநிதிகள் கடந்த 14 ஆம் திகதியன்று பார்வையிட்டனர்.

'டி.ஆர்.சி' நிறுவன நிதியுதவியுடனும் உலக உணவுத் திட்டத்தின் பங்களிப்புடனும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் சேமமடுக்குளத்தில் அதிக நீரைப் பெறுவதற்காக முதலியாற்றைத் திசை திருப்பி அமைக்கப்பட்ட 1.5 கிலோ மீற்றர் நீளமான அணைக்கட்டு மற்றும் வவுனியா வடக்குக் கோவில் புளியங்குளத்தில் உலக உணவுத் திட்டத்தின் பங்களிப்புடனும் நிகொட் நிறுவன நிதியுதவியுடனும் தமிழர் புனர்வாழ்வுக்கழத்தால் அமைக்கப்பட்ட மலசல கூடங்கள் ஆகியவற்றை இக்குழு பார்வையிட்டதோடு மக்களின் கருத்துக்களையும் கேட்டறிந்தது.

இதில் உலக உணவுத்திட்டப் புனர்வாழ்வு அமைச்சுக் கண்காணிப்பாளர் இ.பரநிருபசிங்கம், வவுனியா மாவட்ட உலக உணவுத் திட்ட தொழில்நுட்ப ஆலோசகர் சி.புண்ணியசீலன், மாவட்டப் புனர்வாழ்வுச் செயலக நிர்வாக உத்தியோகத்தர் யோ.பத்மநாதன், மாவட்ட வேலைத் திட்டப்பரிசோதகர் எஸ்.செல்வகுமார், மாவட்ட உலக உணவுத்திட்ட சிரேஷ்ட தொழில் நுட்ப அலுவலரும் கண்காணிப்பாளருமான எஸ்.நடேசலிங்கம் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(8-204)



வட்டக்கச்சி நகரின் பிரதான வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் உள்ளது. சந்தைக்கு அண்மையில் வீதியின் குறுக்காக வாய்க்கால் நீர் அரித்து ஓடுவதை படத்தில் காணலாம். *(படம்: வட்டக்கச்சி செய்தியாளர்)*

## பொதுமண்டபம் இல்லை

வெள்ளாங்குளம்,பெப்.19

முழங்காவில் பிரதேசத்திற்கெனப் பொது மண்டபம் ஒன்று அமைக்கப்படவில்லையென அப்பிரதேச மக்கள் விசனமடைகின்றனர்.

பிரதேச நிகழ்வுகளை நடத்துவதற்குத் பொது மக்கள் சிரமப்படுவதாகவும் பொதுமண்டபத்திறகென ஒதுக்கப்பட்ட இடமும் சர்ச்சைக்குள்ளாகியிருப்பதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

(8-415-202)

## முழங்காவில் ம.வியில் விடுதி வசதியில்லை

வெள்ளாங்குளம்,பெப்.19

முழங்காவில் மகாவித்தியாலத்தில் விடுதி வசதியின்றி ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இப்பாடசாலையில் வெளியூர் ஆசிரியர்கள் கற்பிக்கும் அதேவேளை, அவர்கள் தங்கியிருப்பதற்கு வேண்டிய விடுதி வசதிகள் இல்லாமையால் அந்த ஆசிரியர்கள் சிரமத்துக்கு உள்ளாகிவருகின்றனர். (8-415-202)

## கிளிநொச்சியில் பாதீனியம்

பரந்தன்,பெப்.19

கிளிநொச்சி மாவட்டத்தில் கொடிய நச்சுத் தாவரமான பாதீனியம் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தற்போது கிளிநொச்சி நகரப் பகுதியிலும் அக்கராயன் பகுதியிலும் இச் செடி பரவலாக வளர்ந்து காணப்படுகின்றது.

கடந்த வருடங்களில் ஒரு சில இடங்களில் மட்டுமே காணப்பட்ட இப்பாதீனியச் செடி இவ்வருடம் பரவலாகக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.(8-352-202)

## இலங்கை வங்கியின் நடமாடும் சேவை நிறுத்தம்

வெள்ளாங்குளம்,பெப்.19

முழங்காவில் பிரதேசத்தில் இயங்கி வந்த இலங்கை வங்கியின் நடமாடும் சேவை நிறுத்தப்பட்டதால் அப்பிரதேச மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

40 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கிளிநொச்சி நகரிலேயே இலங்கை வங்கியின் கிளை இயங்குவதால் நடமாடும் சேவை அவசியம் தேவைப்படுவதாக மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (8-415-202)

## அதிபர் இடமாற்றம்

முழங்காவில்,பெப்.19

கிளிநொச்சி, வேரவில் இந்து மகா வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய ஏ.கே. ஜெயக்குமார் கடந்த 10 ஆம் திகதி முதல் வலிகாமம் வலயத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். (8-323)

## கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

## வீதி ஒழுங்குகள் தொடர்பான கருத்தூட்டல்

கிளிநொச்சி,பெப்.19

வீதி ஒழுங்குமுறைகள் தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

நீதிமன்றப் பதிவாளர் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன் போக்குவரத்துத் தொடர்பான கருத்துக்களை வழங்கினார்.

தொடர்ந்து ஏ-9 வீதியில் ஏற்பட்ட வீதி விபத்துக்கள் தொடர்பான புகைப்படக் காட்சியும் இடம்பெற்றது. (8-202)

☆ ☆ ☆

கிளிநொச்சி,பெப்.19

வீதி ஒழுங்குமுறை தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. பாடசாலை அதிபரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் போக்குவரத்துத் தொடர்பான கருத்துரையைத் தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன் வழங்கினார்.

தொடர்ந்து வீதி விபத்துக்கள் தொடர்பான புகைப்படக்காட்சியும் இடம்பெற்றது. (202)

## புனர்வாழ்வுக்கழக பணியாளர்களுக்கு கௌரவிப்பு

மன்னார்,பெப்.19

மன்னார் மாவட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஏற்பாட்டில் உருவாக்கப்பட்ட சொர்ணபுரி கிராம செயற்றிட்டத்தைப் பாராட்டி புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர், பணியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 7 ஆம திகதி சொர்ணபுரி கிராம அலுவலர் பிரிவில் நடைபெற்றது.

இக்கிராமத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் டெனிஸ் அகதிகள் பேரவையின் நிதியுதவியுடன் 68 மலசலகூடங்கள் அமைக்கப்பட்டதுடன் கிணறு அமைத்தல் போன்ற வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

இதனைவிட உலக வங்கியின் நிதியுதவியுடன் 400 சதுர அடிப் பரப்பில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 49 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இச் செயற்றிட்டங்களை முன்னெடுப்பதைப் பாராட்டியே இந்நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் சார்பில் உதவி திட்டப் பணிப்பாளரும் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர், பணியாளர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (8-204)

## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம் : பஞ்சலிங்கம் கேட்போர்கூடம்
காலம் : நாளை(20-02-2005)ஞாயிற்றுக் கிழமை
நேரம் : காலை 10.00 மணி

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

மூகவரி மாற்றத்தால் தனிப்பட்ட அழைப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுச் சமூகமளிக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தலைவர். செயலாளர், கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்.

(சி-41024)(46)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 02 1927



மறைவு 02 03 2004

அமரர் சின்னத்தம்பி செல்வி

திதி: பூர்வபக்ஷ ஏகாதசி 19.02.2005

எங்கள் இதயதீபமே! நீர்
எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஆகியும்
உம் நீங்கா நினைவுடன்...

'ராதி அகம்'
கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 08 1933



மறைவு 16 02 2000

அமரர் குமரையா கந்தசாமி

(உபதபால் அதிபர்– கௌதாரிமுனை)

திதி: ஏகாதசி

எப்பொழுதும் மறவாமல் நினைப்பதற்குமுன் ஆண்டு ஐந்து ஆனதப்பா
என்றும்பாசத்தால் உங்களை நெஞ்சில் தீபமாய் ஏற்றுகின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

12/3, சந்தணமாதா லேன்,
பாண்டியன்தாழ்வு, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(42228)

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

வீரப்பிறப்பு 23 02 1982



வீரச்சாவு 19 02 2001

துரைரத்தினம் நிஷாந்தி
(லெப்டினன்ட் புவிதா)

அவனியிலே அவதரித்த நீ அன்புகாட்டினாய் அன்று
பண்பின் சிகரமாய் பாசத்தோடு நீ பழகினாயே பலருடன்
காலனுக்கோ பொறுக்கவில்லைப்போலும் உம்மையீர்த்தான் எம்மைவிட்டு
எனினும் ஆண்டுகள் நான்கு ஆனபோதும் ஆறவில்லையே உன் பிரிவுத்துயர்.

இன்று(19.02.2005) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.

உன்பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

## 18 பாடசாலைகளில் ஞாயிறன்று சைவசமயப் போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.19

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினால் நடத்தப்படும் சைவ சமய அறிவுப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சை குடாநாட்டில் உள்ள 18 நிலையங்களில் நடைபெறவுள்ளது.

தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்புகளைச்சேர்ந்த நாலாயிரத்து 250 மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். இவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் யாவும் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் செயலாளர் சு.ஸ்ரீகாந்தன் அறிவித்துள்ளார்.

பரீட்சை நடைபெறவுள்ள 18 நிலையங்களின் விவரம் வருமாறு -

யாழ். இந்துக் கல்லூரி, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, இணுவில் இந்துக்கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி.

நயினாதீவு மகாவித்தியாலயம், நயினாதீவு ஸ்ரீகணேச கனிஷ்ட மகாவித்தியாலயம், கொட்டடி நமசிவாய வித்தியால்யம், சாவகச்சேரி மகளிர் க்ல்லூரி, கோப்பாய் நாவலர் வித்தியாலயம், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக்கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி, அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி, சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம். (எ-12)

## மக்கள்வங்கி உதவியாளர் தெரிவு அடுத்தமாதம் போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.19

மக்கள் வங்கியில் வங்கி உதவியாளர்களை (பயிலுநர்) தெரிவுசெய்வதற்கான போட்டிப்பரீட்சை அடுத்தமாதம் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது என வங்கியின் பிரதி தலைமை அதிகாரி அறிவித்துள்ளரர்.

மேற்படி பரீட்சைக்கான அனுமதி அட்டைகள், இப்பரீட்சைக்கென மக்கள் வங்கியினால் அனுமதிக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைத்திணைக்களம் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

இதேவேளை- போட்டிப்பரீட்சைக்குத் தகுதி வாய்ந்தவர்கள் எனத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் பரீட்சார்த்திகளின் பெயர் விவரங்களை மக்கள் வங்கியின் இணையத்தள முகவரியான www.peoplesbank.com இல் பார்வையிட முடியும் என்றும் -

தாம் பரீட்சை எழுத விரும்பும் மொழி குறித்தும் இதுவரை அறிவிக்காதவர்கள் மற்றும சுனாமி அனர்த்தம் மற்றும் ஏனைய காரணிகளால் இடம்பெயர்ந்திருப்போர் தமது முகவரி மாற்றம் குறித்தும் மக்கள் வங்கியின் பிரதி தலைமை அதிகாரியுடன் இன்று சனிக்கிழமைக்கு முன் தொடர்புகொள்ள வேண்டும் என்றும்-அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

புதுக்குடியிருப்பு.பெப்.19

முல்லைத்தீவில் சுனாமி இயற்கையனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்குக் 'கிறிஸ்துவுக்காக வாலிபர்' என்னும் அமைப்பு கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளது.

பாடசாலைப் பைகள், கொப்பிகள், எழுது கருவிகள் அடங்கலாகப் பல்வேறு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் சுமார் 3 ஆயிரத்து 500 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை இந்த அமைப்பு வழங்கியுள்ளது. (8-353-202)

## பல்கலைக்கழகத் தெரிவிலும் ஊழல் என்கிறார் பீரிஸ்

கொழும்பு,பெப்.19

பல்கலைக்கழக அனுமதியிலும் அரசு மூக்கை நுழைக்கிறது. தேவையான தகுதியும், அவசியமான புள்ளிகளும் பெற்றிருந்தாலும் கூட நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு முகங்கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இது பல்கலைக்கழகத் தெரிவுகளிலும், ஊழல் மோசடிகளுக்கு இடமளிக்கும் என அபாய அறிவித்தலொன்றை விடுகின்றார் பேராசிரியர் பீரிஸ்.

பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களைத் தெரிவுசெய்வதில் புதியமுறை ஒன்றை அரசு அறிமுகப்படுத்தவுள்ளது.

மாவட்ட அடிப்படையிலும், வெட்டுப்புள்ளி முறையிலும் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் இறுதியாக நேர்முகப் பரீட்சை ஒன்றுக்குத் தோற்றவேண்டும்.

அரசின் சிபாரிசின் பெயரில் அமைக்கப்படும் குழுவினரே இந்த நேர்முகப் பரீட்சைகளை நடத்துவர். இதனால், பல்கலைக்கழகத் தெரிவுகளிலும் அரசியல் செல்வாக்கும்தலையீடுகளும் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே, அரசின் இத்திட்டம் உயர் கல்விக்கும் ஆப்பு வைத்துவிடும். அரசின் இத்திட்டத்தை அரசியல், கட்சி வேறுபாடுகள் இன்றி அனைவரும் எதிர்க்க வேண்டும் - எனவும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் வேண்டுகோள் விடுத்தார். (எ-க)

## மனமுவந்து வாழ்த்துகின்றோம்

நாளை (20 - 02 - 2005) யாழ்.
இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில்
நிகழ இருக்கும்

திரு.சி.வித்தியாதரனின்

"சதுரங்கத்தில் இறுதியாட்டம்"

எனும் "நூல் வெளியீட்டு விழா" சிறப்புற நிகழ வாழ்த்துகின்றோம். இத்துறையில் இவர் பணி மேன்மேலும் தொடர இறைவன் அருள்புரிவாராக!

வாழ்த்துவோர்:-
MOON BEAUTY CARE TRAINING CENTER
இல. 92, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி.
T.P : 0777 - 570138

(42146)(46)

ஓம்
ஸ்ரீராம ஜெயம்

யாழ்ப்பாணம் ~ வண்ணை
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
ஏகாதசி உற்சவம் 19.02.2005

நிகழும் தாரண வருடம் மாசி மாதம் 07ஆம் திகதி
சனிக்கிழமை பி.ப. 5.15 மணிக்கு
ஏகாதசி உற்சவம் நடைபெறும்.
அடியார்கள் இவ்வுற்சவத்தில் ப்ங்குபற்றி
ஸ்ரீமத் நாராயணன் அருள்பெற்று ஸ்ரீமகாலக்ஷ்மி
விலாச சம்பன்னராக வாழ்வீர்களாக.

ஆதீன மகா சபை.

(சி-40735) (24-)

## 10ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 22 12 1942



இறப்பு 12 03 1995

அமரர் குப்புசாமி முருகையா

(முன்னாள் உரிமையாளர், லக்சுமி பவான், புன்னாலைக்கட்டுவன் சந்தி)

எங்கள் ஆருயிர் தெய்வமே அப்பா!
பத்தாண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஒரு நாளும் உங்கள் நினைவினின்றும் நீங்க முடியவில்லை!
எங்கள் தந்தையாக இறைவன் உங்களைத் தந்தார்
அன்பாக எங்களை வழிநடத்தினீர்கள் இறுதியில்
எங்களைப் பிரிந்து இறைவனடி சேர்ந்தீர்களே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திதி: 19 02 2005

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

(42192)

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி - சரோஜினி,
மகன் - ராஜேஸ்கண்ணன்,
மகள்மார்கள்.

## 16 ஆம் நாள் சபிண்டீகரண அழைப்பு



மண்ணில் 29-09-1930

விண்ணில் 04-02-2005

திருமதி தாமோதரம்பிள்ளை தங்கம்மா

04.02.2005 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி திருமதி தாமோதரம்பிள்ளை தங்கம்மா அவர்களின் பாசாண உத்வாஷண சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (19.02.2005) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். மேற்படி கிரியைகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்பதுடன், மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட அழைப்புக் கிடைக்காதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

'சாந்தி நிவாசா'
மேதர்ஸ் லேன், மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(42091)

# பாதிக்கப்பட்ட மக்களை அகதிமுகாம்களில் தொடர்ந்தும் வைத்திருக்கவே அரசு விரும்புகிறது

## குற்றஞ்சாட்டுகிறார் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி.

கொழும்பு,பெப்.19

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டவர்களைத் தொடர்ந்தும் அகதிமுகாம்களில் வைத்திருக்கவே அரசு விரும்புகின்றது. அழிந்துபோன வீடுகளைக் கட்டப் போதிய பணம் இருந்தும் மக்கள் தமது வீடுகளைக் கட்டவிடாமல் அது தடுக்கின்றது. கடற்கரையில் இருந்து 100 மீற்றர் எல்லைக்குள் வீடுகளைக் கட்டினால் பொலீஸாரைக் கொண்டு உடைத்து எறிவோம் என்றும் மிரட்டுகின்றது - எனக் குற்றஞ்சாட்டுகின்றார் ஐ.தே.க. பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே திஸ்ஸ அத்தநாயக்க இப்படிக் கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணமாகப் பல ஆயிரம் கோடி ரூபா கிடைத்துள்ளது. ஆனால், அந்த நிவாரணப் பணிகளை முன்னெடுக்க அரசிடம் உறுதியான கொள்கையும் இல்லை வேலைத்திட்டமும் இல்லை.

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்கள் தாமாகவே வேறு இடங்களுக்குச் சென்று குடியமர்ந்தாலன்றி அவர்களைப் பலவந்தமாக இடமாற்றிக் குடியமர்த்தமுடியாது.

தாம் வசித்த இடங்களில் அவர்கள் மீண்டும் குடியமர எந்தவிதமான தடையும் விதிக்கக்கூடாது.

உலகவங்கியும், ஐக்கியநாடுகள் நிறுவனமும் இதனை உறுதிப்படுத்தியுள்ளன. ஆனால், அரசோ கடற்கரையில் பாதுகாப்பு எல்லையை 100 மீற்றராகப் பிரகடனப்படுத்திவிட்டு மக்களைத் தொடந்தும் அகதிமுகாம்களிலேயே வைத்திருக்க முனைகின்றது.

நாட்டின் பெரும்பாலான பெருந்தெருக்களும், ரயில் பாதைகளும் கடலோரத்திலேயே அமைந்துள்ளன. குறிப்பாக, ஜனாதிபதி மாளிகையும் இந்த நூறுமீற்றர் தடை வலயத்துக்குள்தான் அமைந்துள்ளது.

பாதிக்கப்பட்ட ரயில் பாதைகளையும், பெருந்தெருக்களையும், பாலங்களையும் அதே இடத்தில் சீரமைக்கும் அரசு, ஏழை மீனவர்களை மட்டும் மீண்டும் தமது இடங்களில் வீடுகளைக் கட்டக்கூடாது என்று சட்டம் போட்டுத் தடுக்கின்றது.

அகதிமுகாம்களில் இருப்பவர்களுக்கு இன்னும் கூட அரசின் உதவிகள் கிட்டாத நிலையே தொடர்கின்றது. பொதுமக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். ஆனால், அரசோ எந்தவிதமான குறைகளுமே இல்லை என்று தம்பட்டம் அடிக்கின்றது.

இனிமேல் ஆர்ப்பாட்டம் நடத்தும் அகதிகளையும் அரசு சிறையில் அடைத்துவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை - என்றும் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார். (எ-க)

### சுனாமி அனர்த்தங்களால்

# வலி. தென்மேற்குப் பகுதியில் 9ஆயிரம் மீற்றர் வீதிகள் சேதம்

## பூர்வாங்க மதிப்பீட்டில் தகவல்

வலி.தெற்கு,பெப்.18

சுனாமி கடலலை அனர்த்தங்களால் வலிகாமம் தென்மேற்கு பிரதேசத்துக்குட்பட்ட 9 ஆயிரத்து 600 மீற்றர் நீளமுடைய பல வீதிகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன எனப் பிரதேச சபைச் செயலாளர் பி.விக்டர் அறிவித்துள்ளார்.

சுனாமி கடலலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொதுச் சொத்துக்களை இனங்கண்டு அதன் விவரங்களையும், அவற்றைப் புனரமைபபு செய்வதற்கு ஆகும் செலவின் மதிப்பீட்டையும் உடன் அனுப்பிவைக்குமாறு உள்ளூராட்சி மாகாண சபைச் செயலாளர், பிரதேச சபைச் செயலாளர் பி.விக்டரிடம் கேட்டிருந்தார்.

பிரதேச சபையினரால் சேகரிக்கப்பட்ட விவரங்களின் படி மாதகல், நுணசை, சித்திர மேளி, போயிட்டி, விளான், சேந்தான்குளம் போன்ற இடங்களில் உள்ள வீதிகள் பல முற்றாகச் சேதமடைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சேதமடைந்துள்ள 9 ஆயிரத்து 600 மீற்றர் நீளமுடைய இவ்வீதிகளைப் புனரமைப்புச் செயவதற்கும் ஒரு கோடியே 18 லட்சம் ரூபா செலவு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் பி.விக்டர் அறிவித்துள்ளார்.

500 மீற்றர் நீளமுடைய மாதகல் பிரதான வீதி (தொம்மையப்பர் வீதி) புனரமைப்பதற்கு 7 லட்சம் ரூபாவும் -

ஆயிரத்து 300 மீற்றர் நீளமுடைய மாதகல் நுணசை வீதி புனரமைப்புக்கு 19 லட்சம் ரூபாவும் -

200 மீற்றர் நீளமுடைய மாதகல் சித்திரமேளி - போயிட்டி வீதி புனரமைப்புக்கு 26 லட்சம் ரூபாவும் -

3 ஆயிரத்து 100 மீற்றர் நீளமுடைய விளான் - சேந்தான குளம் - சென். ஹென்றீஸ் வீதி புனரமைப்புக்கு 39 லட்சம் ரூபாவும் -

2 ஆயிரத்து 100 மீற்றர் நீளமுடைய மாதகல் - காஞ்சிபுரம் வீதி புனரமைப்புக்கு 27 லட்சம் ரூபாவும் - தேவை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (3-152)

# வலி. தெற்கில் பழமரச் செய்கையை ஊக்குவிக்க விசேட திட்டம்

வலி.தெற்கு,பெப்.19

வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில் பழமரச் செய்கையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எலுமிச்சை, தோடை, மா, பலா, கொய்யா, தென்னை, தேக்கு போன்ற நல்லின மரக்கன்றுகளை இலவசமாகவோ, மானிய அடிப்படையிலோ மக்களுக்கு வழங்கி அவற்றை வளர்ப்பதற்கு ஊக்கமளிக்க உள்ளதாக வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் அறிவித்துள்ளார்.

இப்பிரதேசத்தில் உள்ள 75 பயனாளிகளுக்கு இவை வழங்கப்படவுள்ளன. விவசாய சம்மேளனங்கள் தத்தம் பகுதியில் உள்ள பொருத்தமான பத்துப் பயனாளிகளைத் தெரிவுசெய்து அவர்களின் பெயர் பட்டியல்களை உடுவில் கமநல சேவை நிலையத்தில் ஒப்படைக்குமாறும பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (3-152)

## வங்கிப் புத்தகங்களை ஒப்படைக்கக் கோரிக்கை.

வலி. மேற்குப் பிரிவில் உள்ள பதிவு செய்யப்பட்ட கிராம மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் வங்கிக் கணக்குப் புத்தகங்களைப் பிரதேச செயலகத் திட்டமிடற் கிளையில் ஒப்படைக்குமாறு கிராம அபிவிருத்தி அதிகாரி என்.தேவநாயகம் தெரிவித்துள்ளார்.

வங்கிக் கணக்குப் புத்தகங்களைக் கொண்டு வந்து ஒப்படைக்காத சங்கங்களின் பதிவுகள் இரத்துச் செய்யப்படும் என்றும் கிராம அபிவிருத்தி அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (3-203-175)

## சிற்ப ஆக்கப்போட்டி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சித்திரக் கலைத்துறை, பாடசாலை மாணவர்கள் மற்றும் வெளியாள்களிடையே சிற்ப ஆக்கப் போட்டிகளை நடத்தவுள்ளது.

திறந்த போட்டிகளாக நடைபெறவுள்ள சிற்ப ஆக்கப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் விதிமுறைகளுக்கமைவாக அமைக்கப்படும் சிற்பங்களை அடுத்த மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் கல்லூரி நுண்கலைத்துறை இணைப்பாளரிடம் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இந்தப் போட்டி தொடர்பான மேலதிக விவரங்களை கல்லூரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (3-204)

## கூட்டம்

வலி.தெற்கு,பெப்.19

மானிப்பாய் கிழக்கு பாரதி சனசமூக நிலைய விசேட பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு இ.வேல்குமார் தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (3-152)

# மரணத்தை எதிர்பார்த்து மனிதத்துடன் வாழ்வோம்

### தவக்காலச் சிந்தனை

### பதினோராம் நாள்

ஒப்புரவின் காலமாகிய தவக்காலம் எமக்கு பல அழைப்புக்களை விடுக்கிறது. மனிதன் - மனிதனோடும் இறைவனோடும் திறந்த மனதோடு ஒப்புரவு கொள்ளவேண்டும்.

நாம் தொடர்ந்து பூமியில் வாழப் போகிறவர்கள் அல்லர். எமது வாழ்வில் முற்றுப்புள்ளி எந்நேரமும் வைக்கப்படலாம். அந்த இறுதி நேரம் வரை காத்திராது இன்றே நாம் மனமாற்றம் பெறவேண்டும். பாவங்களற்ற தூய மனத்தவராய் எந்நேரமும் மரணத்தை எதிர்கொள்ளத் தயாராய் இருக்க வேண்டும்.

எமது வாழ்வை ஆய்வு செய்து பார்ப்போம். நாம் மரணத்தைச் சந்திக்க ஆயத்தமா? அதற்குப் தடையாய் இருப்பது என்ன? அவற்றை இனங்கண்டு எம்மிலிருந்து நீக்குவோம்.

'மரணம் வாழ்வின் முடிவல்ல; நித்திய வாழ்வின் ஆரம்பம். அது விண்ணக வாசலின் தங்கத் திறவுகோல்' அந்த மகிமையை அடைய மனிதம் காப்போம். பகைமையுடன் இறப்பதால் யாருக்கு லாபம்.

எனக்கு இன்னும் வயது இருக்கிறது இறுதியில் ஏற்புடைய வாழ்வு வாழலாம். அதுவரை அனுபவிப்போம். பேர், புகழ், பணத்தை எவ்வழியிலாது நிலை நாட்டுவோம் என்று எண்ணுவது தவறாகும்.

கடிகாரம் முன்னோக்கி ஓடிக்கொண்டிருக்க எமது ஆயுள் பின்னோக்கி சென்று கொண்டிருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது.

சுனாமிப் பேரலை வயது வித்தியாசம் பார்த்தா மக்களை அள்ளிச் சென்றது? மழலைகள், சிறுவர்கள், இளையோர், முதியோர், மதவாதி, மிதவாதி, இனவாதி, மொழிவாதி எவரையும் அது விட்டு வைக்கவில்லை.

இந்த அனர்த்தம், நாம் அனைவரும் மரணிக்கவே பூமியில் அவதரித்துள்ளோம் என்பதை எந்நேரமும் எமக்கு நினைவுபடுத்துகிறது.

எனவே, எமது வாழ்நாளின் எஞ்சிய நாள்களைத் தகுந்த முறையில் பயன்படுத்துவோம். அதற்கான ஆன்மீக கட்டுமானங்களை கல்வாரியின் அடித்தளத்தில் இருந்து தொடங்குவோம்.

எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை.

# மரங்களில் சிக்குண்டிருந்த வலைகளை எடுத்து மீண்டும் தொழில் செய்கிறோம்

## இளம் மீனவரின் இதயக் குமுறல் இது!

சுனாமி இயற்கையனர்த்தம் எல்லோரையுமே உலுக்கி விட்டு ஓய்ந்துவிட்டது. ஆயினும், மீண்டும் இன்று வருமோ? நாளை வருமோ என்ற ஏக்கம் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவர் நெஞ்சிலும் இன்னும் தேங்கி நிற்கிறது.



இந்த அனர்த்தத்தினால் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தம்மைச் சிறிதளவேனும் தேற்றி மீண்டும் தம் கடலன்னையை நாடிச் செல்கின்றனர்.

இதனையறிந்த நாம் இந்த மீனவர்களை நேரில் சென்று சந்திக்கச் சென்றோம்.

ஆழியவளையைச் சேர்ந்த தே.சுதன் (வயது 29) என்ற மீனவரைச் சந்தித்து தொழில் நிலைவரங்கள் இப்போது எப்படி இருக்கிறது என்று கேட்டோம். அவர் கூறிய கருத்துக்களை இங்கு தருகிறோம்.

தற்போதும் நலன்புரி நிலையத்தில்தான் தங்கியிருக்கின்றோம். சுனாமி அனர்த்தத்தின் போது தொழில் வளங்கள் எல்லாமே நாசமாகி விட்டன. எனக்கு இறால் வலை மட்டுந்தான் மிஞ்சியது.

ஏனைய வலைகள், இயந்திரங்கள், படகுகள் என எவையுமே மிஞ்சவில்லை.

மிஞ்சிக் கிடக்கும் வலையைக் கொண்டு இறால் பிடித்தால்தான் எமது சீவியத்தை சமாளிக்கலாம்.

மெல்ல மெல்ல எமது தொழிலை மேற்கொள்ளாவிடில் எமது வருங்காலப் பொருளாதாரம் மோசமாகும். இவற்றைக்கருத்திற் கொண்டு இப்போது இறால் பிடிக்கின்றோம்.

தற்போது நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. இன்னும் கொஞ்ச நாளில் நிவாரணங்கள் நிறுத்தப்பட்ட பிறகு நாம் யாரை நம்பிச் சீவிப்பது? இப்பொழுது ஏதேனும் கொஞ்சக்காசாவது சேர்ததால்தான் எமது வாழ்க்கையைக் கொண்டு போகலாம்.

சுனாமியின் பின் எஞ்சிய வலையை எடுத்துத் துப்புரவு செய்து தற்போது 25 பேரளவில் இந்த இறால்பிடித் தொழிலைச் செய்கின்றோம்.

ஏனையோருக்கும் தொழில் செய்ய விருப்பம். ஆனால், தொழில் உபகரணங்கள் அழிந்துள்ளதால் தொழில் செய்ய முடியாத நிலையில் அவதிப்படுகின்றனர். உதவிகள் கிடைத்தால் அநேகமானவர்கள் தொழில் செய்வார்கள்.

★ *கேள்வி:* உங்கள் தொழிலுக்கு அரச மற்றும் தொண்டு நிறுவனங்கள் உதவிகள் செய்துள்ளனவா?

✪ *பதில்:* இதுவரைக்கும் இல்லை. இலங்கை அரச அதிகாரிகளோ அல்லது தொண்டு நிறுவனங்களோ எமக்குக் கடற்றொழிலை மீண்டும் மேற்கொள்ள எந்த உதவியும் செய்யவில்லை. இந்த இறால் வலைகள் கூடத் தென்னம்வேர், பனை வடலிகளில் சிக்கிக் கிழிந்த நிலையில்தான இருந்தன. அவற்றை எடுத்து மீண்டும் சீராக்கி வைத்திருக்கின்றோம்.

கடலில் பெரிதாக வருமானம் கிடைப்பதில்லை. எமது தொழில் (வலைகள்) முழுமையானதாக இல்லை.

மு.கந்தசாமி
- பரந்தன் செய்தியாளர் -

கடலில் தொலைவிற்குப் போய் தொழில் செய்வதற்குப் பயமாக இருக்கின்றது.

தொழில் உபகரணங்கள் இருந்தால் நன்றாகத் தொழில் செய்யலாம். எமக்கும் கடலின் அச்சம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும்.

சுனாமியால் எனது மனைவி காயப்பட்டுள்ளார். எனது பெண் குழந்தை இறந்துள்ளது. எமது உடன்பிறப்புக்கள் எமது கண்முன்னால் இறந்தார்கள்.

இயற்கையின் இந்த அழிவு எல்லோரையும் கலங்கவைத்ததுடன் அகதிகளாக்கிவிட்டது. நாம் இப்போது கையேந்தி உண்ண வேண்டிய நிலையில் இருக்கின்றோம் - என்றார்.(த-352)

# ஹற்றன் நஷனல் வங்கி

## யாழ்ப்பாணம்

(வரையறுக்கப்பட்டது)

### அடகுப்பொருள்களை மீட்டல்/விற்பனைக்கான அறிவித்தல்

**எமது கிளையில் அடகு சேவை வசதிபெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு.**

நீங்கள் பெற்றுள்ள அடகுக் கடனுக்குரிய சீட்டின் மறுபக்கத்தில் குறிக்கப்பட்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருள்களை ஒரு வருட காலத்திற்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்படவேண்டும் என்பதை மீண்டும் அறியத்தருகின்றோம்.

உங்களால் பெறப்பட்ட கடனின் முழுப் பகுதியையும் உடனே செலுத்த முடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் செலுத்திக் கடனின் காலாவதித் திகதியினை நீடித்துக் கொள்ளலாம்.

ஒரு வருட காலத்திற்கு மேற்பட்ட அடகுப் பொருள்களை மீட்க/காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுப் பொருள்கள் பங்குனி முதல் வாரத்தில் ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றோம்.

ஏலத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(சி-41052)(21-17-18) — முகாமையாளர்.


**MICRO CODE TECHNOLOGY COMPUTER ACADEMY - JAFFNA**

சான்றிதழ் வழங்கும் வைபவம் - 2005

இன்று (19.02.2005) சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு.
இடம்: மறைக்கல்வி நடுநிலையம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
முதன்முதலாக யாழ்.நகரில் இதோ அறிமுகஞ்செய்யப்படுகிறது.
TALLY 6.3 - பிரிவு I ஆரம்பம் 25.02.2005.
(Indian Qualified Lectures)
உங்களுக்கான அனுமதிக்கு முந்துங்கள்!

1. **NORTHERN TECHNOLOGY (PVT) LTD.** KANNATHIDDY ROAD, JAFFNA.
2. **SKY COMPUTER.** KACHCHERIYADY, CHUNDIKULY.
3. **NORTHERN TECHNOLOGY.** 34, PUNGANGULAM ROAD, EACHAMODDAI JUNCTION, JAFFNA.
4. **NORTHERN TECHNOLOGY.** 88, TEMPLE ROAD., JAFFNA.

(C/41055) (42-21-17-18)


## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.19

மானிப்பாய் றோட்டறக்ட் கழகத்தின் அனுசரணையுடன் யு.கேயில் உயர்கல்வி மற்றும் தொழில்வாய்ப்புப் பற்றிய கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (8-202)

## மனையியல் கண்காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.19

நல்லூர்ப் பிரதேச செயலக மாதர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் தையல், மனையியல் பொருள் கண்காட்சி இன்று சனிககிழமை முற்பகல் 10 மணிக்குக் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேலதிக அரச அதிபர் ஆ சிவசுவாமி கலந்துகொள்ளவுள்ளார்.

இந் நிகழ் வில் பயிற்சி பெற்ற மாணவாகள் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கலும இடம்பெறும்.(3-203-139)

Jayoda **ஜயோதா** ජයෝද

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7632357 முதல் 7644212 வரை
சீட்டிழுப்பு இல. 110 திகதி 17-2-2005

வெற்றி எண்கள் **8 9 5 3 6 8** சுப்பர் எண் **10**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,89,33,625/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,89,33,625/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/- | 4,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 103 | 5,000/- | 5,15,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,034 | 500/- | 5,17,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,317 | 50/- | 5,15,850/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 102,233 | 10/- | 10,22,330/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 99 | 1,000/- | 99,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,041 | 100/- | 1,04,100/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,228 | 20/- | 2,04,560/- |
| மொத்தம் | 125,082 | | 50,75,440/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 50,75,440/-

இந்த திங்கட்கிழமை
சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,92,20,475/-**

தொடர் இல. 6684952 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 பெப்ரவரி 21 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

7643871-0-53
7634890-6-39
7643583-7-68
7641385-3-68
7639782-0-14
7636729-4-65
7635717-3-45
7637289-7-54

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

## பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்,பெப்.19

சமூக அபிவிருத்தி மன்ற அங்கத்தவர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு மன்றத்தின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ள இப் பயிற்சி வகுப்பில் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-203)


**ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்**

இந்தியாவிலிருந்து வந்துள்ள
ராமகிருஷ்ண சாஸ்திரிகள்

கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன் – மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு, கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள் ரேகை, எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்து கொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது.

அறை எண் 5, பிள்ளையார் இன்,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
**Room No. 5, Pillaiyar Inn.** 31, Manipay Road, Jaffna.
Mobile: 0776 923623. (42265) (26-18-17-21)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாக்கியலட்சுமி நடராஜா

காரைநகரைப் பிறப்பிடமாகவும் இல.31, வைரவப் புளியங்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியலட்சுமி நடராஜா 17.02.2005 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து நடராஜா (நாகமுத்து அன் சன்ஸ்) அவர்களின் அன்பு மனைவியும் நாகேந்திராஜா (கனடா), நாகேஸ்வரி, நாகராஜா (லண்டன்), கனகேஸ்வரி, கருணாகரன் (லண்டன்), நவமலர் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் தேவராசா (செலான் வங்கி வவுனியா), வேலாயுதம் (தொலைத்தொடர்பு பரிசோதகர், கொழும்பு), சந்திரசேகர் (பொறியியலாளர், கனடா), வசந்தி (கனடா), துஷியந்தி (லண்டன்), தர்ஷினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் பைரவி, ஆரணி (வ/ இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவிகள்), மேனன், புருசோத்தமன் (சென்.தோமஸ் கல்லூரி மாணவர்கள்), கனடாவைச்சேர்ந்த அபிராமி, அஜந்தா, அரவிந், ஆனந், லண்டனைச் சேர்ந்த அக்சாயினி, அபித்தாயினி, மித்ரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற கந்தசாமி நவரத்தினம், சுந்தரலிங்கம், நாகம்மா, சிவபாக்கியம், ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றக்கொள்ளவும்.

தகவல்:
ம.தேவராசா
(மருமகன்).

இல:31, வைரவப்புளியங்குளம்,
வவுனியா. (42258)(21-18)

## சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை (ராசா)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் உடுவிலைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை (ராசா) அவர்கள் நேற்று (18.02.2005) வெள்ளிக்கிழமை காலை வட்டக்கச்சியிலுள்ள அவரது மருமகனின் இல்லத்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் விமலாதேவியின் அன்புக் கணவரும் பார்த்தீபன், பரஞ்சோதிமலர் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் செந்தில்நாதன், சூரியகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும் சிந்துஜா, மதுயா, வாசவன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வட்டக்கச்சி, ஆறுமுகம் றோட்டில் உள்ள கி.செந்தில்நாதனின் இல்லத்தில் நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.பார்த்தீபன்
(மகன்).

ஆறுமுகம் றோட்,
வட்டக்கச்சி. (42257)(21-18)

# யாழ்.வாழ் மக்களுக்கு

## யூசிமாஸ் மன கணிதத்திற்கான ஆரம்ப விழா

**20-02-2005** அன்று பி.ப. 3.30 மணி
**இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.**

பிரதம விருந்தினர்:
**திரு.இராஜரட்ணம் சிவச்சந்திரன்** அவர்கள்
(கலைப்பீடாதிபதி யாழ்.பல்கலைக்கழகம்)


சிறப்பு விருந்தினர்கள்:
**உயர்திரு.நடராஜா ரவிராஜ்** அவர்கள்
(நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்ப்பாணம்)
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாசாரிய சுவாமிகள்**
(ஆதீனகர்த்தா நல்லை குருமகா சந்நிதானம்)
**அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம்** அவர்கள்
(அதிபர் சென்.பற்றிக்ஸ் கல்லூரி)
**அருட்பேராயர் எஸ்.ஜெபநேசன்** அவர்கள்
(தென்னிந்திய திருச்சபை, யாழ்ப்பாணம்)
**டாக்டர் ஜே.சோமசுந்தரம்** அவர்கள்
(வைத்திய ஆலோசகர் மனவளம் யாழ். போதனா வைத்தியசாலை)

கல்வி நிறுவனங்களின் முதல்வர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் அனைவரும் வந்து இந்நிகழ்ச்சியை கண்டு பயன்பெறுமாறு வேண்டுகின்றோம.

**அனைவரும் வருக!**

யாழ்ப்பாணம்
திரு.சண்முகராஜா கெங்கேஸ்வரன்
சந்தை ஒழுங்கை, மானிப்பாய்.
தொ.பேசி: 0212223201,
0214591613,
கைபேசி: 0777797136 (சி-41054)(21-18)

கொழும்பு
Genesia Academy Lanka (Pvt)Ltd.
National Franchise UCMAS Sri Lanka,
50,2/3, 2nd Floor, Colombo Plsza Building,
Galle Road, Colombo -06
Phone: 4527676



# யாழ்ப்பாணத்தில் கணனித் துறைசார்ந்த நிபுணத்துவப் பற்றாக்குறை நிலவுகிறது

யாழ்ப்பாணம்,பெப்.19

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதியளவு கணனிகளும் தொழில்நுட்ப அறிவுகளும் இருந்த போதிலும் இதுவரை இத்துறையில் ஒரு சிறந்த இலக்கினை அடைய முடியாமலுள்ளது. இதற்குத் துறைசார் நிபுணத்துவப் பற்றாக் குறையே காரணம்.

இவ்வாறு தெரிவித்தார் ஐ.ஐ.எஸ். நிறுவனத்தின் இயக்குநர் விக்னேஷ். மேற்படி நிறுவனத்தின் 9 ஆவது ஆண்டுவிழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் பரியோவான் கல்லூரி யூபிலி மண்டபத்தில் நடந்தபோது அவர் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது-

தகவல் தொழில்நுட்பத்துறை சிறந்த முறையில் ஓர் அடித் தளமிடப்பட வேண்டுமெனின் பாடசாலை மட்டத்திலேயே அது நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். சிறந்ததொரு தகவல் தொழில்நுட்பக் கல்வியை அதன் அடிப்படையை மாணவர்களுக்குப் பாடசாலை மட்டத்திலேயே வழங்க முடியும். காரணம் மாணவர்கள் தமது காலப்பகுதியில் நீண்ட பகுதியை பாடசாலை மட்டத்திலேயே செலவிடுகின்றனர். இக்காலத்திலேயே கணனியின் அடிப்படைத்தளமிட வாய்ப்பானகாலமாகும். தனியார் கணனிக் கல்வி நிறுவனங்கள் மேலதிக அல்லது துறைசார் அல்லது உயர்கல்வியினையே வழங்க முடியும். யாழ்.மாவட்டத்தைப் பொறுத்த வரையில் போதியளவு கணனிகளும் தொழில்நுட்ப அறிவுகளும் இருந்த போதிலும் இன்று வரையில் ஒரு சிறந்த இலக்கினை அடைய முடியாமலே உள்ளது. இதற்குக் காரணம் தொழில்நுட்ப வசதிகள் இருந்த போதிலும் அவற்றைத் தகுந்த முறையில் செயற்படுத்தக் கூடிய அல்லது நடைமுறைப்படுத்தக்கூடிய துறைசார் நிபுணத்துவ பற்றாக்குறையேயாகும். இந்நிலை பாடசாலைகளில் மட்டுமன்றி பல்வேறு மட்டங்களிலும் காணக்கூடியதாகவுள்ளது. இந்நிலை மாறி துறைசார் வல்லுநர்கள் உருவாக்கப்படுவார்களேயானால் யாழ். மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ளமுடியும். இதற்குத் தனியார் கணனிக் கல்வி நிறுவனங்களின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாததாகும்.

இன்று நாட்டில் இளைஞர், யுவதிகளின் ஒரு சிறப்பான எதிர்கால வழிகாட்டலில் தனியார் உயர்கல்வி நிறுவனங்களின் பங்களிப்பினை யாரும் மறுத்துவிட முடியாது. 80 களின் ஆரம்பகாலப் பகுதியினை எடுத்துப்பார்ப்போமேயானால் உயர்கல்வி கற்கும் மாணவர்களின் வீதம் மிகக் குறைவாகவே இருந்துள்ளது. காரணம் யாதெனில் இலங்கை அரச பல்கலைக் கழகங்களில் மாத்திரமே இவ்வுயர்கல்வி கற்பிக்கப்பட்டதால் வெட்டுப்புள்ளி அடிப்படையில் மிக குறைந்தளவு மாணவர்களே தெரிவுசெய்யப்பட்டனர்.

ஆனால் இன்று நிலைமை முற்றாக மாற்றமடைந்துள்ளது. க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்த எந்தவொரு மாணவனும் தொழில்சார் பட்டக்கல்வி ஒன்றினைச் செய்து முடிக்கக் கூடிய வாய்ப்புக்களை தனியார் உயர்கல்வி நிறுவனங்களே ஏற்படுத்தியுள்ளன என்பதை யாரும் மறுக்க முடியாது. அதுமட்டுமல்லாது பெரும்பாலான தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் சர்வதேச பல்கலைக்கழகங்களுடனும் ஏனைய சர்வதேச கல்விசார் நிறுவனங்களுடனும் இணைந்து செயற்படுவதால் நவீன மயப்படுத்தப்பட்ட பாட விதானங்களுக்கமைவாக கற்கை நெறிகள் கொண்டுசெல்லப்படுகின்றன.

இதன் மூலம் கற்கைநெறி ஒன்றினை முடித்துக்கொள்ளும் மாணவன் நவீன தொழில்நுட்ப யுகத்துக்கு ஏற்ற வகையில் தன்னைத் தயார்படுத்திக்கொண்டே வெளியேறுகின்றான். அது மட்டுமல்லாது கற்கை நெறிகள் குறிப்பிட்ட காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படுவதால் மாணவர்கள் தமது காலத்தை வீணாக்காது குறைந்த வயதிலேயே துறைசார் வல்லுநர்களாகவோ அல்லது பட்டதாரியாகவோ வெளியேறும் வாய்ப்பினைப் பெறுகின்றான் - என்றார். (ப)




# கலை,கலாசாரத்தைப் பற்றிப் பேசுகிறவர்கள் முதலில் முன்மாதிரியாக நடக்கவேண்டும்

## துர்க்கா மகளிர் ஆண்டு விழாவில் பல்கலை. விரிவுரையாளர்

வலி.வடக்கு,பெப்.19

கலை, கலாசாரத்தைப் பற்றிக் கூறுகின்ற நாங்கள் முதலில் முன் மாதிரியாக நடந்து கொள்ளவேண்டும். இன்று பாடசாலைகளுக்குப் பிள்ளைகளைக் கூட்டிவரும் தாய்மார்களைப் பார்த்தால் கழுத்தில் தாலி, நெற்றியில் குங்குமப் பொட்டு, காலில் மெட்டி ஆனால் உடையைப் பொறுத்தவரையில் கட்டைப் பாவாடைசட்டை அல்லது ஜீன்ஸ்-ரீசேட் இதுதான் அவர்களின் கலாசாரம்.

மேற்கண்டவாறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி கலைவாணி இராமநாதன் குறிப்பிட்டார்.

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 23 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் துர்க்கையம்மன் ஆலய அன்னபூரணி மண்டபத்தில் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய திருமதி கலைவாணி இராமநாதன்:-

பிள்ளைகள் இளம் வயதில் கலாசாரம் பிறழ்வுகளுக்கு உள்ளாகின்ற நிலைமை காணப்படுகின்றது. அதனைப் பெற்றோர்களும், ஆசிரியர்களும் தான் பொறுப்பேற்க வேண்டும். முதலில் வழிகாட்டிகளாக இருக்கவேண்டிய நாங்கள் ஒழுக்கமாக இருப்பதன் மூலமே பிள்ளைகளும் ஒழுக்கம் நிறைந்தவர்களாக வளரமுடியும்.

இங்கு அம்மா அவர்கள் தன்னிடம் வளரும் பிள்ளைகளுக்கு கல்வி, கலாசாரத்துடன் சமூக அந்தஸ்த்தையும் வழங்கி வருகின்றார். ஒரு குழந்தைக்கு தாயாக இருந்து வளர்த்தெடுப்பதே பெரும்சிரமம். இந் நிலைமையில் பல குழந்தைகளுக்கும் தாயாகவிருந்து சமயப்பண்புகளுடன் சீரான முறையில் வளர்த்தெடுப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

எந்தவொரு செயலிலும் போதிப்பவர்களாக இருக்கின்ற நாம் முன்னோடிகளாக இருக்க வேண்டும். அந்த வகையில் அன்னை அவர்களும் முன்னோடியாக நடந்துகொண்டு போதித்தும் வருகின்றார். பிள்ளைகளையும் கூட சிறந்த கல்வியியல், ஒழுக்கவியல் பண்பாடாளராகவும் வளர்த்துக்கொண்டும் வருகின்றார்.



எமது கலாசாரத்தை மேலை நாட்டவர்களுக்கு கற்றுக்கொடுப்பதன் மூலம் மேலை நாட்டவர்களின் தொழில்நுட்பத்தைக் கற்றுக் கொள்ளவேண்டும். சுனாமி அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட சேதங்கள், இழப்புக்கள் எனப்புறக் கட்டுமானங்கள் மெல்ல மெல்ல கட்டியெழுப் பப்படுகின்றன.

இதே நேரம் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களின் அகக் கட்டுமானத்தை எவ்வாறு கட்டியெழுப்ப முடியும் என்பதையிட்டும் சிந்திக்க வேண்டும். நொந்து, தளர்ந்து, வாடிவதங்கி வாழ்கின்றார்கள். அவர்களுடன் நாம் பேசமுயன்றாலும் அவர்கள் பேசத்தயார் இல்லாத நிலைமையே காணப்படுகின்றது.

பிள்ளைகளை வளர்த்தால் மட்டும் போதாது. அவர்களைச் சிறந்த கல்வி, கலாசார பண்பாடு உடையவர்களாகவும் வளர்க்கவேண்டியதும் அவசியமாகும்.

இன்று பெரியவர்களை சிறியவர்கள் வெளியால் மதிப்பது குறைவு. கல்வியறிவு எமக்கு வேண்டும்தான் அதேநேரம் மூத்தோர்களின் அனுபவத்தையும் நாம் பெற்றுக்கொள்ள வேணடும். பாடம் படித்தோம் என்று கூறுவதிலும் பார்க்க பாடம் கற்றோம் என்ற நிலைமை கூடிய பயன்பாடு உடையதாக அமையும் என்று கூறினார்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தனது தலைமை உரையின் போது. இன்று எமக்கு வங்கிகளில் போதியளவு நிதி நிரம்பி வழிகின்றது. அந்தளவுக்கு அன்பர்கள் எமது செயல்பாட்டிற்கு வேண்டிய நிதி உதவிகளைச் செயது வருகின்றார்கள். கடந்த மாதம் எம் மண்ணில் ஏற்பட்ட அனர்த்தம் எம் உள்ளத்தைவிட்டு நீங்கமாட்டாது. பலர் மறைந்துவிட்டார்கள், பலர் நிர்க்கதியாகி உள்ளார்கள். இம் மக்கள் இன்று குடிசைகளில் வாழும் நிலைமை கூட ஏற்பட்டுள்ளது.

காலத்தின் தேவை உணர்ந்து எம்மால் செய்யக் கூடிய உதவிகளைச் செயதுள்ளோம். இந்த வகையில் நாம் 3 லட்சம் ரூபாவை கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கியுளளோம். இதில் எமது பகுதியில் கடல் அனர்த்தத்தினால் மரணம் அடைந்தவர்களுக்கு பத்தாயிரம் ரூபா வீதம் வழங்கியுள்ளோம். இன்னும் ஒரு தொகையை வழங்குவதற்கு ஒதுக்கியும் உள்ளோம்.

எமது நிலையத்தின் பிள்ளைகள் பாடசாலை மட்டம் முதல் தேசிய மட்டம் வரை பல்வேறு போட்டிகளிலும் கலந்துகொண்டு தமது திறமைகளை வெளிக்காட்டி வருகின்றார்கள். இதுடன் பல்கலைக்கழகத்திலும் அனுமதிபெற்றுக் கல்வியிலும் முன்னேறிவருகின்றார்கள். என்னால் உண்மையில் நடக்கமுடியாத நிலைமையே காணப்படுகின்றது. நான் நடக்க எழுந்தால் பிள்ளைகள் ஓடிவந்து பிடித்து என்னை நடக்கச் செய்கின்றார்கள். பிள்ளைகள் மிகவும் கண்ணியத்துடன் வாழ்ந்து நிலையத்தின் பெயரையும் மதித்து நடந்து வருகின்றார்கள் எனவும் குறிப்பிட்டார்.

மற்றும் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர் செல்வி சி.கெங்காமலர் தேவி, முன்னாள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சமூக மருத்துவத்துறைத் தலைவர் வைத்திய கலாநிதி க.சிவராசா உட்பட மேலும் பலர் உரையாற்றினார்கள். (ப-86)

# எமது கல்வியை வளர்த்து புத்திஜீவிகளை உருவாக்குவோம்

## வலி.மேற்கு அரசியல்துறைப் பொறுப்பாளர்

வலிகாமம்தெற்கு,பெப்.19

தரப்படுத்தல், போர் பாதிப்பு என்பவற்றால் தமிழீழ மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து வருகிறது. எமது அழிக்கமுடியாத ஒரே சொந்தமான கல்வியை வளர்த்து, புத்திஜீவிகள் பலரை உருவாக்க வேண்டிய பொறுப்பு எம்மை எதிர்நோக்கியுள்ளது - என சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய வலிகாமம் மேற்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் அ.அன்பு கூறினார்.

கல்லூரி அதிபர் வேணுகா சண்முகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வலிகாமம் கல்விப்பணிப்பாளர் திருமதி ஆர்.இருதயநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அரசியல் பொறுப்பாளர் அ.அன்பு தமது உரையின்போது மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ்மக்களின் கல்வித்தரம் அதி உச்ச நிலையில் ஒருகாலத்தில் இருந்து வந்துள்ளது. ஆனால், இன்று கல்வி திட்டமிட்ட வகையில் அழிக்கப்பட்டு சீரழிக்கப்பட்டு வருகின்றது. கல்வியை சீரழிப்பதன் மூலம் ஒரு தேசிய இனத்தையே அழிக்கமுடியும் என்ற நோக்கில் இடம்பெற்று வரும் இச்செயற்பாடுகளுக்கு நாம் இடம்கொடுக்கக் கூடாது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நீண்டகாலமாக நிலைகொண்டிருக்கும் படையினரால் எமது கல்விச் செல்வம் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகிறது, சமுதாயத்தைச் சீரழிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை நாம் அனுமதிக்கக்கூடாது.

விடுதலைப் போராட்ட காலத்திலும் கூட எமது தமிழ் மாணவர்கள் கல்வியை இழந்து விடக்கூடாது என்பதற்காக தமிழீழ கல்விக்கழகத்தை ஏற்படுத்தி அதன்மூலம் கல்வி வளர்ச்சிக்கு உதவி வருகிறோம். எமது போராட்டத்தில் இணைந்து கொண்டு இன்று கல்வி சமுதாயத்தில் இருந்து கல்வியை வளர்த்து வரும் இளைஞர் - யுவதிகளுக்கு கல்வியோடு பீரங்கிகளைப் பாவிப்பது தொடக்கம் விமானம் ஓடக்கூடிய பயிற்சிகளையும் வழங்கிவருகிறோம் என்று கூறினார்.

சங்கானைக் கல்விக்கோட்ட பணிப்பாளர் நா.சண்முகசுந்தரம், தெல்லிப்பழை கல்விக்கோட்ட பணிப்பாளரும் கல்லூரியின் முன்னாள் அதிபருமான ச.கைலாசநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ப-152)

# மனிதத்துவத்தை நெறிப்படுத்த சகலருக்கும் தத்துவார்த்தக் கல்வி தேவை



யாழ்ப்பாணம்,பெப்.19

விரைவாக மாற்றம் பெற்றுவரும் உலகத்தின் செல் நெறிக்கேற்ப மனிதத்துவத்தை நெறிப்படுத்த சகலருக்கும் தத்துவார்த்தக் கல்வியியற் கண்ணோட்டம் தேவை. இதற்கான வழிகாட்டலை கீழைத்தேச தத்துவஞானியாக இருந்து தேச விடுதலையூடாக அகிம்சைவழியில் சாதித்துக் காட்டியவர் மகாத்மா காந்தியடிகள், இவ்வாறு தெரிவித்தார். கல்வியியற்கல்லூரி உப பீடாதிபதி பா.தனபாலன்,

அகில இலங்கை காந்திசேவா சங்கம் நடத்திய மகாத்மா காந்தி தினம் அண்மையில் நடைபெற்றது. அந்நிகழ்வில் கலந்து கொண்டு மேலும் பேசும்போது அவர் கூறியதாவது:-

தன்னிடத்தே பொதிந்து காணப்படும் சக்திகளை உணர்ந்து கொள்ளும்போதே தனிமனிதன் அடிமைப்படாத - இழிநிலைப்படாத - ஒருவனாக மாறலாம். இதன் வளர்ச்சியாக வாழ்வின் இறுதி உண்மையைப் பரம்பொருளை விளங்கிக்கொள்ளக் கூடிய ஒரேவழி கல்வி என்பதை அர்ப்பண சேவை மூலம் வாழ்ந்தும் காட்டியுள்ளார். இதைப் பாடமாக ஏற்று கல்வி அபிவிருத்தி நடைமுறைகளை விரைவாக்க ஆசிரியர்களும் கல் விச் சமூகமும் முன்வரவேண்டும்.

காந்தியடிகளின் தத்துவார்த்தக் கல்விச் சிந்தனைகளை, செயற்பாடுகளைத் தெரிந்து அதன் வழி செல்லப் பலர் ஆர்வமாகியுள்ளனர். சத்தியம், சுதந்திரம், அகிம்சை எனும் ரீதியில் கட்டப்பட்ட புனிதமான கோபுரமாக அது அமைந்துள்ளது. அவற்றைப் படிக்கும் போதும் வாழவில் பிரயோகிக்கும் போதும் புரிந்துணர்வும் தெளிவும் ஏற்படும். மனிதவாழ்வின் அர்த்தத்தை, தத்துவத்தைத் தெரிந்துகொள்ளமுடியும். பொதுஜன ஊடகங்களும் இதற்குச் செல்வாக்குச் செலுத்தமுடியும்.

விரைவாக மாற்றமடையும் உலகச் செல்நெறிக்கேற்ப மனிததத்துவத்தை நெறிப்படுத்துகையில் சகலருக்கும் தத்துவார்த்தக் கல்வியியற் கண்ணோட்டம் தேவை. இதற்கான வழிகாட்டல்களைக் கீழைத்தேய தத்துவஞானியாக இருந்து, தேசவிடுதலையினூடாக அகிம்சா வழியில் சாதித்துக்காட்டியவர் மகாத்மா காந்தியடிகள்.

அவரது கருத்துக்கமைய மனிதனின் இறுதி நோக்கம் உண்மைக்கும் இறைவனுக்குமிடையிலான தொடர்பை உணர்ந்து கொள்வதே. இறைவன் என்பது உண்மையன்றி வேறல்ல. உடல் ரீதியாக வேறுபட்டிருப்பினும் மனிதர்கள் அனைவரும் ஒரே ஆன்மாவையே கொண்டுள்ளனர். இறைவன் என்பது அன்பு, உண்மையின் பேரொளி, உண்மையின் மெய்ப்பொருளே. இறைவன் மனிதர்களதும் கல்வியினதும் இறுதிப் பேறாக அமையவேண்டியது மெய்ப் பொருளை விளங்கிக் கொள்வதே.

இந்த உண்மையை அடையக் கூடிய வழி அகிம்சையே. கல்வி, அரசியல், சமூகம் போன்ற சகல நடவடிக்கையிலும் அகிம்சாவாதம் மூலம் இறைவனை விளங்கிக்கொள்வதே மனிதத்துவத்தின் நோக்கமும், முழுப்பயனுமாகும் - என்றார்.

(ப-111-204)

வெளிநாடுகளில் நீங்கள் உழைக்கும் பணத்தினை மக்கள் வங்கியினூடாக தாய்நாட்டிற்கு அனுப்பி இலட்சக்கணக்கில் பரிசுகளை வெல்லுங்கள்.



வெளிநாட்டு பண அதிர்ஷ்ட சீட்டிழுப்பு
Foreign Remittance Lucky Draw

நீங்கள் இவ்வாறு அனுப்பும் ஒவ்வொரு ரூ. 10,000 க்கும் வெளிநாட்டு பண அதிர்ஷ்ட சீட்டொன்று பணத்தினை பெற்றுக்கொள்பவருக்கு கிடைப்பதுடன், மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ரூ. 50,000 பெறுமதியான பரிசுகள் 10 தினை வெல்லும் சந்தர்ப்பம்.

வருட கடைசி சீட்டிழுப்பில் மேலும் இலட்சகணக்கில் பரிசுகள்.

1 வது பரிசு - ரூபா 2.5 மில்லியன்
2 வது பரிசு - ரூபா 1 மில்லியன்
3 வது பரிசு - ரூபா 500,000
ஒவ்வொன்றும் ரூபா 50,000 பெறுமதியான ஆறுதல் பரிசுகள் 47

மக்கள் வங்கி

உங்களுக்காக - நாட்டிற்காக


## வெங்காயச் செய்கையில் பாதிப்பு

வலிதென்மேற்கு,பெப்19

பண்டத்தரிப்பு, மாதகல், பெரியவிளான், சில்லாலை ஆகிய பகுதிகளில் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட வெங்காயச் செய்கையில் பனிப் பூச்சிகளின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால், வெங்காயப் பயிர்களின் நுனித்தண்டுகள் பழுப்படைந்து வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளதாக இப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். இதற்கான கிருமி நாசினியை விசிறியும் பலன் கிடைக்கவில்லை என்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தத் தைப்போக வெங்காயச் செய்கையில் இம்முறை பெரும் எண்ணிக்கையிலான விவசாயிகள் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ-135)

## துயர் பகிர்கின்றோம்

ஹாட்லிக் கல்லூரி அதிபர்

**திரு. வே.பத்மநாதன் அவர்களின் துணைவியார்**

**அமரர் நல்லம்மா**

அவர்களின் பிரிவு குறித்து பெருந்துயர் பெருகிடும்வேளை திரு.பத்மநாதனதும் அவர்தம் பிள்ளைகள், குடும்பத்தினரினதும் தாங்கொணாத் துயரில் நாமும் பங்குகொள்கிறோம்.

ஆத்மா சாந்தியடையவும் இறையருள் துணை நிற்கவும் வேண்டி, அதிபர் அவர்கள் மனவெறுமை நீங்கி, நிலையாமை பற்றித் தெளிந்து தேறிட வேண்டிநிற்கிறோம்.

ஹாட்லிக் கல்லூரிப்
பழைய மாணவர் மன்றம்
(தாய்ச் சங்கம்),
பருத்தித்துறை.

(சி-41057)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

20.01.2005 அன்று சிவபதமடைந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் (யாழ்ப்பாண மாவட்டம்) அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி இலட்சுமிப்பிள்ளை சுப்பையா**

அவர்களின் 31ஆவது நினைவு நாளில் எமது இதயம் நிறைந்த அஞ்சலியைச் செலுத்துவதோடு, அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பணியாளர்கள்,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(42266)(42)

## வேலையாள் தேவை

யாழ்.நகரிலுள்ள பிரபல விற்பனை நிலையம் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை. உடனே விண்ணப்பிக்கவும்.

**விளம்பர இல: 2506.**
**மே/பா.உதயன்**
**யாழ்ப்பாணம்.**

(C/41060)(42)

## மரண அறிவித்தலில் சிறு தவறு

நேற்றைய உதயனின் 11ஆம் பக்கத்தில் வெளியாகிய –

பண்டிதர் நாகமணி கந்தையா என்பவரின் மரண அறிவித்தல் விளம்பரத்தின் முதல் பந்தியில் – **18-02-2005** என்னும் திகதி பொருத்தமின்றித் தவறுதலாக இடம்பெற்றுவிட்டது.

தொழில்நுட்ப ரீதியாக ஏற்பட்ட இந்தத் தவறுக்காக வருந்துகின்றோம்.





TRIAD 13651

விபத்து ஏற்பட்டவுடனேயே அவ்விடத்திற்கு வந்து வாகனத்திற்கு ஏற்பட்ட சேதத்தினை சரியாக மதிப்பீடு செய்யும் எமது விஷேட சேவை. எந்தப்பிரதேசத்தில் விபத்து ஏற்பட்டாலும் உடனடியாக உதவக்கூடிய ஆற்றல்.

உங்களுடைய நஷ்டஈட்டை வழங்க எமக்கு பொலிஸ் அறிக்கை தேவையில்லை.

ஸ்ரீ லங்கா இன்ஷுரன்ஸ்

21, வோக்ஷோல் வீதி, கொழும்பு 02. தொலைபேசி: 2357457 பெக்ஸ்: 2447742
மின்னஞ்சல்: slic@srilankainsurance.com இணையத்தளம்: www.srilankainsurance.com

உங்களின் அடுத்த வாகன காப்புறுதியினை உங்கள் இல்லத்திற்கே வரவழைத்துக் கொள்ளவும் மேலதிக விபரங்களுக்கும் அழையுங்கள் (011) 2 357 357

## கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம்,பெப்.19

வல்வெட்டித்துறைப் பகுதியில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில்நுட்ப நிறுவனம் கற்றல் உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இலங்கை சிறுவர் பாதுகாப்பு அமைப்பின் உதவியுடன் கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறையிலுள்ள கிளைச் செயலகத்தில் வைத்து இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன. (த)

## வணிகர் கழகப் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.19

யாழ்.வணிகர் கழகத்தின் பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் 2மணியளவில் கழகப் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

கழகத்தலைவர் இ.ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட வர்த்தகசங்கங்களின் சம்மேளனத் தலைவர் மு.சுந்தரலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக வணிகர் கழக முன்னாள் தலைவர் இ.ஜெயசேகரன்,யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியப் பொறுப்பாளர் அ. சுதாஸ் ஆகியோரும் கலந்து கொள்வர். (த.12)

# காத்தான்குடியில் நேற்று முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

கிழக்கில் கரையோரத்தில் இருந்து 200 மீற்றர் தூரத்துக்கு மக்கள் குடியமர்வதற்கு அரசு தடையுத்தரவு பிறப்பித்துள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காத்தான்குடி நகரில் நேற்று முஸ்லிம்கள் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

காத்தான்குடி ஜாமியழ்ழாவிரீன் பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலிருந்து ஜும்ஆத் தொழுகையின் பின்னர் ஆரம்பமான எதிர்ப்புப் பேரணி காத்தான்குடி பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது. அங்கு ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றது.

"எமது நிலம் எமக்கு வேண்டும்", "எமது காணி களைப் பறிக்காதே", "அரசே தெற்கிற்கு ஒரு நீதி: வடக்கு - கிழக்குக்கு ஒரு நீதியா?" போன்ற கோஷங்களை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் முழங்கினர்.

காத்தான்குடி முஸ்லிம் மக்கள் செயலணி ஒழுங்கு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் பெரும் எண்ணிக்கையான முஸ்லிம்கள் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டத்தின்முடிவில் இந்த விடயம் தொடர்பாக சாதக பாதகங்களை விளக்கும் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. (த-க-12)

## கூட்டமைப்பு ஆதரவாளர்களுக்கான கருத்தரங்கு

தென்மராட்சி, பெப்.19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சாவச்சேரி தொகுதி ஆதரவாளர்களுக்கான கருத்தரங்கு இன்று காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி இராமலிங்கம் வீதியில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெறும்.

இன்றைய அரசியல் சூழ்நிலை பற்றிய கருத்தாய்வு உட்பட பல விடயங்கள் ஆராயப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் அறிவித்துள்ளார். (8-117-75)

## இரண்டாம் கட்ட உணவு முத்திரை விநியோகம்

தென்மராட்சி, பெப்.19

சுனாமி ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இரண்டாம் கட்ட உலர் உணவு முத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ள குடும்பங்களுக்கான உணவு முத்திரைகள் அந்தந்த கிராம அலுவலர்கள் ஊடாக வழங்கப்படுகின்றன. (8-117)

## திருத்தம்

நேற்றைய உதயனின் 10ஆம் பக்கத்தில் வெளிவந்த யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை மகளிர் குழுவின் அனைத்துலகப் பெண்கள் தினப் போட்டிகள் தொடர்பான விளம்பரத்தில்.

பாடசாலை மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகளில் கூட்டுறவு என்னும் விடயத்தில் பங்குபற்றுவோரின் தரங்களில் ஆண்டு 4,6 என்று இருப்பதை ஆண்டு 4, 5 வகுப்புகள் எனத்திருத்தி வாசிக்கவும்.


கவிஞர் மு.புஷ்பராஜனின்
மீண்டும் வரும் நாட்கள்
கவிதை நூல் வெளியீடு

காலம்: இன்று (19.02.2005) சனிக்கிழமை
நேரம்: மாலை 4.45
இடம்: திருமறைக்கலாமன்ற கலைத்தூது மண்டபம்

இந்நிகழ்வில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238,பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
திருமறைக்கலாமன்றம்
(சி-41077)(43-11-45)

Dialog GSM
டயலொக்
100/=, 400/=,1000/= விலைகளில் கையடக்க தொலைபேசி அட்டைகளையும் SIM இணைப்புக்களையும் மொத்தமாகவும் சில்லைறையாகவும் பெற்றுக்கொள்ள
kit
எந்நேரமும் உன்னுடன்....!
Sri Murugan
Tele Communication
& Agency Post Office,
303, K.K.S. Road, Jaffna,
T.P.:021 222 5392 , Fax: 222 3435.
(C41073) (43-11-45)

தொடரும் அதிரடி சலுகைகள்...
எமது நிறுவனத்தின் நிரந்தர வாடிக்கையாளர்களுக்கும், ஒரே தடவையில் பெருமளவு புகைப்படச்சுருள்களை பிரதியாக்கம் செய்வோருக்கும் .....!
4 x R - ரூ.8/75 சதம்
எமது சேவை நேரம் காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணிவரை.
மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்
மானிப்பாய்.
T.P.021 222 2884
(சி-41074)(43-11-45)

A/C CAR
Available for Luxary
Drive For VIP'S
for short Runs
T.P.0777 283795
(சி-41070)

தேவை
யாழ்.மாநகர எல்லைக்குள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் ஒன்றிற்கு சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.
* அனுபவம் வாய்ந்த சாரதி ஒருவர் தேவை. வயதெல்லை 35-60
தொடர்பு: நாகவி கிறீம் ஹவுஸ்
133/10,K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:0776 413074
(42276)

லஷ்மி சினிமா இணுவில்

பிரசாந், சினேகா, வடிவேல் நடித்த
ஆயுதம்
தினசரி: 11.00, 3.00, 7.00

மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு இளையதளபதி விஜய் (சிறப்பு தோற்றம்), நமீசா, ரவிகிருஷ்ணா, ரம்பா நடித்த

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
ரஜனி, அம்பிகா, சத்தியராஜ் நடித்த
நான் சிகப்பு மனிதன்
காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00. (பு.நே.)
(C/40667)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
குளிரூட்டப்பட்டது.
15. 02. 2005 முதல் அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க
தினசரி: 10.30. 2.30. 6.30.9.30. (பு.நே.)
காதல் என்னும் திரை ஓவியம் திரையிடப்பட்டுள்ளது.
டைடானிக் மறுஅறிவித்தல் வரும்வரை காண்பிக்கப்படமாட்டாது.

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

5 ஆவது வெற்றி வாரம்
தனுஸ், ஸ்ரீதேவி, கருணாஸ், கபாலி, குணால், நாசர் நடித்த
தேவதையைக் கண்டேன்
தினசரி 11.00. 3.00. 7.00. (பு.நே.)
21 ஆம் திகதி முதல் விஜய், திரிஷா நடித்த
திருப்பாச்சி
(C/39654)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
அஜித், திரிஷா, மணிவண்ணன், விசு நடித்த

ஜி
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)


## ஈரவிழிகளுடன் 4ஆம் ஆண்டு



**கப்டன் யாழ்வேந்தன் (பிரியன்)**

(இராசரட்ணம் பிரசன்னவதனன்)

வீரப்பிறப்பு:28.06.1976 வீரச்சாவு:19.02.2001

வதனா உன் வாழ்வு பாலைவனச் சோலை
ஆகும் என்றிருந்தோம்
ஆனால், நீயோ பாதி வயதினிலே விண்ணிலே
கலந்துவிட்டாய்
எண்ணிக் கலங்கும் இதயங்கள்
எத்தனை எத்தனை நீ அறிவாயா?
குடும்பத்தின் சுடர் ஒளியாய் பாசத்தின்
உறைவிடமாய் புன்னகை பூத்த வதனா
ஏழு ஏழு ஜென்மம் எடுத்தாலும்
காண்போமா உன்னை.

காளிகோவிலடி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.
(42275)(43-11-45)

உன்பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, தம்பிமார், அக்கா, அத்தான், மருமகள் வைஷிகா மற்றும் உறவினர்கள்.


நல்லூர் புனித யாக்கோபு ஆலய 175 ஆவது ஆண்டு நினைவு
மலர் வெளியீட்டு விழா
காலம்: இன்று (19.02.2005) சனிக்கிழமை
நேரம்: மாலை 4.00மணி
இடம்: ஆலய மண்டபம்
தலைவர்: திரு.எஸ்.புத்திசிகாமணி
முக்கிய நிகழ்வுகள்
வரவேற்பு நடனம்: செல்வன் புத்திசிகாமணி கெனத் ஜெத்ரோ
இறைவேண்டல்: அருட்பணி இ.ஏ.ஜெயராஜ்
ஆசியுரை: அருட்பணி அ.ஸ்ரீபன்
பிரதம விருந்தினர் உரை: அருட்பணி எஸ்.பி.நேசகுமார்
சிறப்பு விருந்தினர் உரை: அருட்பணி தோமஸ் ஜோர்ஜ்
கௌரவ விருந்தினர் உரை: எஸ்.ஜே.இராஜநாயகம்
- திரு. என்.ஆர்.ஜீ.சுல்
நயப்புரை: திரு.சி.இராமலிங்கம்
மதிப்பீட்டு உரை: திரு.எம்.வித்தியானந்தநேசன்
மலர் ஆசிரியரின் ஏற்புரை: திரு.வி.பி.தனேந்திரா
செபம்: அருட்பணி ஆர்.ஜெயக்குமாரி
அன்புடன் அனைவரையும் அழைக்கிறோம்
மலர்க்குழு
புனித யாக்கோபு ஆலயம்,
நல்லூர்.
(42273)(43-11-45)


# மரண அறிவித்தல்கள்

## நீர்வேலி தம்பிப்பிள்ளை வேலுப்பிள்ளை (T.V.மாஸ்டர்)



நீர்வேலி மத்தியைச் சேர்ந்தவரும் பிரபல சமூக சேவகரும், முன்னாள் அதிபரும், பிரசித்த நொத்தாரிசுமான தம்பிப்பிள்ளை வேலுப்பிள்ளை அவர்கள் 15.02.2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பரஞ்சோதியின் அன்புக் கணவரும் அமரர் நகுலேஸ்வரி (பவா), விக்னேஸ்வரி (ஆசிரியை, கொழும்பு இராமநாதன் மகளிர் கல்லூரி), சகுந்தலேஸ்வரி, விக்னராசா (சுவிஸ்), குமரேசன் (பிரபல கணித ஆசிரியர் - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கந்தசாமி (பொறியியலாளர், நைஜீரியா), துரை எங்கரசு (அதிபர், இணுவில் மத்திய கல்லூரி), நந்தினி (சுவிஸ்), ரஞ்சனி (முன்னாள் ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமனாரும் கீர்த்திவாசன், சுபநேமி, அரணியா, அனந்தசயனன், அனந்தகஜன், மயூசித்தா, மாதேஸ், அனுஷாபானு, கேசவ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2005) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கணேசவாசா"
நீர்வேலி மத்தி
நீர்வேலி.

(42269)(43-11-45)

தகவல்:
திருமதி பரஞ்சோதி
(சோதியம்மா) மனைவி.

## திருமதி அஞ்சனேஸ்வரி இரவீந்திரகுமார் (ரவற்றி)



யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது தெகிவளையில் வசித்தவருமான திருமதி அஞ்சனேஸ்வரி இரவீந்திரகுமார் நேற்று (18.02.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இரவீந்திரகுமாரின் மனைவியும் புத்தளத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லத்துரை தம்பதியினரின் புதல்வியும் சசிராதா, துஷ்யந்தன், பிரசாந்த, நிகிலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் உதயகுமார், கோகிலரூபி ஆகியோரின் மாமியும் ஹனிதா, இலக்கியா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற திவ்வியரத்தினவேல், காலஞ்சென்ற இன்பேஸ்வரி மற்றும் புனிதேஸ்வரி, மங்களேஸ்வரி, விக்னேஸ்வரி,யோகேஸ்வரி, நிமலேஸ்வரி, சற்குணவேல், விக்னேஸ்வரவேல் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2005) சனிக்கிழமை கல்கிசை மகிந்த மலர்சாலையில் பி.ப 1 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கல்கிசை பொது மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

20/1, சுபோதராம வீதி,
தெகிவளை.
T.P: 011 2739159.

(சி-41059)(43-11-45)

தகவல்:
குடும்பத்தினர்.

## இராசதுரை தம்பிரத்தினம்

தெல்லிப்பழைகிழக்கைப் பிறப்பிடமாகவும் கச்சேரி - நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை தம்பிரத்தினம் அவர்கள் நேற்று (18.02.2005) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தவேஸ்வரியின் அன்புக் கணவரும் கோமதி (கனடா), தயாமதி (ஆசிரியை, யா/அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை), தயாளகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலச்சந்திரன் (கனடா), ரவிச்சந்திரன் (டுபாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தினேஸ், றொசாந் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.02.2005) வெள்ளிக்கிழமை 34/1,கச்சேரி - நல்லூர் வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

34/1, கச்சேரி - நல்லூர்வீதி,
யாழ்ப்பாணம்.

(47279)(43-11-45)

தகவல்:
த.தவேஸ்வரி
(மனைவி).

# வை கண்டித்த அரசின் செயலுக்கு ந்திரசேகரன் எம்.பி. கடும் எதிர்ப்பு

.சல்யன் கொலையைக் கண்டித்ததற் நா. செயலாளர் நாயகத்திற்கு இலங்கை தனது கண்டனத்தைத் தெரிவித்திருப் ; மலையக மக்கள் முன்னணித் தலை பெ.சந்திரசேகரன் காட்டமாக விமர்சித்துள் ார். அரசின் இந்தப் போக்கு தொடர்ந்தால் ஐ.நாவும், உலக நாடுகளும் புலிகளுக்கு ஆதர வாகக் குரல் கொடுக்க வேண்டிவரும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பாக சந்திரசேகரன் எம்.பி. விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு.-அம்பாறை அரசியல் பொறுப்பாளர் கௌசல் யனின் படுகொலையை ஐ.நாவின் பொதுச் செய லாளர் கோபி அனான் கண்டித்து அனுதாபம் தெரிவித்திருப்பதை ஜே.வி.பியும், அரசும் கண்டித்துள்ளன. இது அவலை நினைத்து உரலை இடித்த கதையாகவே உள்ளது. புலிக ளுடன் பேசுவதன் மூலம்தான் இனப்பிரச் சினைக்குத் தீர்வு ஏற்படும் என்று ஐ.நா. சபையும் சகல உலக நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன.

அதன் பின்னணியில்தான் ஐ.நா செயலா ளர் நாயகம் கோபி அனானும் கௌசல்யன் படுகொலையைக் கண்டித்துள்ளார். இதனைக் கூட ஜீரணித்துக்கொள்வதற்கு அரசும்,ஜே.வி. பியும் தயாரில்லை என்பதிலிருந்து சமாதா னத்தை விரும்பும் அனைத்து சக்திகளும், நாடுகளும் இனவாதத்தில் இந்த கட்சிகள் எவ் வளவு ஊறிக்கிடக்கின்றன என்பதனை புரிந்து கொள்ளவேண்டும் - என்றுள்ளது. (நு-க)

## புலிகளின் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பக்கமாக மீன் பிடிக்க ஒரு கூட்டத்தினர் சென் றனர் எனக் கூறப்படுகின்றது.

விடத்தல்தீவுப் பக்கத்தில் அவர்களை வழி மறித்த கடற்புலிகள் அவர்கள் அப்பிரதேசத்தில் டைனமற் வைத்து மீன்பிடிக்கிறார்கள் எனத் தெரிவித்து, அங்கு தொழில் செய்ய வேண்டாம் என வலியுறுத்தி அவர்களைத் திரும்பிச் செல் லும்படி பணித்தனர்.

கடற்புலிகள் எச்சரிக்கை வேட்டுக்களை யும் தீர்த்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அந்த வேட்டுக்களால் மீனவர்களின் படகுகளில் பொருத்தப்பட்டிருந்த சில இயந்திரங்கள் சேத முற்றனவாம்.

அதனையடுத்து தங்களது பக்கத்துக்குத் திரும்பிய பள்ளி முனை மீனவர்கள் வழியில் புலிகளின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட தோட்டவெ ளிப் பிரதேச மீனவர்களின் படகுகள் சிலவற்றை யும் தம்மிடம் பள்ளிமுனைக்குக் கொண்டுசென்ற னர் என ஒரு தகவல் தெரிவிக்கிறது.

இச்சம்பவத்தையடுத்து நேற்றுக்காலை பள்ளிமுனையில் இருந்துசென்ற ஒரு கூட்டத்தி னர் புலிகளின் மன்னார் அரசியல்துறை அலுவலகத்துக்குள் புகுந்து தளபாடங்களை அடித்துநொறுக்கி அட்டகாசம் புரிந்தனர்.

சற்றுநேரம் கழித்து பொலீஸார் அப்பகுதிக்கு விரைந்தனர். எனினும், பொலீஸாரை புலிகள் தமது அரசியல்துறை அலுவலகத்துக்குள் நுழையவிடாது ஆட்சேபித்தனர். "எமது மக்க ளுடனான பிரச்சினையை நாமே தீர்த்துக்கொள் வோம். நீங்கள் வரத்தேவையில்லை" - என அவர்கள் தெரிவித்தனர். பொதுமக்கள் சார்பிலும் அதேபோல் குரல் எழுப்பப்பட்டது.

அவ்வேளை அங்கு நடப்பவற்றை படம் பிடிக்க முயன்ற நீகன் என்பவர் பொலீஸாரால் தாக்கப்பட்டுள்ளார். இது குறித்துக் கண்காணிப்புக் குழுவுக்குப் புலிகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

கண்காணிப்புக் குழுவினர் சம்பவ இடத் துக்கு வந்து விடயங்களை நேரில் பார்வையிட் டனர். மன்னார் ஆயர் வண. இராயப்பு ஜோசப் ஆண்டகையும் சம்பவ இடத்துக்கு வந்து பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க உதவினார்.

பிணக்கு சுமுகமாகத் தீர்க்கப்பட்டுவிட்டது. நாம் வழமையான பணிகளைத் தொடர்கி றோம் - இவ்வாறு புலிகளின் அரசியல் துறையின் மன்னார் பிரிவு போராளி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (து-க)

## ஜனாதிபதியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிக்கு நேரில் எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான நட வடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் விஜயம் ரத்துச் செய்யப் பட்டமைக்கு இந்த எதிர்ப்புக்கள் காரணமா என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. அதேசமயம் பிறிதொரு சமயத்தில் ஜனாதிபதி யின் விஜயம் இடம்பெறலாம் என்று சில வட்டா ரங்கள் தெரிவித்தன. (ஐ-க-12)

## பத்திரிகைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு வழங்கப்படவேண்டிய நிவார ணப்பொருள்களை முடக்கி வைத்ததன் மூலம் அரசுக்குப் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தி யுள்ளனர். இந்த அதிகாரிகளுக்கு எதிராகக் கடு மையான நடவடிக்கை எடுக்கப்படும். பலர் ஏற் கனவே சேவையில் இருந்தும் இடைநிறுத்தப் பட்டுள்ளனர்.

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டவுடன் ஐக்கிய தேசியக் கட்சி அரசுடன் இணைந்து செயற்படுவதாக அறிக்கை விட்டது. ஆனால், பின்னர் அக்கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் இலங்கைக்கு உதவி செய்யவேண்டாம் என்று வெளிநாடுகளில் பிரசாரம் செய்கின்றனர். இவர் களை எப்படி நம்புவது?

இப்பொழுது எனக்கும் பெரும் தலையிடி யாக இருப்பது அரசசார்பற்ற தொண்டர் நிறு வனங்களே. நேர்மையான அமைப்புகளும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், பல தொண்டர் நிறுவனங்கள் வியாபாரம் செய்ய ஆரம்பித்துவிட்டன.

பல அரசசார்பற்ற நிறுவனங்கள் வெளி நாடுகளில் 60 கோடி அமெரிக்க டொலர் வரை நிதி திரட்டி உள்ளன எனத் தகவல் கிடைத்துள் ளது. ஆனால், இதில் ஒரு சதம்கூட இங்கு வந்துசேரவில்லை. இது தொடர்பாக விசாரணை கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இவை எல்லாவற்றையும் மிஞ்சிவிட்ட உள்ளூர் பத்திரிகைகள். நன்மையான விட யங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அதன் மறுபக்கத்தை வெளியிட்டு முழு நாட் டையுமே அவை குழப்பி அடிக்கின்றன. இத னால் நான் உள்ளூர் பத்திரிகைகளை வாசிப் பதையே நிறுத்திவிட்டேன். எனவேதான் இப் பத்திரிகைகள் என்மீது ஆத்திரம் அடைந்துள் ளன - என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட் டார். (ஐ-க)

## பஸ்ஸில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயமடைந்த இவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல் லப்பட்டார். அவசரசிகிச்சைப்பிரிவில் அவருக்கு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டது. எனினும், சிகிச் சையில் பயனின்றி நேற்று மாலை மரண மானார். சடலம் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனை என்பவற்றுக்காக யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக யாழ்.பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். விபத்தில் சம்பந்தப்பட்ட பஸ்ஸின் சாரதி பொலீ ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (து-12-15)

## அமெரிக்க கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளில் ஈடுபட்ட இக்கப்பலின் வருகை இலங்கைக் கடற்படையின் ஆழ்கடல் கண்காணிப்பு மற்றும் எதிர்ப்பு நடவடிக்கை களுக்கு உந்துசக்தியாக அமையும் என்றும் அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது. (து-க)

## தமிழ்ச்செல்வன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவதானித்தனர். அங்குள்ள அரசியல் மற்றும் சமூக அமைப்புக்களின் தலைவர்களையும் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளையும் சந்தித் துப் பேச்சுக்களையும் நடத்தினர். மட்டக்களப்பு விஜயத்தை முடித்துக்கொண்டு புலிகளின் கட் டுப்பாட்டில் உள்ள திருகோணமலைப் பகுதிக் கும் புலிகளின் குழுவினர் விஜயம் செய்தனர்.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் திரு கோணமலையில் இருந்து விமானப் படை ஹெலியில் புறப்பட்ட தமிழ்ச்செல்வன் குழு வினர், மாலை 4.30 மணியளவில் கிளிநொச் சியை வந்தடைந்தனர். புலிகளின் இந்த உயர் மட்டக் குழுவில் நீதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி, நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா, புலிகளின் மூத்த பிரமுகர் வே.பாலகுமாரன், பொன் தியாகம் ஆகியோரும் அடங்கியிருந்த னர். (ஐ-க-12)

## புகுமுக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர் என்றும் -

இதனையடுத்து இரு தரப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது எனவும் பின்னர்- சம்பவத்தை நேரில் பார்த்த எமது செய்தியாளர் தெரிவித்தார். பின்னர் சிரேஷ்ட மாண வர்கள் அங்கிருந்து சென்றுவிட்டனர்.

குறித்த வீட்டில்.தங்கியிருந்த புகுமுக மாண வர்கள் விவசாய பீடத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்பட்டது. எனினும் அவர்களுடன் தகராறில் ஈடுபட்டனர் என்றுகூறப்படும் மாண வர்கள் எந்தப் பீடத் தைச் சேர்ந்தவர்கள் என்பதை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

யாழ். பல்கலைக் கழகச்சுற்றாடலில்இடம் பெற்றுவரும் பகிடிவ தைச் சம்பவங்களு டன் தொடர்புடையதே இந்தச் சம்பவம் என்று கூறிய அப்பகுதிமக்கள் மேற்படி சம்பவம் தொடர்பாகக் கடும் விச னம் தெரிவித்தனர்.' (து-7)

## விவசாய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் கண் காணிப்புக்குழு அலுவலகப் பகுதிக்கு வந்த விவசாய சம்மேளனங்களின் ஒன்றியப் பிரதிநிதி களும் உறுப்பினர்களும் சுலோக அட்டைகளை யும் பதாகைகளையும் தாங்கியவாறு அலு வலகத்தின் பிரதான வாயிலருகே நின்றனர்.

அவர்களில் ஒருவர் அலுவலகத்தின் உள்ளே சென்று அங்குள்ள பிரதிநிதியிடம் மகஜரைக் கையளித்தார். கடந்த திங்கட்கிழமை தொடக்கம் தொடர்ச் சியாக நான்கு தினங்கள் பல்வேறு அமைப்புகளாலும் கண்டனப் பேரணிகள் நடத் தப்பட்டு வந்தமை தெரிந்ததே. ஆயினும் நேற் றுப் பேரணி எதுவும் இடம்பெறவில்லை.(10-7)

## வெட்டுக்காய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கழுத்தை அறுத்து தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தார் என்றும் ஒரு தகவல் தெரிவித்தது. - எனினும் அதனை ஊர்ஜிதம் செய்ய முடிய வில்லை. ஆஸ்பத்திரியில் அவருக்கு சிறைக்கா வலர்களின் காவல் போடப்பட்டிருந்தது. (து-12)

## மணல் விநியோக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்காக மீள்புனர்நிர்மாண வேலைகளை மேற் கொண்டுள்ள தன்னார்வத் தொண்டு நிறுவ னங்கள் மற்றும் அரச ஒப்பந்த அடிப்படையில் மீள்கட்டுமான, அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொண்டுள்ள நிறுவனங்களுக்கும் தேவைப் படும் மணலை நாளை மறுதினம் திங்கட் கிழமை முதல் விநியோகிக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது என்றும்

மணல் தேவைப்படும் மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனங்களை மாவட்டச் செயலகத்திலுள்ள உதவி அரச அதிபர் தலைமைப்பீடத்துடன் தொடர்புகொள்ளுமாறும் யாழ்.செயலகம் அறி வித்துள்ளது. (து-76)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரித்தது. ஆனால், தற்போது கிடைத்துள்ள விண்ணப்பங்களின்படி அது பத்து லட்சத்தைக் கடந்துள்ளது. எனவே, இந்த நிவாரண விட யத்தில் பாரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்றே நாம் கருதுகின்றோம். எனவே, உட னடியாக இது பற்றி விசாரணை செய்ய உயர் மட்டக் குழுவொன்றை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது. அதேவேளை, புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட நிவாரண முத்திரைகளில் கிளிநொச்சியிலி ருந்து 20ஆயிரம் முத்திரைகளும், முல்லைத் தீவிலிருந்து 23 ஆயிரம் முத்திரைகளும் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இந்த நேர் மையான செயலைப் பாராட்டுகின்றேன் என் றார் அவர். (ஐ-க)

மானிப்பாய் றோட்டறக்ட் கழகத்தின் அனுசரணையுடன்

U.K. இல் உயர் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புப் பற்றிய

மாபெரும் கருத்தரங்கு

காலம்: நாளை (20.02.2005) ஞாயிற்றுக்கிழமை

நேரம்: காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை.

இடம்: யாழ். வீரசிங்கம் மண்டபம்.

அனுமதிக்கட்டணம் ரூபா 100/=, பாடசாலை மாணவர்களுக்கு ரூபா 50/=

அனுமதிகளை நாளையதினம் மண்டப வாயிலில் பெற்றுக்கொள்ளலாம். (சி-41063)(30)

## மரண அறிவித்தல்கள்

### இராயப்பு இம்மனுவல்

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரா யப்பு இம்மனுவல் நேற்று (18.02.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மரியம்மாவின் அன்புக் கணவரும் சேவியர் (பிரான்ஸ்), வசந்தா, வனஜா (கனடா), வனிதா, காலஞ்சென்ற சேகர், அருட்தந்தை ஜோர்ச் (செ.தா) லூயிஸ் அன்ரனி, ஜோசப் அன்ரனி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்துக்கல்லூரி வீதி,
பண்டத்தரிப்பு. (42280)

தகவல்:
குடும்பத்தினர்.

### ஆறுமுகம் முருகேசு



காரைநகரைப் பிறப்பிடமாகவும் 27/6, செம்மணி வீதி, நல்லூரை வசிப்பிடமாகக் கொண்டவரு மாகிய ஆறுமுகம் முருகேசு (முன்னாள் தலைமை ஆசிரியர்) நேற்று (18.02.2005) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் புளோரன்ஸ் (ராசு), றோய்சத்தியேந் திரா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பா.அரு மைத்துரை (ஓய்வுபெற்ற ஊழியர், யாழ் போதனா வைத்தியசாலை) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.02.2005 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுத் தக னக்கிரியைகள் செம்மணி இந்து மயானத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

27/6, செம்மணி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(42281)

தகவல்:
ராசு (மகள்),
சுரேஸ் (பொறாமகன்),
கமலாதேவி.

புகைப்படம் பிடிப்பாளர்களுக்கு விசேட விலைக்கழிவு

KODAK EXPRESS
4R (புகைப்படச் சுருள்களுக்கு) ~~10.00~~ 9.00
12x36 ~~550.00~~ 400.00

KODAK EXPRESS இல் பிரதியாக்கம் செய்யும் அனைத்து Size களும் கொழும்பு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

KONICA NICE PRINT
4R (புகைப்படச் சுருள்களுக்கு) 8.00
4R CUT NEGATIVE PRINT 10.00

ஸ்ரீ டிஜிற்றல் கலர் லாப் & கொனிக்கா கலர் லாப்
14, ஸ்ரீ வெங்கடேசன் வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.
T.P. 021-222-3493 (C41046)

கீழ்வாத மூட்டு வீக்கம்

கீழ்வாத மூட்டு வீக்கம் குணப்படுத்த முடியாதது என உலகம் இதுவரை எண்ணியது. கீழ்வாத மூட்டு வீக்கம் வைரஸினால் உருவாகிறது. அதனை நாங்கள் வைரஸ் எதிர்ப்பு ஆயுள்வேத மருந்தினால் சந்தேகத்திற்கு இடமின்றிக் குணப்படுத்துகிறோம்.

மேலதிக விவரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்:

FAIR PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES) ABOLAPPROVED COMPANY
Level 5/ East Tower/1C, WORLD TRADE CENTER, COLOMBO - 01,
Phone: 5517897, 5551879, Fax: 5517756
E-mail: fppvtl@lankabellnet.com Website:www.fppvtl.org (சி-41069)

கணினிப் பயிற்சி நெறிகள்

- Diploma in Microsoft Office 2003
- Diploma in Desk Top Publishing
- Diploma in Internet & E-Mail
- Diploma in Vedio Mixing
- Diploma in Accounting Package
- Diploma in Hardware Engineering
- Diploma in Computer Programming
- Children Programming

ஆரம்பம்:-18-02-2005,19-02-2005

மேலதிக விபரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
இல. 07, பலாலி வீதி யாழ்ப்பாணம்.
T.P:- 021-222 3335, 0773 086716

கணனி வடிவமைப்பில்

றோணியோ பிறின்டிங் ஸ்கிறீன் பிறின்டிங்

பருவகால வெளியீடுகள், பற்றுச் சிட்டைகள், பாடப்புத்தகங்கள், விழா மலர்கள், விளம்பர அன்பளிப்புக்கள், வாழ்த்துமடல்கள், போட்டோ பிறின்டிங் வேலைகள், அழைப்பிதழ்கள், ஆய்வுக் கட்டுரைகள், நினைவுச் சுவடிகள், கலர் போஸ்ரர்கள், முதலானவற்றை கணனியில் வடிவமைத்து பிறின்டிங் செய்திடவும், பைண்டிங், லொமினேட்டிங், ஸ்டைபலிங் வேலைகளை தரமாகச் செய்து பெற்றுக் கொள்ளவும் நீங்கள் நாட வேண்டிய நம்பிக்கையான ஸ்தாபனம்

ஓவ்செற் பிறின்டிங்

ஜெய்ராம் JAYRAM PRINTERS பிறின்ரேஸ்
351, மணிக்கூண்டு வீதி,வெலிங்டன்சந்தி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 0712 569898,0776 072291

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.